# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32+ 4

சுடர் 32 | கதிர் 25 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 06, புதன்கிழமை 21.12.2016




## வெடிபொருள் கடத்திய மூவர் கைது

வவுனியா, டிசெ. 21
மதவாச்சியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியில் கடத்தப்பட்ட வெடிபொருள்களை மீட்டதோடு அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் 3 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் >> 29

## முற்றுப் பெறாத முதலமைச்சர் அமைச்சு மீதான விவாதம்

யாழ்ப்பாணம், டிசெ. 21
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் விவசாய அமைச்சு மீதான விவாதம் எடுத்துக் கொள்ளப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் திடீரென மாற்றப்பட்டு முதலமைச்சர் அமைச்சு மீதான விவாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த அமைச்சு மீதான விவாதம் முழுமை பெறாமல் இன்றுவரை ஒத்தி வைக்கப்பட்டது. >> 29

## போர்க்குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிமன்றத்தைக் கோரும்

# அறிக்கை பெறுவதை கடைசி நேரத்தில் ஒத்திவைத்தார் ஜனாதிபதி

### ஜனவரியிலும் பெறாவிட்டால் பகிரங்கப்படுத்த நல்லிணக்கச் செயலணி முடிவு

யாழ்ப்பாணம், டிசம்பர் 21
போர்க்குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிமன்றம் அமைக்கக் கோரும் நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இன்று கையளிக்கப்படவிருந்த நிலையில், கடைசி நேரத்தில் - நேற்று முன்னிரவு திடீரென அது >> 04

## எவ்.சி.ஐ.டி. தேவையா? அமைச்சரவை ஆராய்வு

*அடுத்த வாரமே இறுதி முடிவு*

கொழும், டிசெ. 21
பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவின் (எவ்.சி.ஐ.டி) பதவிக்காலம் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், >> 29

## கட்டட அனுமதியில் வடக்கில் ஊழல்கள்

யாழ்.பொலிஸ் விடுதிக்கும் அனுமதி பெறப்படவில்லை என்கிறார் தவராசா

யாழ்.டிசெ. 21
வடக்கு மாகாணத்தில் கட்டடங்களுக்கான அனுமதி வழங்குவதில் ஊழல் >> 04

*புதிய அரசமைப்பு*

## சம்பந்தனின் கருத்தை வரவேற்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, டிசெ. 21
புதிய அரசியலமைப்பு பொது வாக்கெடுப்பின் ஊடாகவே நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனின் கருத்தானது வரவேற்கத்தக்கது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற >> 29

## மீண்டும் ஆயுதம் ஏந்த தமிழர்கள் சிந்திக்கிறார்கள்

தொடர்ச்சியான ஏமாற்றமே காரணம் என்கிறார் அநுரகுமார



கொழும்பு, டிசெம்பர் 21
போர் முடிந்த பின்பும் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் அவர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருவதால், அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு >> 29

## தனி ஓர் இனத்துக்கு உரித்தானவர் அல்லர் வடக்கு முதலமைச்சர்

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டாகக் கருத்து

யாழ்ப்பாணம், டிசெ. 21
முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனித்து ஓர் இனத்துக்கோ மதத்துக்கோ உரித்தானவர் அல்லர். அவர் வடக்கு மாகாணத்துக்குப் பொதுவானவர். அவ்வாறுதான் முதலமைச்சர் செயற்படவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி சிங்கள - முஸ்லிம் உறுப்பினர்கள் கூட்டாகத் தெரிவித்தனர். >> 04

## ஊழல் புரிந்த உயரதிகாரி பறந்தார் வெளிநாட்டுக்கு

*பணி நீக்குவதற்கு நடவடிக்கை என்கிறார் வடக்கு அவைத் தலைவர்*

யாழ்ப்பாணம், டிசெ. 21
நெல்சிப் திட்டத்தில் மிகப்பெரிய ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஒருவர், தலைமைச் செயலரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். அவரை வேலையிலிருந்து இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. >> 29

## மைத்திரியின் விதி பற்றி சோதிடரின் காணொலி ஏற்படுத்திய பரபரப்பு

### பின்னணியைக் கண்டறிய விசாரணைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 21
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பாக வெளியாகியுள்ள சோதிடரின் ஜாதகக் கணிப்பின் பின்னணியைக் கண்டறிவதற்காக பொலிஸ் மா அதிபரிடம் அது தொடர்பான காணொலி கையளிக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சின் செயலாளர் நிமால் போபகே இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:
இந்த ஜாதகக் கணிப்பு உண்மைக்குப் புறம்பானது. இது தொடர்பான >> 29

## 2017 மேயில் உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, டிசெ. 21
2017ஆம் ஆண்டு மே மாதம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால >> 04

## இந்திய மீனவர் 7 பேர் கைது

யாழ்.டிசெ. 21
யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 7 பேர் கடற் படையினரால் கைது செய்யப்பட்டு மாவட்டக் >> 04

**எதிர்க்கட்சித் தலைவர் மோதலால்**

## வடக்கு மாகாண சபைக்கு வந்த 'கபாலி' திரைப்படம்

யாழ்ப்பாணம், டிசெ. 21
வடக்கு மாகாண சபையில் வழமையாக ஆளும் கட்சியினுள்ளேயே குத்துவெட்டு – மோதல்கள் இடம் பெறும். ஆனால் நேற்றைய தினம் வழமைக்கு மாறாக எதிர்க்கட்சிக்குள் கருத்து மோதல்கள் நடைபெற்றன. எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவின் உரையை, 'கபாலி' படத்துடன் ஒப்பிட்டு அவரது கூட்டணி உறுப்பினர் ஜவாகிர் உரையாற்றினார்.
வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் அமைச்சு மீதான விவாதம் நடைபெற்றது. விவாதத்தைச் சம்பிரதாயபூர்வமாக எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆரம்பித்து வைத்தார். அவரது உரையைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி சார்பில் உரையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் ஜவாகிர், >> 04

## மதகுவைத்த குளத்தில் பொருளாதார வலயம்

பணிகளை உடனே ஆரம்பிக்குமாறு வவுனியா மாவட்டச் செயலருக்கு கொழும்பு அமைச்சு அறிவிப்பு

வவுனியா, டிசெ.21
வவுனியா மாவட்டத்துக்கான பொருளாதார வலயத்தை அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மதகுவைத்த குளத்தில் அமைக்க நட >> 04

## புலிகளின் தலைவர்களைக் கைது செய்ய மகிந்த விரும்பவில்லையாம்

புதுடில்லி, டிசெ. 21
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் உயிருடன் இருப்பதை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விரும்பவில்லை என்று இந்தியா >> 04

## சிறப்பு அமைச்சுத் திட்டத்தால் தேசிய அரசுக்குள் குழப்பநிலை

*மாகாண சபைகளும் போர்க்கொடி*

கொழும்பு, டிசெ. 21
சிறப்பு அமைச்சர் ஒருவரை நியமிப்பதற்கு வழிவகுக்கும் அபிவிருத்தி சிறப்பு ஏற்பாடுகள் சட்ட வரைவுக்கு தேசிய அரசின் பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி போர்க் கொடி தூக்கியுள்ளது.
தனியொரு அமைச்சின் கீழ் அதிகாரங்கள் குவிக்கின்றதையும், அந்த அமைச்சு சார்ந்த விடயங்களைச் சட்டரீதியாகச் சவாலுக்குட்படுத்த முடியாத சர்வாதிகார >> 29

**முச்சந்தி முரளி**



முந்தியும் ஒருத்தர் சோதிடத்தாலதான் கவிண்டவர் பாருங்கோ...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவிராஜ் கொலை;

# முதலாவது சந்தேகநபருக்கு பிணை மறுப்பு

கொழும்பு, டிசெ. 21
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் மனுதாரர் தரப்பின் முதலாவது சாட்சியாளரான முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் பிருத்திவிராஜ் மன்னம்பேரிக்குப் பிணை வழங்குமாறு கோரப்பட்ட போதும் கொழும்பு மேல் நீதிமன்று பிணை நிராகரித்தது.

பிருத்திவிராஜ் மன்னம்பேரிக்குப் பிணை வழங்குமாறு சாட்சியாளர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, கொழும்பு மேல்நீதிமன்றில் அறங்கூறும் அவை முன்னிலையில் நேற்றுமுன்தினம் கோரிக்கையை முன்வைத்தார்.

அவருக்குப் பிணை வழங்குவதற் குச் சட்டமா அதிபர் சார்பாக பிரசன்னமாகியிருந்த பிரதி சொலிஸ்டர் நாயகம் ரோஹந்த அபேசூரிய ஆட்சேபனை தெரிவித்தார்.

ரவிராஜ் கொலை வழக்கின் சந்தேக நபராக முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் முதலில் பெயரிடப்பட்டிருந்தபோதிலும், அதன் பின்னர் சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட நிபந்தனையுடனான மன்னிப்பின் கீழ், அவர் அரசதரப்புச் சாட்சியாளராகப் பெயரிடப்பட்டார்.

கொலை வழக்கின் சந்தேகநபராகக் கைது செய்யப்பட்ட முன்னாள் கான்ஸ்டபிள் பிருத்திவிராஜ் மன்னம் பேரி கடந்த 21 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-4)

# தபால் ஊழியர்கள் போராட்டத்தால் மக்கள் அந்தரிப்பு

## நாடு முழுவதும் நேற்று சேவை செயலிழப்பு



யாழ்ப்பாணம், டிசெ.21
நாடு தழுவிய ரீதியில் தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள 48 மணித்தியால அடையாளப் பணிப் புறக்கணிப்புக் காரணமாக நேற்றுத் தபால் சேவைகள் செயலிழந்தன.

இதனால் முதியவர்கள் உட்பட மக்கள் நேற்றுப் பெரும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

தபால் ஊழியர்களில் 95 வீதமானோர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்க முன்னணியின் இணைத் தலைவர் சிந்திக பண்டார குறிப்பிட்டார். இந்த அடையாள பணிப்புறக்கணிப்புக் காரணமாக மத்திய தபால் பரிமாற்றத்தில் சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான தபால்கள் தேங்கியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ள தமது போராட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். நாட்டிலுள்ள சுமார் 3ஆயிரத்து 400 உப தபால் அலுவலகங்கள் மற்றும் 649 தபால்நிலையங்களில் 90 வீதமானவற்றின் சேவைகள் முடங்கியுள்ளதாகவும், சுமார் 21ஆயிரம் தபால் ஊழியர்களில் 95 வீதமானோர் நேற்றுச் சேவைக்கு சமூகமளிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு சில தேவைகளின் அடிப்படையில், சேவையில் ஈடுபட்டுள்ள ஏனைய ஐந்து வீதமான ஊழியர்களும் அடுத்த சில மணித்தியாலங்களின் பின்னர் சேவையிலிருந்து விலகுவார்கள் என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய 5 மாவட்டங்களிலும் உள்ள தபால் நிலையங்களிலும் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத் தபால் ஊழியர்களின் போராட்டத்தால் பல முதியவர்கள் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தபாலகத்துக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பினர்.

அதேவேளை, தபால் ரயில் மூலம் வடக்குக்குத் தபால்கள் எடுத்துவரப்பட்டன.

(து-21-6-7-10-17)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# தொழில்நுட்பபீடக் கற்கை அறிவியல் நகரில் ஆரம்பம்

## விளையாட்டு விஞ்ஞான பீடம் விரைவில்

யாழ்ப்பாணம், டிசெ. 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகரிலுள்ள வளாகத்தில் 10 ஆவது பீடமான தொழில்நுட்பபீட கற்கைநெறிகள் உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

11 ஆவது பீடமாக விளையாட்டு விஞ்ஞான பீடம் விரைவில் உருவாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி வளாகத்தில் ஏற்கனவே விவசாய பீடம் மற்றும் பொறியியல் பீடம் என்பன இயங்கி வருகின்றன. இந்த நிலையில் தொழில்நுட்ப பீடமும் இயங்க ஆரம்பித்துள்ளது. 5 பாடங்களைக் கொண்டதாக இந்தக் கற்கை உள்ளது.

நாடளாவிய ரீதியில் 23 மாவட்டங்களில் இருந்து 210 மாணவர்கள் இங்கு அனுமதி பெற்றுள்ளனர் என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தெரிவித்ததாவது:
யாழ். பல்கலைக்கழகத்தின் 10ஆவது பீடமாகத் தொழில்நுட்ப பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் எமது பல்கலைக்கழகம் மூன்றாவது நிலையில் தொழில்நுட்ப பீடத்தையும் ஆரம்பித்துள்ளது.

இங்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கான அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. முதலாம் வருட மாணவர்களுக்கான தங்குமிட வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் 525 மில்லியன் ரூபா செலவில் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன் பணிகள் நிறைவுற்றதும், பெரும்பாலும் இரண்டாம் வருடக் கற்கைகளை மாணவர்கள் தொடரலாம்.

தொழில்நுட்ப பீடத்துக்குக் கடந்த வருடம் 13 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வாங்கப்பட்டன. இந்த வருடம் சுமார் 120 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய இருக்கின்றோம்.

கிளிநொச்சி வளாகத்தில் 11 ஆவது பீடமாக விவசாய பீடத்துடன் இணைந்து விளையாட்டு விஞ்ஞான பீடத்தையும் ஆரம்பிக்கவுள்ளோம்-என்றார்.

இந்த நிகழ்வில் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி எஸ். சிறிசற்குணராஜா, தொழில்நுட்ப பீடங்களுக்கான தேசிய இணைப்பாளர் கலாநிதி ரி.ஏ. பியசிறி, பேராசிரியர் கே. கந்தசாமி, பொறியியல் பீட பீடாதிபதி அற்புதராஜா, விவசாய பீட பீடாதிபதி திருமதி ரி. மிகுந்தன், பதில் பதிவாளர் இராஜவிசாகன் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(து-4-35)

# பலாலியில் படையினருக்கான நில அளவீட்டை நிறுத்துக

## தெல்லிப்பழை ஒருங்கிணைப்பு கூட்டத்தில் நேற்றுக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 21
வலி. வடக்கில் படையினர் நிலைகொண்டுள்ள பலாலி உள்ளிட்ட பகுதிகள் படையினரின் தேவைக்காகச் சுவீகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள நில அளவைத் தடுத்து நிறுத்துமாறு தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நேற்றுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலகத்தில் இணைத் தலைவர் மாவை. சேனாதிராசா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே அங்கு சமுகமளித்திருந்த மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய இணைத் தலைவர், குறித்த கோரிக்கை உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும். வலி. வடக்கில் மேலும் சில பிரதேசங்களை விடுவிக்கவேண்டும் என்று ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோரைக் கேட்டுள்ளோம். அதன்படி மேலும் ஒரு பகுதி நிலங்கள் விடுவிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

இந்த இடங்கள் அடுத்த ஆண்டு ஜனவரி இறுதியில் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பிலும்நாம் முயற்சித்துவருகிறோம்-என்றார்.(து-101)

# தூதுவரின் கொலைக்கு மங்கள கடும் கண்டனம்

கொழும்பு, டிசெ. 21
துருக்கிக்கான ரஷ்யத் தூதுவர் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டமைக்கு அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

குறித்த ஒரு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜதந்திரிகளின் உரிமைகளை மீறும் வகையில் இந்தச் சம்பவம் அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

துருக்கித் தலைநகர் அங்காராவிலுள்ள கலைக்கூடமொன்றில் உரையாற்றிக்கொண்டிருந்த போது பின்னால் நின்ற பொலிஸ் அதிகாரியொருவர் ரஷ்யத் தூதுவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார்.

துருக்கிக்கான ரஷ்யத் தூதுவர் படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பில் தாம் அதிர்ச்சி அடைந்துள்ளதாக மங்கள சமரவீர கூறினார். (து-4)

# தமிழ்ச் சிப்பாய் விபத்தில் சாவு

முல்லைத்திவு, டிசெ. 21
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த தமிழ் இராணுவச் சிப்பாய் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பன் கிராமத்தைச் சேர்ந்த பொன்னையா சத்தியஜெயன் (வயது-24) என்பவரே உயிரிழந்தவராவார்.

பரந்தன்-புதுக்குடியிருப்பு வீதியில் கைவேலியில் உள்ள பாலம் ஒன்றிலேயே இவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். உடற்கூற்றுப் பரிசோதனைக்குப் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (து-4-7)



கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பொருள்களுடன் ஏ9 வீதியில் பயணித்த பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி உயரமுத்த மின்மார்க்கக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இதனால் மின்கம்பம் முற்றாக முறிந்து வீழ்ந்தது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை வவுனியா கனகராயன்குளம் பகுதியில் இடம்பெற்றது. எனினும் விபத்து சம்பவத்தில் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மது அதிகரிப்பால் முல்லைத்தீவில் குடும்பங்கள் அவதி

*சபையில் புவனேஸ்வரன் கன்னி உரை*

யாழ்ப்பாணம், டிசெ. 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரிக்கும் சட்டவிரோத மது காரணமாகக் குடும்ப வன்முறைகளும் அதிகரிக்கின்றன. அதனால் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் முன்னேற்றம் தொடர்பில் வடக்கு மாகாண சபை சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட உறுப்பினர் வெற்றிடத்துக்குப் புதிதாகத் தேர்வான உறுப்பினர் புவனேஸ்வரன் நேற்றுக் கன்னி உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்குப் பின்னர் அதிகரிக்கும் சட்டவிரோத மது காரணமாகக் குடும்ப வன்முறைகளும் அதிகரிக்கின்றன. இதன் காரணமாகக் குடும்பப் பிரிவுகள் அதிகரிக்கின்றன. அதனால் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையானது நீண்டு செல்கின்றது. இவர்களது முன்னேற்றம் தொடர்பில் மாகாண சபை சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் மாற்று வலுவுள்ளோரின் எண்ணிக்கை அதிகம் என்பதால் செயற்கை உற்பத்தி நிலையம் ஒன்றை வடக்கு மாகாண சபையே ஆரம்பித்து செயல்படுத்துதல் வேண்டும். அதேபோல் சிறப்புத் தேவையுடையோருக்கான சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பில் இந்தச் சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான நடவடிக்கையும் விரைவு படுத்தப்படவேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுவர்கள் பாடசாலை இடைவிலகல் அதிகரிக்கின்றது. இதற்கு ஓர் தீர்வு வேண்டும்-என்றார். (த-4-10)

# அதிசக்தி வாய்ந்த மோ.சைக்கிள் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 21

1200 சீ.சீ வேகம் கொண்ட அதிசக்தி வாய்ந்த மோட்டார் சைக்கிளொன்று பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டுள் ளது.

கடந்த அரசின் பலமிக்கவராக இருந்த நப ரொருவரின் மகன், இந்த மோட்டார் சைக்கிளை நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு, வாழைத்தோட்டம் பிரதேசத் தில் ஒளித்து வைக்கப்பட் டிருந்த நிலையில் இந்த மோட்டார் சைக்கிள் கைப்பற் றப்பட்டுள்ளது. பாதாளக் குழுவினரின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு இந்த மோட்டார் சைக்கிள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (த)

# தீர்வுக்கு யோசனை முன்வைக்கவில்லை கிழக்கு மாகாண அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, டிசெ. 21

இனப் பிரச்சினை தொடர்பாக மக்களின் உணர்வுகளைக் கிழக்கு மாகாண சபை முன்வைக்காது வரலாற்றுத் தவறைச் செய்துள்ளதாக கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை குற்றஞ்சாட்டினார்.

கிழக்கு மாகாண சபை அமர்வு தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் நேற்று 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாதம் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்துக்குத் தமிழ்ச் சமூகத்தின் சார்பாக வடக்கு மாகாண சபையில் யோசனையினை நிறைவேற்றி உள்ள சந்தர்ப்பத்தில் நமது இனப் பிரச்சினைக்கு ஒட்டுமொத்தமான தீர்வுக்கும், தீர்மானத்துக்குமான காலம் நெருங்கி வருகின்றது. இவ்வேளையில் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு ஒரு தீர்வுத் திட்ட யோசனை சமர்ப்பிக்குமாறுகோரி என்னால் இந்தச் சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணையை கிழக்கு மாகாண சபையால் நிறைவேற்ற முடியாத ஒரு வரலாற்று தவறினால் கிழக்கு மாகாண மக்களின் உண்மையான உணர்வுகளுக்கு கிழக்கு மாகாண சபை சந்தர்ப்பம் வழங்கவில்லை.

கிழக்கு மாகாண சபைக்கு அடுத்த ஆண்டு குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே கொழும்பு அரசிடமிருந்து கிழக்கு மாகாண சபைக்கு அதிகமான நிதிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவினால் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறை இன்று மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ள நிலையில் மாகாண சபைகளின் அபிவிருத்திக்கான நிதிகள் குறைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் ஊடாக ஒதுக்கப்படும் நிதிகளின்போதும், அபிவிருத்தி திட்டங்களின்போதும் இன விகிதாசாரம், வறுமை மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு நிதிப்பங்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சமூகங்களுக்கிடையிலான விரிசல்களைத் தவிர்த்து நல்லாட்சியை நிலைநிறுத்துவதற்கு முதற்கட்டமாக அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளையும் அரச துறை சேவை வசதிகள் மற்றும் வேலை வாய்ப்புகளையும் சகல சமூகங்களிடையேயும் உள்ளூர் பிரதேசங்களிடையேயும் சமமான வகையிலும் நீதியான முறையிலும் பகிரப்பட வேண்டியது கட்டாயம்.

அபிவிருத்தித் திட்டத் தெரிவுகளும் நிதி ஒதுக்கீடுகளும் பிரதேச, சமூக பகிர்வுகளில் சமத்துவம் என்பதை உறுதி செய்வதாக அமைய வேண்டும். இவ்வாறு செய்யாதுவிடின் சமூக மட்டத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். இவற்றில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடு என்பன உறுதி செய்யப்படுவதுடன் அபிவிருத்தி திட்டங்களில் சமநிலை பேணப்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களின் மனங்களை வெற்றி கொள்வதற்கான வேலைத் திட்டங்களைக் கிழக்கு மாகாண சபை மேற்கொள்ள வேண்டும்.

மாகாண சபைகளுக்கு உச்ச அதிகாரம் கோரி நிற்கும் வேளையில், மாகாண சபையிடம் இருந்த நிதி பெறும் அதிகாரம் சென்ற வருடம் கொழும்பு அரசினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட யோசனைக்குப் பின் கொழும்பு அரசின் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் பறித்தெடுக்கப்பட்டது. இது தொடர்பாக முதலமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டார்கள். இந்த நிதி அதிகாரத்தை மீண்டும் மாகாண சபைக்கு வழங்குவதாக வாக் குறுதிகள் வழங்கப்பட்டன. தற் போது நம்மிடம் இருந்த நிதி அதிகாரம் மீண்டும் கிடைத்துள்ளதா? என்பதனை முதலமைச்சர் தெரிவிக்க வேண்டும்.

பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலமையில் நாம் இன்றுள்ளோம். மாகாண சபைக்கு உச்ச அதிகாரம் வழங்க வேண்டும் என்று நாம் குரல் கொடுத்துவரும் இந்த சூழ்நிலையில் இருந்த அதிகாரத்தையும் கொழும்பு அரசிடம் தாரை வார்த்துள்ளோம்.

நாட்டில் போர் இல்லாமல் செய்யப்பட்டது போன்று இனவாதமும் இல்லாமல் செய்யப்பட வேண்டும். நல்லாட்சி அரசின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் இனவாத கருத்துக்களை பரப்புவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகளை ஜனாதிபதியும், பிரதமரும் மேற்கொள்ள வேண்டும்- என்றார். (த-4)

# அத்தியாவசிய பொருள்களின் விலை குறையும்

*அமைச்சர் ஜோன் நம்பிக்கை*

கொழும்பு, டிசெ. 21

அதிகரிக்கப்பபட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் நடவடிக்கை எடுப்பார்கள் எனச் சுற்றுலாத்துறை, கிறிஸ்தவ அலுவல்கள் மற்றும் காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

வத்தளைப் பிரதேசத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பிரதமருக்கும், நிதி அமைச்சருக்கும் நாம் அறியப்படுத்தியுள்ளோம்.அத்தியாவசியப்பொருள்களின் விலையைக் குறைத்து நிலமையை வழமைக்குக் கொண்டுவர அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.(த)

# பாடசாலைச் சீருடைக்கு வந்த போலி வவுச்சர்கள்

## கடை உரிமையாளர்கள் திண்டாட்டம்



கொழும்பு, டிசெ. 21

பாடசாலைச் சீருடைக்கான உத்தியோகபூர்வ வவுச் சர்களை, வங்கியில் மாற்றிக் கொள்வதற்குச் சென்றபோது, அந்த வவுச்சர்களில் நான்கு வவுச்சர்கள் போலியானவை என்றும், அவற்றை மாற்றமுடியாது என்றும் வங்கி முகாமையாளர் தெரிவித்தமையால் புடைவைக்கடை உரிமையாளர்கள் திக்குமுக்காடிப் போயுள்ளனர்.

இவ்வாறான சம்பவமொன்று, காலி பத்தேகம பகுதியில் இடம்பெற்றுள்ளது. அந்த வவுச்சர்களின் இரகசியக் குறியீட்டு இலக்கம் பிழையானது. பாடசாலையின் பெயர் என்று குறிப்பிடவேண்டிய இடத்தில், பாடசாலையின் இறப்பர் முத்திரையே இடவேண்டும். எனினும், ரத்துச் செய்யப்பட்ட வவுச்சர்களில் பாடசாலையின் பெயர், பேனாவினாலே எழுதப்பட்டுள்ளது. ஆகையினால், அந்த வவுச்சரை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அந்த வங்கியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதனால், தாங்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக பாதிக்கப்பட்ட புடைவைக்கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர். (த)

# ஜனவரி நடுப் பகுதியில் உயர்தரப் பெறுபேறுகள்

கொழும்பு, டிசெ. 21

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாகப் பரீட் சைகள் திணைக்கள ஆணை யாளர் நாயகம் டபிள்யு. எம். என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சையின், தொழில்நுட்பப் பாடத்துக்கான செயற்முறைப் பரீட்சையின் நடவடிக்கைகளுக்கு அதிக காலம் எடுக்க வேண்டியுள்ளமையே பெறுபேறு தாமதமாகக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு சுமார் 7 லட்சம் பரீட்சார்த்திகள் தோற்றியதனாலும், திணைக்களத்துக்குப் பெரும் பொறுப்புக்கள் சுமத்தப்பட்டிருந்தன. இதற்கு மத்தியிலேயே உயர்தரப் பெறுபேறு களையும் வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (த)

# வடக்கு ஆளுநர் அப்படி தெரிவிக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிரந்தர கப்பல் போக்குவரத்து அவசியமென்று ஒரு போதும் நான் தெரிவிக்கவில்லை. தென்னிந்தியாவில் நடைபெறும் திருவாதிரை நிகழ்வுக்கு ஒரு படகை ஏற்பாடு செய்துதருமாறே நான் அரசிடம் கோரிக்கை விடுத்தேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார். எனது கோரிக்கைக்கு இன்னும் அரசு பதில் தரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

'இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கப்பல் போக்கு வரத்தையோ அல்லது இரு நாடுகளுக்கு இடையிலான தடைகளை நீக்கும் முயற்சிகளையோ எனக்கு ஊடாக எவரும் முன்னேடுக்கவில்லை. இந்தியாவில் நடைபெறும் இந்துமத நிகழ்வான திருவாதிரை நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் என்ற கோரிக்கையில் வடக்கின் சிலர் என்னிடம் முன் வைத்தனர். அதனடிப்படையி லேயே அரசிடம் குறித்த கோரிக்கையை முன்வைத்தேன்' என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தன்கேணி சிவன் ஆலய தலைமை குருக்கள் விலகல்

சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் (சிவன்ஆலயம்) ஆலய பரம்பரைக் குரு வித்தியாசாகர சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் ஆலயத்தின் நித்திய பூசைகள் உள்ளிட்ட நடவடிக்கையில் இருந்து முழுமையாக விலகியுள்ளார். அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபையினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளைத் தொடர்ந்து ஆலயப் பணிகளில் இருந்து தான் விலகிச் செல்கிறார் என்பதை அவர் கடந்த 18ஆம் திகதி அறிவித்தார்.

நிர்வாகத்துக்கும் ஆலயக் குருக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து மோதல்களைத் தொடர்ந்து இந்த விடயம் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அவரது அறிவுறுத்தலின் பேரில் கிராம அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் வாசுதேவக் குருக்கள் தனது விலகலை அறிவித்தார். கடந்த பல தசாப்தங்களாக அவரது பரம்பரையினர் இந்த ஆலயத்தில் வாழையடி வாழையாக ஆன்மிகப் பணியாற்றி வந்தனர்.

வெறுமனே ஆன்மிகப்பணி மட்டுமன்றி சமூகப்பணி, கலைஞர்கள் உருவாக்கும்பணி, தொண்டுப்பணி, சமயப்பணிகளோடு முக்கிய பணியாகிய பூசைவழிபாட்டு பணியை முழுமையாக ஆற்றிவந்தவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவகுருக்கள்.

இதேவேளை வலி. மேற்கு பிரதேசத்தை சேர்ந்த ஆலயக் குருவின் இந்த அறிவிப்பால் அதிர்ச்சியடைந்துள்ள அந்தப் பிரதேசவாசிகள் பலர் குருக்களின் முடிவை மீள் பரிசீலனை செய்யுமாறு வலியுறுத்தி வருகின்றனர். (உ-50)

## தபால் ஊழியர் பிரச்சினைகள் தீர்க்கப்படுமாம்

யாழ்ப்பாணம், டிசெ.21

தபால் சேவை ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை முன்வைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித் தார்.

'ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி முன்வைத்துள்ள கோரிக்கைகள் நியாயமானவைதான். சில கோரிக்கைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (வ-5)

# வடக்கு பொதுச் சேவை ஆணைக்குழு மீது எம்.பி.சிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 21

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளை வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் முன்வைத்துள்ளனர். இதனால் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் ஆளுநரின் பங்குபற்றுதலுடன் கலந்துரையாடல் நடத்துவதற்கு கேட்டுள்ளதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. தலைமைச் செயலாளர் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. இதன் போது ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவின் பரிந்துரைகளை வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் தலைமைச் செயலாளர் அலுவலகம் என்பன பின்பற்றுவதில்லை என்று குற்றம் சுமத்தினார்.

குறிப்பாக மாகாண உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்படவிருந்த பரீட்சையை இடைநிறுத்துமாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவை, மாகாண பொதுமக்கள் முறைப்பாட்டுக்குழு கோரியிருந்தது. ஆனால் பொதுச் சேவை ஆணைக்குழு, பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவின் தீர்மானத்தைப் புறந்தள்ளி பரீட்சையை நடத்தியது. அதன் பெறுபேறையாவது நிறுத்தி வையுங்கள் (இந்தப் பெறுபேறு நேற்று மதியம் வெளியிடப்பட்டு விட்டது) என்று தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வாரம், பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கருத்துத் தெரிவித்திருந்த உறுப்பினர்கள், பொதுச் சேவை ஆணைக்குழு திறம்படச் செயற்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தனர். அங்கு மோசடி இடம்பெறுகின்றது என்றும் தெரிவித்திருந்தனர். (வ-5)

# இளைஞன் குத்திக் கொலை சகோதரர்கள் இருவர் கைது

*தற்செயலாக இடம்பெற்றது என விசாரணையில் தெரிவிப்பு*

பருத்தித்துறை, தும்பளை பகுதியில் சகோதரனை கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் சாவடைந்த இளைஞனின் இரண்டு சகோதரர்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

'பருத்தித்துறை, தும்பளை பெரியதம்பிரான் வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் சகோதரர்களிடையே ஏற்பட்ட மோதல் கத்திக்குத்தில் முடிந்தது. இதில் படுகாயமடைந்த சிவகுமார் சுவர்ணன் (வயது-19) என்ற இளைஞன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்பே சாவடைந்தார். இது தொடர்பான விசாரணைகளின் பின்னர் சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவே சகோதரர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றைய சகோதரர் நேற்றையதினம் சாவகச்சேரியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இவர்களிடம் நடைபெற்ற விசாரணைகளின் படி, இது தற்செயலாக இடம்பெற்றசம்பவம்என்பதுதெரியவருகின்றது. கத்தியை மாறி மாறி பறிக்கும் போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. விசாரணைகளின் பின்னர் இருவரும் இன்று பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர்' என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,109)

## இந்திய...

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தமிழகம் வேதாரணியத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள் 2 படகுகளுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 7 மீனவர்களும் காங்கேசன்துறை இறங்குதுறைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு மலேரியாவுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பிரதிப் பணிப்பாளரிடம் ஒப் படைக்கப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதிவான் உத்தரவிட்டார். (த-4-10)

## கட்ட...

நடைபெறுகின்றது என்பதைச் சுட்டிக் காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யாழ். பொலிஸ் நிலையத்தின் பின் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அவர் களது விடுதிக் கட்டடம் கூட அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சுமத்தினார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வீதிகள் குப்பை நிறைந்தவையாக இருக்கின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் இவை தொடர்பில் அக்கறை எடுப்பதில்லை. சட்டம் - ஒழுங்கு முதலமைச்சருக்கு உரியது. பொலிஸாருக்கு கட்டளை வழங்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. அதனை அவர்கள் ஏற்கின்றார்களா இல்லையா என்பதைப் பின்னர் பார்ப்போம். பல விடயங்களில் பொலிஸாரை நெறிப்படுத்த வேண்டி யுள்ளது. காணி அதிகாரம் எங்களுக்கு இல்லைத்தான். ஆனாலும் மேல் மாகாண சபை காணி நியதிச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. அவர்கள் அதனை நடைமுறைப்படுத்த மகிந்த அரசு அனுமதிக்கவில்லை. இருப்பினும் அவர்கள் செய்தது போன்று நாங்களும் செய்யலாம்.

கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் மாதாந்தம் நடைபெறுகின்றது. முதலமைச்சரின் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெறுவதில்லை.

பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதி தொடர்பில் தலைமைச் செயலர், சபைகளின் செயலருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். உறுப்பினர்களின் ஒதுக்கீட்டில் வழங்கப்படும் திட்டங்களை தொடர்புடைய உறுப்பினர்களுக்குத் தெரிவிக்காமல் செய்ய வேண்டாம் என்று எழுத்துமூலம் பணித்துள்ளார். ஆனாலும் சில பிரதேச சபைகள் அந்த ஒழுங்குகளைப் பின்பற்றுவதில்லை. பிரதேச சபைகளின் ஆலோசனைக் குழுக் கூட்டம் இப்போது நடைபெறுவதில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. தான்தோன்றித்தனமாகநடக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் கட்டடங்களுக்கான அனுமதி வழங்கும்போது ஒழுங்காகச் செயற்படுவதில்லை. இலஞ்சம் பெற்றுக் கொள்கின்றார்கள். ஊழல் நடக்கின்றது. யாழ். பொலிஸ் நிலையத்தின் பின்புறமாக அமைக்கப்பட்டுள்ள அவர்களின் விடுதிக்கு அனுமதி பெறப்படவில்லை.

பிரதேச செயலகங்களில் பணிபுரியும் மாகாண சபை அலுவலர்களை முதலமைச்சர்தான் நேரடியாக வழி நடத்தவேண்டும். அங்குள்ள பிரதேச செயலர் வழிநடத்த அனுமதிக்கக் கூடாது-என்றார். (த-5)

## தனி ஓர்...

வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சு மீதான குழு நிலை விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் செனவிரட்ண, வடக்கு மாகாண முதலமைச்சர் மாகாணத்துக்குப் பொதுவானவர். எங்களைப் பிரிக்கவேண்டாம். வவுனியாவில் உள்ள சிங்களப் பகுதிகளுக்கும் முதலமைச்சர் வரவேண்டும்-என்றார்.

இதேபோன்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஜவாகிர் உரையாற்றுகையில், வடக்கு மாகாண முதலமைச்சர் வடக்கில் உள்ள சகல இனங்கள் மற்றும் மதங்களுக்கும் பொதுவானவர். அவர் அதற்குரிய வகையில் செயற்பட வேண்டும் - என்றார். (த-5)

## வடக்கு...

நல்லாட்சி அரசு நடக்கவேண்டுமாக இருந்தால் எதிர்க்கட்சி பலமாக ஒழுங்காக இருக்க வேண்டும். நாம் கடந்த 3 வருடத்தில் அப்படியிருக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவ்வாறு செயற்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவரின் உரை, கபாலி படம் போல் அமைந்துவிட்டது. பெரும் எதிர்பார்ப்பில் இருக்க தோற்றுவிட்டது. எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சில் உண்மை வெளிவரவில்லை. தாள் பார்த்துப் பேசும் புதுமையை இன்று பார்த்தேன்.

எதிர்க்கட்சித் தலைவர், அத்திபாரத்தில் உள்ள குறைகளைப் பற்றி பேசாமல், மேலேயுள்ள பூச்சு, வர்ணத்தில் உள்ள குறைபாடுகள் பற்றிப் பேசினார் என்று குறிப்பிட்டார். (த-5)

## அறிக்கை...

ஒத்தி வைக்கப்[illegible]ளது. ஜனவரி மா[illegible] அறிக்கை கையளிப்பதற்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதமும் அறிக்கை கையளிப்பு நடைபெறாவிட்டால், குறித்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவதற்கு கலந்தாலோசனைச் செயலணி தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது.

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் குழு, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதிலும் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொண்டது. இதன் அடிப்படையில் 500 பக்கங்களைக் கொண்டதாக அறிக்கை தயாரிக்கப்பட்டது.

போர்க்குற்றம் தொடர்பில் பன்னாட்டு விசாரணையே நடத்தப்பட வேண்டும் என்ற முக்கிய பரிந்துரை உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகளை மேற்படி குழு முன்வைத்துள்ளது. இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சில வாரங்கள் கடந்துள்ளன. ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான நேர ஒதுக்கீட்டினாலேயே அறிக்கை கையளிப்பில் தாமதம் ஏற்பட்டது. இதுவரையில் மூன்று தடவை கள் நேரம் ஒதுக்கப்பட்டு இறுதி நேரத்தில் அவை ஒத்திவைக்கப்பட்டிருந்தன. இதே போன்று இன்றைய தினமும் கையளிப்பதற்கான நேரம் வழங்கப்பட்டு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் அறிக்கை கையளிப்புக்கு நேரம் வழங்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதமும் அறிக்கை கையளிப்பு இடம்பெறாவிட்டால், ஜனாதிபதியிடம் மேற்படி அறிக்கை கையளிக்கப்படாமல் நேரடியாக வெளியிடுவதற்கு ஆலோசனைச்செயலணிதீர்மானித்துள்ளதாக நம்பகரமாக அறிய முடிகின்றது. (வ-5)

## மதகுவைத்த...

வடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு வவுனியா மாவட்டச் செயலாளருக்கு கொழும்பு நகர அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட் டது.

வவுனியா மாவட்டத்தில் பொருளாதார வலயம் அமைப்பதற்காக நடப்பாண் டின் வரவு செலவுத்திட்டத்தில்

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் ஆரம்பிக்கபட்டன.எனினும் இடத் தெரிவில் ஏற்பட்ட இழுபறி நிலையால் அந்த பணிக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எவையுமே இடம்பெறாது தடைப்பட்டன. இவ்வாறு அமைக்கத் திட்டமிடப்பட்ட பொருளா தார வலயத்துக்கான காணி தாண்டிக்குளமா அல்லது ஓமந்தையா என்ற சர்ச்சை நீடித்த வேளையிலேயே மதகுவைத்தகுளம் பரிந்துரைக் கப்பட்டது. இதன் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட மதகுவைத்த [illegible]தற்கான அமைச்சரவைக் [illegible]வைப்பத் திரம் தயார் செய்யப்பட்டபோது, பொருளாதார மையத்தை ஓமந்தையில் அமைக்க மாவட்டத்தின் சகல தரப்பினரும் விரும்பி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பரிந்துரைத்தனர்.

இந்த நிலையில் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் குறித்த நிலையத்துக்கான பணிகளை மதகுவைத்தகுளம் பிரதேசத்தில் உடனடியாக ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## 2017...

சிறிசேன அறிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுடன் நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், எந்தச் சந்தரப்பத்திலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தத் தயார் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அண்மையில் தெரிவித்திருந்தார்.

தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இருப்பினும் இதற்கான பணிகள் இன்னும் முழுமையடையவில்லை எனவும், அதனால்தான் தேர்தல் நடத்துவதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், அடுத்த வருடம் மே மாதம் உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார். (வ-21)

## புலிகளின்...

வின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது, இந்திய அயலுறவுத்துறைச் செயலராகப் பணியாற்றிய சிவ்சங்கர் மேனன் எழுதி வெளியிட்டுள்ள நூலிலேயே (Choices: Inside the Making of India's Foreign Policy) இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

'எந்த வடிவத்திலான பன்னாட்டு நடுநிலையையும், போர்நிறுத்தத்தையும், விடுதலைப் புலிகள் விரும்பியிருந்தனர். எனினும், புலிகளின் தலைவர்கள் உயிருடன் இருப்பதையோ, விசாரணைகள் செய்வதற்காக அவர்களை கைதிகளாகப் பிடித்து வைப்பதையோ முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விரும்பவில்லை. அதன்மூலம், விடுதலைப்புலிகளின் தலைமை இன்னொரு போருக்குத் தயாராக முடியும் என்று மகிந்த ராஜபக்ச நம்பினார்' என்று சிவ்சங்கர் மேனன் குறிப்பிட்டுள்ளார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி முதல் நெடுந்தாரகை

யாழ்ப்பாணம்,டிசெ.21
நெடுந்தீவு மக்களின் சீரான கடற்போக்குவரத்துக்காக கொழும்பு டொக்யாட் நிறுவனத்தில் கட்டப்பட்ட புதிய படகான நெடுந்தாரகை எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் நெடுந்தீவுக்கான சேவையில் இணைந்துகொள்ளவுள்ளது.

இந்தப் படகு இன்னும் சில தினங்களில் இங்கு வந்து சேரும் எனவும் அநேகமாக 3ஆம் திகதியளவில் அது குறிகாட்டுவானைச் சேரும் எனவும் கூறப்படுகின்றது.

தற்சமயம் இந்தப் படகில் பணியாற்றத் தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கான பயிற்சிகள் கொழும்பு கடல் பகுதியில் இடம்பெறுகின்றன என்று நெல்சிப் திட்டத்தின் பெறுகை நிபுணர் பொறியியலாளர் வே.த. இராஜவரதன் தெரிவித்தார். (ற-7)

**2017 ஆம் ஆண்டிற்கான துணுக்காய் மல்லாவி பொதுச்சந்தை மல்லாவி கோழி இறைச்சிக்கடை, மல்லாவி மாட்டு இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலங்கூறல் அறிவித்தல்**

மேற்படிகடைகளுக்கான 2017.01.01 – 2017.12.31 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலங்கூறல் நடவடிக்கை கீழ் குறிப்பிடப்படும் விபரப்படி நடைபெறவுள்ளது.

**ஏலங் கூறும் இடம் :- துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்.**
**ஏலங்கூறும் நாள் :- 28.12.2016 மதியம் 12.00 மணிக்கு**

ஏலத்தில் பங்கு பற்றுவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000.00 செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் (குறித்த தினத்தில் குறித்த இடத்தில் மு.ப 8.30 மணிக்கு)
கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் ஏலத்தில் பங்கு பற்றத் தகுதியற்றவர்களாவார்கள்.
ஏலத்தில் தெரிவு செய்யப்படும் குத்தகையாளர் ஏலத் தொகையின் 1/3 பகுதியை உரிய வரிகளுடன் உடன் அலுவலகத்தில் பணத்தினைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டு அன்றைய தினமே அலுவலகத்தில் ரூபா 25 பெறுமதியான முத்திரைகள் இரண்டுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும். ஏலத்தில் பங்குபற்றுவோர் வதிவிடத்தை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடம் உறுதிப்படுத்தும் சான்றிதழுடன் தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க.தனபாலசிங்கம்
செயலாளர்
பிரதேசசபை, துணுக்காய்.

## இடையூறு விளைவித்த நபர் கைது

யாழ்ப்பாணம்,
டிசெ.21
கரவெட்டி இராஜ கிராமப் பகுதியில் நடைபெற்ற இணக்க சபை விசாரணையின் போது திடீரென்று உட்புகுந்த நபரொருவர் கதிரையால் தாக்கி அங்கிருந்த சபை அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ற-ரி,109)

**பகிரங்க அறிவித்தல்**


**மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆதனங்களின் பட்டியலை மக்கள் பார்வைக்கு விடுவதற்கான அறிவித்தல்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141 முதல் 146 வரையான பிரிவுகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ள மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்களின் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும் இவ் அறிவித்தல் 02.12.2016 திகதிய இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்பதையும் அறியத்தருகின்றேன்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விவரங்கள் சம்பந்தப்பட்டவர்கள் பார்வையிட்டு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் எதிர்வரும் 31.12.2016 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.** (சி.27095) (13.18)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




BCAS CAMPUS மூலம் 30.11.2016 இல்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
London South Bank University இன்
HNDBM பட்டத்தைப் பெற்றுக் கொண்ட எமது
சக ஊழியரான
**திரு.செல்லராசா அனுசுதன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஊழியர்கள்,
த பினான்ஸ் கம்பனி - யாழ் பிராந்தியம்.

**WHITE LOTUS CAMPUS**
**154, A1 Navalar Road, Jaffna.**
**T.p: 021 722 3773**

**O/L முடித்த மாணவர்களே !**

உங்கள் ஆங்கிலம், தகவல்தொழில்நுட்பம், தலைமைத்துவத்தை விருத்தி செய்ய அரிய வாய்ப்பு.

**துறைசார் வல்லுனர்களால் விசேடமாக வடிவமைக்கப்பட்ட எமது செயற்திட்டத்தில் இணைந்திடுங்கள்**

**காலம் - 1 மாதம்**
**கட்டணம் - 3000/=**

பயிற்சி முடிவில் பரீட்சை அடிப்படையில் முதல் இடம் பெறும் மாணவன்/மாணவி இலசவமாக **சிங்கப்பூர்** சென்றுவரும் அரிய வாய்ப்பைப் பெற்றிடுங்கள்.

**பயிற்சி முடிவில் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.**

**விண்ணப்ப முடிவுதிகதி 29.12.2016**

தொடர்புகளுக்கு:
**021 722 3773/ 077 622 3963**

**மிகக் குறைந்த செலவில்**

**CMA**
Certified Management Accountant

**முகாமைத்துவ கணக்காளர் (Management Accountant) தகைமையைப் பெற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு**

இலங்கையின் தேசிய முகாமைத்துவ கற்கைப்பிரிவும், கனடாவின் தொழில் முறைக் கணக்காளர் (CPA) கற்கைப்பிரிவும் இணைந்து வழங்கும் தொழில் சார் கணக்காளர் கல்வியை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்ய அரிய வாய்ப்பு

- ✷ இரு வருட தொழில் அனுபவம்/ A/L 3 பாட சித்தியுடன் ஆரம்பிக்க முடியும்.
- ✷ HNDA இறுதியாண்டு பூர்த்தி செய்தவர்கள்/ கணக்கீட்டு பட்டம் உடையோர் நேரடியாக இறுதி நிலை (strategic level) கற்கையில் இணைய முடியும்.
- ✷ ஏனைய தொழிற்கல்வி பயின்றோரும் பட்டமுடையோரும் பாட விலக்களிப்புகள் (exemption) பெற்றுக் கொள்ள முடியும்.
- ✷ ஒவ்வொரு அடைவு மட்ட முடிவின் போதும் சான்றிதழ் பெற முடிவதுடன் முதல் இரு மட்டங்களையும் தமிழில் கற்க முடியும்.

**WHITE LOTUS CAMPUS**
**154, A1 Navalar Road, Jaffna.**
**021 722 3773/ 077 932 4255/ 077 622 3963**

**University of Jaffna, Sri Lanka**
**FACULTY OF SCIENCE**

University of Jaffna will entertain applications upto **04.01.2017** from suitably qualified persons for the under mentioned posts **on Temporary basis**.

**FACULTY OF SCIENCE**

**Posts of Temporary Lecturer/Temporary Demonstrator in Botany**
**Posts of Temporary Lecturer/Temporary Demonstrator in Zoology**
**Posts of Temporary Lecturer/Temporary Demonstrator in Chemistry**
**Posts of Temporary Lecturer/Temporary Instructor in Mathematics**

**Qualification:**

1. A Degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;

   **OR**

2. A Degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;

   **OR**

3. (a) A Degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least second class honours and (b) a recognized postgraduate degree in the relevant subject.

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator/Temporary Instructor.**

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.
19.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



தோற்றம் 04 . 11 . 1970

மறைவு 18 . 12 . 2016

### திருமதி நிரஞ்சலா ஜெகசோதி

யாழ்ப்பாணம், ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் இல. 40, சுவர்ணா வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிரஞ்சலா ஜெகசோதி 18.12.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை ஜெகசோதியின் அன்பு மனைவியும் செல்வி சாருணிக்காவின் தாயாரும் ஜசிந்தனின் சித்தியும் காலஞ்சென்ற விவேகானந்தராஜா -தவமலர் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளுமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (21.12.2016) புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (591, காலி வீதி, கல்கிசை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (22.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 .00 மணிமுதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் நண்பகல் 12.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 40, சுவர்ணா வீதி,**
**கொழும்பு -06**

(C/ 27169)
(12,18)

தகவல்:
**சி. ஜெகசோதி(ஜெயம்)**
**ஜசிந்தன் (மகன்)**

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 15 . 12 . 1931

இறப்பு 19 . 12 . 2016

### சரவணமுத்து பொன்னம்பலம்

(மந்திரிமலை - நவக்கிரி)

யாழ். நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும், கொண்ட சரவண முத்து பொன்னம்பலம் 19.12.2016 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசநாயகம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பாக்கிய லட்சுமி(சின்னக்கிளி) அவர்களின் ஆருயிர்க் கணவரும், விஜயானந்தம் (கனடா), பரமானந்தம் (கனடா - Reginos Pizza), சர்வானந்தம் (கனடா), சிவானந்தம் (கனடா - Regi nos Pizza), விவேகானந்தா (கனடா - Reginos Pizza), ஜெகானந்தம் (உரும்பிராய்), காலஞ் சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், கன கம்மா, நடராஜா,சுப்பிரமணியம் மற்றும் செல்லம்மா (இலங்கை), இராசமணி (ஆஸ்தி ரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பத்மநிதி (கனடா), வரலட்சுமி (கனடா), பிறேமா (கனடா), யசிந்தா (கனடா), கலாநிதி (கனடா), சுலோஜனா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, கந்தையா (வல்லிபுரம்), ரத்தினம், சந்திராதேவி, நல்லைநாதன் மற்றும் தங்கம்மா (பிரான்ஸ்), சற்குணதேவி, கணேசலிங்கம், தனபாலசிங்கம், லீலாவதி ஆகியோரின் மைத்துனரும், நோமிலா, மேகலா, பிரதீப், பிரவீன், பிரபா, தமிழனி, திலீபன், ஜனனி, யசிகன், ஜனுசினி, யனுசன், ஜனா, சங்கர், வசந்தன், ராஜு, சச்சி, தீபன், சாலினி, ஹாசினி ஆகியோரின் பாசமிகு பேரனும் அனுஸ்ரா அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை கனடாவில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

**சிவன் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

(J/ 7009)
(14.17.18)

தகவல்:
**மகன் - ஜெகானந்தம்**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு : 077 774 3114**



பிறப்பு 10 . 10 . 1958

இறப்பு 17 . 12 . 2016

### இராஜப்பு மரியநாயகம் (செல்லக்கண்டு)

புதுக்குடியிருப்பு, 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரம், இரணைப்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜப்பு மரியநாயகம் (செல்லக்கண்டு) கடந்த 17.12.2016 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற இராஜப்பு- திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து (துரைமணி)- விசிறித்தம்மா (நேசமணி) தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெரல்டீனின் (ரதி) அன்புக் கணவரும் சாள்ஸ் சாந்திக்குமாரின் (குட்டி) அன்புத் தந்தையும் டலிமா(லண்டன்), டேவிற், செல்வநாயகம் (லண்டன்), மரிய கொறட்ரி, மேரி கொறட்ரி, அருள் நாயகம்(ஜேர்மனி), நேசநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வதனி (லண்டன்), கலா(லண்டன்), ரதி, குமார், நிசாந்தினி (ஜேர்மனி), அனிற்றா(பிரான்ஸ்), கலா , லோகநாதன் (பிரான்ஸ்), ஜெராட்(லண்டன்), றெஜீனா (பிரான்ஸ்),எட்வின் (பிரான்ஸ்), யூட்(லண்டன்), யோன்போல்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு நாளை (22.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று இரங்கல் திருப்பலி முற்பகல் 11.00 மணியளவில் இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இடம் பெற்று புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/6844)
(12,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 967 2525, 077 234 3272**



பிறப்பு 13 . 09 . 1939

இறப்பு 17 . 12 . 2016

### சச்சிதானந்தம் சிவநந்தன்

(நில அளவையாளர்)

யாழ்ப்பாணம், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தம் சிவநந்தன் 17.12.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் தவராணியின் அன்புக் கணவரும் கலாமதி, ரவிசங்கர், ரவிமோகன், சுரேஸ், நிவேதினி, வக்சலா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவநிதி, செல்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவபாலசூரியர், சோபிதா, சித்திரா, சீலா, குகராஜன், ரெட்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருந்தா, சுஜீவன், கௌதம், நிர்மலா, நிக்சிதா, ராகுல், ராகவி, அஜய், ஷமித்திரா, சகானா, அடானா ஆகியோரின் அன்புப் பேரனும் கஷோன், றேகன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை மு.ப 9.30 - மு.ப 11.30 மணி அளவில் Qstre gravlund Tvetenveien 7 Oslo Norway அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக Alfaset gravlund, Nedvekl bakkveigg 1081 Oslo, Norway இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சுரேஸ் (மகன்) நோர்வே : 04799458290**
**குகன் (மருமகன்) நோர்வே: 0047 99 246 686**
**நோர்வே வீட்டு இல : 0047 226 40066**
**ஜெயராஜன் (வவுனியா) : 077 038 1410**

(V/173)
(14.17.18)

தகவல்:
**தியாகராஜா**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு பன்னாட்டு விருது



கொழும்பு, டிசெ 21
இலங்கையில் சிறுநீரக நோய் தடுப்புக்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றும் பணியைப் பாராட்டி, சிறுநீரக நோய் நிபுணத்துவ மருத்துவர்களின் பன்னாட்டு அமைப்பு, ஜனாதிபதிக்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

கொழும்பு கோல்பேஸ் ஹொட்டலில், நேற்று இடம்பெற்ற நிகழ்விலேயே, இந்த விருது வழங்கப்பட்டது.

சிறுநீரக நோய் நிபுணத்துவ மருத்துவர்களின் பன்னாட்டு அமைப்பின் தலைவி பேராசிரியர் அடீரா லெவி இந்த விருதை வழங்கினார்.

இலங்கையிலுள்ள ஆதரவற்ற சிறுநீரக நோயாளர்களின் நலன்களுக்காக, அரசு முன்னெடுத்துவரும் செயற்றிட்டத்துக்கு, இந்த விருது பெரும் பலமாகும் என்பதனால், அனைத்து இலங்கை மக்கள் சார்பிலும் சிறுநீரக நோய் தொடர்பான மருத்துவ நிபுணர்களின் பன்னாட்டு அமைப்புக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார். (த)

# திருமலை மீது கண் வைக்கும் அமெரிக்கா

## எச்சரிக்கிறார் திஸ்ஸ விதாரண



கொழும்பு, டிசெ 21
கடற்படைத்தள விரிவாக்கத் திட்டத்துக்காகத் திருகோணமலைத் துறைமுகத்தின் மீது அமெரிக்கா கண் வைத்திருப்பதாக, முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாசக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்தப் பிராந்தியத்தில் தனது போர்த் தளங்களை விரிவாக்குவதற்காக திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இலங்கையை அமெரிக்கா வசப்படுத்தி வருகிறது. சுமார் 400 மில்லியன் டொலர் பெறுமதியான–அதிக விலையான போர் விமானங்களைக் கொள்வனவு செய்யுமாறும் இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருகிறது என்று குறிப்பிட்டார். (த)

## போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது

கிரான் பிரதேசத்தில் வைத்து போதை மாத்திரைக ளுடன் பிரயாணி ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். கல்முனை பிர தேசத்தில் இருந்து ஓட்டமாவடிப் பிரதேசத்துக்கு இளைஞர் ஒருவர் போதை மாத்திரைகளுடன் வருவதாக பொலிஸாருக்குக்கிடைத்ததகவலையடுத்துகுறித்தஇளைஞர்பிரயாணம்செய்தபஸ்ஸைகிரான் சந்தியில் வைத்து சோதனை செய்துள்ளனர்.

இதன்போதே சந்தேக நபரிடம் இருந்து 800 போதை மாத்திரைகளும், கஞ்சா 100மில்லிகிராமும்கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபரும் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (த)

## தேசிய ஒற்றுமை என்னும் தொனியில் சுதந்திரதினம்

கொழும்பு, டிசெ 21
இலங்கையின் 69ஆவது சுதந்திரதினத்தை தேசிய ஒற்றுமை எனும் தொனிப் பொருளில் கொண்டாடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்4ஆம்திகதிஇலங்கையின் 69ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ளது. இதனைக் கோலாகலமாக கொண்டாடு வதற்கு அரசு நடவடிக்கை மேற் கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.


இது தொடர்பான கலந்துரையாடல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை யில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

69ஆவது சுதந்திர தின நிகழ்வானது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிர தமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோர் தலைமையில் கொழும்பு காலிமுகத்திடலில்நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## தேசிய நத்தார் விழா நீர்கொழும்பில்

கொழும்பு, டிசெ 21
தேசிய நத்தார் விழா, நீர்கொழும்பு பதவிய பிரதேசத்தில் இடம்பெற ஏற்பா டுகள் செய்யப்பட்டுள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோரின் தலைமையில் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நீர்கொழும்பு புனித மரியாள் தேவாலயத்தில், இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (த)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி







தோற்றம்
02 . 07 . 1979


மறைவு
19 . 12 . 2016


# கனகரட்ணம் விஜயகுமார்

**(முகாமையாளர் - லிங்கன் கிறீம் ஹவுஸ்**
**213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)**

விஜயன் அண்ணா! என்று எல்லோரும் உன்னை அழைப்பார்கள்
அதிகாலையில் இன்முகத்துடன் கடைதிறக்க வருவீர்கள்
என எதிர்பார்த்த போது பேரிடியாய் வந்தது
உங்கள் மறைவுச் செய்தி

காலம், நேரம் பாராது எந்நேரம் அழைத்தாலும்
ஓடிவந்து உதவி செய்வீர்கள்
எங்கு சென்றீர்கள் எம்மைவிட்டு தொலைதூரம்
இறைவன் அழைத்தானோ தன் பணியை நீ தொடர......





நண்பனே! நோய் என்று நீ படுத்ததில்லை
உன்னோடு பேசியவர்கள் உள்ளம் - என்றும்
துன்முகத்தை நாடியதில்லை
இன்று மூடி வைத்த உன் முகத்தை நாங்கள்
கூடிவந்துகொண்டு செல்லும்
கொடிய நிலை ஏன் நண்பா?????

இதயங்கள் நொருங்க
இமைகளெல்லாம் நனைய
எங்களை தவிக்க விட்டு
எங்கே நீ பயணமானாய்.......... விஜயன் அண்ணா.

## லிங்கன் கிறீம் ஹவுஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர், ஊழியர்கள்**

# 2017 இல் வடக்கின் இறைவரி இலக்கு ரூ. 1000 மில்லியன்

## முதலமைச்சர் விக்கி நம்பிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 21

25 வருடங்களாகச் செயற்பட்டு வருகின்ற ஏனைய மாகாணங்களின் இறைவரித் திணைக்களங்கள் சிலவற்றைப் பின் தள்ளி, வடக்கு மாகாணம் தற்போது இறைவரி சேகரிப்பில் ஆறாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. 2017ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1000 மில்லியன் ரூபா என்ற இலக்கை வடக்கு மாகாண இறைவரித் திணைக்களம் எட்டும்.


இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சின் அமைச்சுக்கு உள்பட்ட திணைக்களங்கள் தொடர்பிலான முன்மொழிவை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'வடக்கு மாகாண இறைவரித் திணைக்களம் 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில் 894 மில்லியன் ரூபாவை அரசிறையாக சேகரித்துள்ளது.

இதில் இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து நவம்பர் வரையில் மாத்திரம் 674.5 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டது.

ஏற்கனவே 25 ஆண்டுகளாக செயற்பட்டு வரும் ஏனைய மாகாண இறைவரித் திணைக்களங்கள் சிலவற்றை பின்தள்ளி தற்போது இறைவரி சேகரிப்பில் மாகாண வரிசையில் ஆறாம் இடத்தில் இருந்து தொடர்ந்து முன்னேறி வருகின்றமை




யானது இந்தத் திணைக்களத்தின் செயற்றிறன் வாய்ந்த வரி நிர்வாகத்தை கோடிட்டுக் காட்டுகின்றது.

எமது திணைக்களத்தால் இந்த வருடம் மொத்த அரசிறை சேகரிப்பாக ஏறத்தாழ 750 மில்லியன் ரூபா இலக்கிடப்பட்டுள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை விட மும்மடங்கு அதிகமாகும்.

அடுத்த வருடம் ஏறத்தாழ 1000 மில்லியன் ரூபா என்ற இலக்கை நோக்கி எமது திணைக்களம் செயற்றிறனுடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபடும்' முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (5)





# பள்ளிமுனை மீனவர்களுடன் கடற்படையினர் தர்க்கம்

மன்னார், டிசெ. 21


மன்னார், பள்ளிமுனைக் கிராமத்தில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்று மீன்களுடன் கரை திரும்பிய படகு ஒன்றை சோதனையிட வேண்டும் என்று மறித்த கடற்படையினர், படகில் காணப்பட்ட மீன்கள் 'டைனமெற் வெடிபொருள்' மூலம் பிடிக்கப்பட்டவை என்று கூறி மீனவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர் என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் இடம்பெற்றது.

'மன்னார் பள்ளிமுனைக் கடற்கரையில் இருந்து நேற்று அதிகாலை 5 மணியளவில் நாங்கள் படகு ஒன்றில் மீன் பிடிக்க கடலுக்குச் சென்றோம். இதன் போது வேறு படகுகளிலும் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றிருந்தனர். எமது வலைகளில் பிடிபட்ட மீன்களைத்துடிக்கத்துடிக்க உயிருடன்படகில் ஏற்றி சந்தைப்படுத்துவதற்காக பள்ளிமுனைக் கடற்கரையை நோக்கி வந்தோம். பள்ளிமுனைக் கடற்கரையில் அமைந்துள்ள கடற்படை சோதனைச்சாவடிக்கு முன் காலை 9.30 மணியளவில் வந்தோம். எமது படகைத் தடுத்து வைத்த கடற்படையினர் படகில் உள்ள மீன்கள் 'டைனமெற் வெடிபொருள்' மூலம் பிடிக்கப்பட்ட மீன்கள் எனவும், அவற்றை சோதனை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

குறித்த மீன்கள் உயிருடன் காணப்படுகின்றன. அவற்றை வலையின் மூலமே பிடித்தோம் என்று கடற்படையினரிடம் தெரிவித்தோம். மீன்களை உரிய நேரத்திற்கு சந்தைப்படுத்தாது விட்டால் அவற்றை விற்பனை செய்ய முடியாது என்று அவர்களிடம் தெரிவித்தோம். கடற்படையினர் எமது படகில் பிடிபட்ட மீன்களை விடுவிக்கவில்லை. கடற்படை அதிகாரி ஒருவர் கடற்கரைக்கு வந்தார். பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர். கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்ட படகில் காணப்பட்ட சில மீன்களை எடுத்து கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் பரிசோதித்துப் பார்த்த பின் குறித்த மீன்கள் 'டைனமெற் வெடிபொருள்' மூலம் பிடிக்கப்படவில்லை எனத் தெரிவித்தனர். இதனை அடுத்தே மீன்களை கொண்டு செல்லுமாறு கடற்படையினர் அனுமதித்தனர்.

மீன்களை சந்தைப்படுத்த முடியாத நிலையில் அவற்றை அரை விலைக்கே விற்பனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் படகில் தொழிலுக்குச்சென்ற 5 மீனவர்களின் அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. கடந்த சில வாரங்களாக பள்ளிமுனை மீனவர்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். 'டைனமெற் வெடிபொருள்' மூலம் மீன் பிடிக்கின்றனர் எனக் கூறி சாதாரணமாக வலை மூலம் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் மீன்களையும் தடுத்து வைத்து மீனவர்களுக்குப் பல்வேறு அசௌகரியங்களை கடற்படையினர் தொடர்ந்தும் வழங்கி வருகின்றனர்' என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித்தனர். (வ-21,56)



கிளிநொச்சி, புளியம்பொக்கணைப் பகுதியில் பாண் விற்கும் வண்டி மூலம் விற்பனை செய் யப்பட்ட பாணில் வயரில் இருக்கும் கம்பி ஒன்று காணப் பட்டதாகக் கண்டாவளை பொது சுகாதாரப் பரிசோதகருக்கு பாதிக்கப்பட்டவர்கள் அறிவித்துள்ளனர். (வ- 6)

# வாள்வெட்டுக்கு இலக்காகி 2 இளைஞர்கள் படுகாயம்

வவுனியா, டிசெ.21

வவுனியா, மகாஇறைம்பைக்குளத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச்சம்பவத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

'வவுனியா, மகா இறைம்பைக்குளத்தில் நேற்று முன்தினமிரவு இரு அயலவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்த வாக்குவாதம் மோதலாக மாறி வாள் வெட்டுடன் முடிவடைந்தது. வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த 21, 27 வயதுடைய இளைஞர்கள் இருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன' என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21)

# கத்தியால் வெட்டியவரும் வெட்டை வாங்கியவரும் விளக்கமறியலில்

தென்மராட்சி டிசெ. 21

வாள்வெட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

மட்டுவில் வடக்கில் கடந்த சனிக்கிழமை மாலை இருவர் வீதியில் சண்டையிட்டனர். அவர்களை பொதுமகன் ஒருவர் விலக்குப் பிடித்தார். இதனால் மோதலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் வீட்டுக்குச் சென்று கத்தி எடுத்து வந்து விலக்குப் பிடித்தவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தினார். கத்தியால் வெட்டியவர் ஏற்கனவே தாக்குதலில் காயமடைந்திருந்தார். இதனால் கத்தி வெட்டுக்காயங்களுக்கு இலக்கானவரும் கத்தியால் வெட்டியவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டனர்.

இருவரையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்தனர். சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று அவர்கள் முற்படுத்தப்பட்டபோதே இரு வரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ- 9)

# முல்லைத்தீவுக்கு காந்தி என்ன செய்தார்; ஒருங்கிணைப்புக் குழுவில் வெடித்தது சர்சை

முல்லைத்தீவில் உணவு ஒறுத்தல் போராட்டத்தில் ஈடுபட்டு ஆபத்தான நிலையில் காப்பற்றப்பட்ட திருச்செல்வத்துக்கு சிலை அமைப்பதை விடுத்து காந்திக்கு சிலை அமைப்பதன் அவசியம் என்ன? இவ்வாறு அனுமதி இன்றி சிலை வைப்பவர்களுக்கும், அனுமதிகள் இன்றி விகாரைகள் கட்டும் பௌத்த பிக்குவுக்கும் வித்தியாசம் என்ன.

இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'வடமாகாண சபையின் 25 ஆவது அமர்வில் பண்டாரவன்னின் சிலை அமைப்பதற்கான தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அதற்கான நிதி கலாசார திணைக்களத்தினால் பெறப்பட்டது. சிலையை முல்லைத்தீவு சந்தியில் அமைப்பதற்கான அனுமதி பெறுவதற்கு ஒன்றரை வருடங்களுக்கு மேலாக கேட்டபோது, அதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை அனுமதி தரவில்லை. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்குள் பண்டாரவன்னியன் எச்சங்கள் மிஞ்சியுள்ள பகுதியில் பண்டார வன்னியனின் சிலையை அமைப்பதற்கு அனுமதி கேட்டும் தரப்படவில்லை. பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அதற்கான அனுமதிகள் எடுத்து. தற்போது பிரதேச சபைக்குரிய காணியில் வைப்பதற்காக அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. எனினும் தற்போது திடீரென ஒரு சிலையை முந்திக்கொண்டு வந்து அங்கு வைத்திருக்கின்றார்கள். அது காந்தி சிலை என அறிகின்றேன்.

பிரதேச சபையின் அனுமதிகள் பெறாமல் இரவோடிரவாக காந்திக்கு சிலை அமைப்பது பொருத்தமற்றது. ஏனெனில் அகிம்சையினைப் போதித்த காந்திக்கு முல்லைத்தீவில் சிலை அமைப்பதன் அவசியம் என்ன?. முல்லைத்தீவுக்கு காந்தி என்ன செய்தார்? அகிம்சை ரீதியாகப் போராடிய தியாகி திலீபன், முல்லைத்தீவில் உணவு ஒறுத்தல் போராட்டத்தில் ஈடுபட்டு ஆபத்தான நிலையில் காப்பற்றப்பட்ட திருச்செல்வத்துக்கு சிலை அமைப்பதை விடுத்து காந்திக்கு சிலை அமைப்பதன் அவசியம் என்ன?. இவ்வாறு அனுமதி இன்றி சிலை வைப்பவர்களுக்கும், அனுமதிகள் இன்றி விகாரைகள் கட்டும் புத்த பிக்குவுக்கும் வித்தியாசம் என்ன?. சட்ட ஒழுங்குகளைச் சரியான முறையில் பின்பற்றி சிலையை அமைக்க வேண்டும் என்பதற்காகவே இத்தனை காலம் பொறுத்திருந்தோம்' என்று மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் புதிதாக கொண்டு வந்து வைக்கப்பட்ட சிலை தொடர்பான தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

'இந்த சிலை வந்து பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் நிறுவப்பட்டது. இவ்வாறு நாங்கள் எட்டு இடத்தில் வைக்கின்றோம். பண்டாரவன்னியன் சிலை கற்சிலைமடு, முள்ளியவளையிலும், துணுக்காயில் வள்ளுவர், புதுக்குடியிருப்பில் பாரதி, ?ரணப்பாலையில் அன்னைதிரேசா, முள்ளியவளையில் பாரதி என எட்டுசிலைகள் வைக்கின்றோம். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் அனுமதிக்கப்பட்டு, எங்களுடைய அமைச்சுக்கு அனுப்பட்டு அங்கேயும் சிறப்பு அனுமதி பெற்று மாவட்டச் செயலாருக்கு அனுப்பபட்டது. இது மாவட்டச் செயலாளர், முதலமைச்சர், பிரதேச செயலருக்கு தெரியத் தக்கதாக நேரடியாக குறிப்பிடப்பட்டு வந்த படியால் இது அனுமதிக்கப்பட்டதாக எடுத்துகொள்ளப்பட்டு நாங்கள் இதை செய்து முடித்திருக்கின்றோம்' என்று நாடாளுமன்ற உறுப் பினரும் இணைத்தலைவருமான சி.சிவமோகன் ரவிகரனுக்கு பதிலளித்தார்.

இதனால் சிலை அமைப்பது தொடர்பான சர்ச்சைகள் சில மணிநேரம் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் நீண்டு கொண்டே சென்றது, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புக்களைச் சார்ந்தவர்களால் இந்தப் பிரச்சினை நிறுத்தப்பட்டு அடுத்த அபிவிருத்தி பற்றி பேசப்பட்டது. (வ-21,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிர்வாக சேவை (SLEAS) நேர்முகத்தேர்வுக்கு தகுதி பெற்ற அதிபர் / ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் மற்றும் கற்பித்தல்

வளவாளர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி

திகதி - 22.12.2016 (வியாழன்)
நேரம் - மாலை 3.30 - 5.30
இடம் - JAHRED (CAPS NO .52, Palaly Road, Thirunelvely Junction)
குறிப்பு - ஓர் அணியில் 40 பேர் மட்டுமே

தொடர்பு - 077 386 7458, 021 205 2240
21 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயரை பதிவு செய்யவும்.

## தவறிவிட்டது

சுன்னாகப்பகுதியில் சந்திரலிங்கம் நிதர்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வேலைஅடையாள அட்டை , காப்புறுதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

0779605262

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது

கொடிகாமம்-பருத்தித்துறை ஆகிய இடங்களில் கடைகளை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

'அண்மையில் கொடிகாமம் நகர்ப் பகுதியை அண்மித்த கடையில் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரும் பருத்தித்துறை தம்பர் சிட்டிப் பகுதியைச் சேர்ந்த கடையில் திருடிய குற்றச்சாட்டில் மற்றையவரும் கைது செய்யப்பட்டனர்.

கொடிகாமம் பகுதியில் உடைக்கப்பட்ட கடையில் இருந்து மீள் நிரப்பு அட்டைகள் உள்ளிட்ட பொருள்கள் என்பன திருடப்பட்டன. இந்தச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை சந்தையடிப் பகுதியைச் சேர்ந்த 22 வயதான நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை தம்பர் சிட்டிப் பகுதியில் நிகழ்ந்தகடைஉடைத்துத் திருடிய சம்பவத்தில் கடைக்குள் இருந்த 50 ஆயிரத்துக்கும் மேல் பெறுமதியான பொருள்கள் மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பாக புனித நகர்ப்பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் கைது செய்யப்பட்டார். இவர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்' என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,ரி,26)

## சிறார்களின் கலை விழா

மட்டுவில் தெற்கு வளர்மதி பாலர் கல்விக்கழகசிறார்களின் கலைவிழா இன்று பி.ப 3 மணிக்கு வளர்மதி சனசமூக நிலைய கலையரங்கில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கழகத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி த.பானுஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகவடக்குமாகாண முதலமைச்சர் செயலக அலுவலர் கந்தசாமிகேசவரூபனும், சிறப்பு விருந்தினராக நிலையத்தின் கனடாக் கிளைத் தலைவர் பொன். கந்தையாவும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மரண அறிவித்தல்



### விமலேஸ்வரன் சுரேஸ் (கீர்த்தி)

(மானிப்பாய் இந்து கல்லூரி, கலைப்பிரிவு - 2016 மாணவன்)

பிறப்பு 30.07.1996 — இறப்பு 19.12.2016

சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விமலேஸ்வரன் சுரேஸ் (கீர்த்தி) 19.12.2016 திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் விமலேஸ்வரன்-இராசநாயகி தம்பதியரின் பாசமிகு புதல்வனும் கிஷோ (மக்கள் வங்கி -ஊர்காவற்றுறை), பிரதீஸ் (அஷோ), சதீபன் (காணி நிர்வாகத்திணைக்களம், வ.மா புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகம்), தர்மிகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வெற்றிவேலு மற்றும் கேதீஸ்வரன், பாக்கியம் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் துரைராசா, வள்ளிநாயகி(சுழிபுரம்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி லேன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
077 900 2314

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### சச்சிதானந்தம் சிவானந்தன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நோர்வே தேசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எமது மதிப்பிற்கும் பாசத்திற்குமுரிய மனிதர் சச்சிதானந்தம் சிவானந்தன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) அவர்களின் மறைவிற்கு எமது குடும்பத்தின் சார்பாக இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியினை காணிக்கை ஆக்குகின்றோம்.

அமரரின் மறைவு எமக்கும் எம் மக்களுக்கும் பேரிழப்பாகும். தனது குடும்பத்தினரையும் மக்களையும் மண்ணையும் நேசித்த சமூகசேவையாளன் அமைதியான ஆழ்ந்த உறக்கத்தில் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு.திருமதி. செ. செல்வராசா குடும்பத்தினர்
(நந்தாவில் லேன், கொக்குவில்)
திரு. திருமதி. ஆ. சத்திமூர்த்தி குடும்பத்தினர்
(விதானை லேன், கொக்குவில்)

## ஆளணி தேவை

வடமாகாணத்தில் இயங்கும் முன்னணி சுத்திகரிப்பு சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1). நிர்வாக முகாமையாளர்**
30 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரி/டிப்ளோமா முகாமைத்துவ தரத்தில் 5 வருடத்துக்கு குறையாத அனுபவம் உடைய ஆங்கில மொழியில் சுயமாக செயற்படக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

**2). சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்**
சுத்திகரிப்பு துறையில் முன் அனுபவமுள்ள க.பொ.த உயர்தர தகைமையுடைய 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**3). கணக்கு பதிவாளர்**
கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கு பதிவுகளில் அனுபவம் உடைய க.பொ.த. உயர்தர வர்த்தகப்பிரிவு / டிப்ளோமா தகைமையுடைய 03 வருட தொழில் அனுபவம் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**4). ஆண்/பெண் சுத்திகரிப்பு தொழிலாளர்கள்.**

C/27100)(10.17.19)

விளம்பரதாரர்:
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி(தங்கம்) சின்னத்தம்பி

தோற்றம் 04 . 03 . 1930



மறைவு 20 . 12 . 2016

இந்திரன் அம்மன் கோயிலடி, துன்னாலை, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி(தங்கம்) சின்னத்தம்பி 20.12.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - அம்மினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தாமு மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் இரஞ்சினி, ரகுநாதன்(கனடா), ரஞ்சன்(கனடா), பாஸ்கரன்(கனடா), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாலகிருஷ் ணன் மற்றும் தயாநிதி (கனடா), பாலமுருகாம்பிகை(அம்பிகா -கனடா), சுமதி(கனடா), ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நவரட்ண சிங்கம், அழகரத்தினம், ஜானபூங்கோதை, சின்னமணி ஆகியோரின்அன்புச் சகோதரியும் சுகந்தி, சுதர்சன்(கனடா), சுமணன், சுதர்சினி, பிரியதர்சினி(கனடா), ஜனார்த்தனி(கனடா), நவீனா(கனடா), தரணியா(கனடா), தனுசா(கனடா), குணாளன், கஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஞ்சயன், கன்சிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான் காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இந்திரன் அம்மன் கோயிலடி,
துன்னாலை, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு : 021 205 6754

## கண்ணீர் அஞ்சலி



எமது கிளையின் சக உத்தியோகத்த ரான
விமலேஸ்வரன் கிஷோவின் அன்புச்
சகோதரன்

### விமலேஸ்வரன் சுரேஸ்

அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைகின் றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

முகாமையாளர்
மற்றும் உத்தியோகத்தர்கள்,
மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை.

## கண்ணீர் அஞ்சலி



### கனகரத்தினம் விஜயகுமார்

உடன்பிறவா சகோதரனே!
கூக்குரல் கேட்டால் கூடவே நின்றிடுவாய்
குற்றமென தெரிந்தால் குதறிட
துடித்திடுவாய்
அயலின் அணையாக துணிவின்
துணையாக திகழ்ந்தவனே!
வெள்ளுள்ளம் கொண்ட விஜயனே!
விழி நனைய விட்டுச் சென்றாயோ
மனதை வேதனையில் விட்டு சென்றாயோ
குளறுகின்றோம் இங்கு - இன்று நீயோ வெகுதூரம்
ஏன் இந்த அவசரம் எமை விட்டு நீங்க
உனை சொல்லிக் குற்றமில்லை - உனை
கொண்டு சென்ற எமனை நோக்கி கத்துகின்றோம்
இளம் வயதினில் ஏனோ மறைந்தாய்
விஜயா! விஜயா!! விஜயா!!!

மணிக்கூட்டு ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருற்றிருக்கும்
ரவீந்திரன் குடும்பம்,
பவீதன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி கிழக்கில் காடு வளர்ப்புத் திட்டம் நேற்று நேற்றுமுன்தினம் மருதங்கேணி வைத்தியசாலை வளாகத்தில் பிரதேச செயலர் க.கனகேஸ்வரனால் ஆரம்பிக்கப்பட்டது. மரக்கன்றுகளை பிரதேச செயலர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி சுரேஸ் சவரிமுத்து, அபிவிருத்தி அலுவலர் செல்வி இ.காந்தலதா ஆகியோர் நட்டனர். (ற-9)

# கேள்வி கோரலில் பெரும் மோசடிகள்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 21

வடக்கு மாகாண சபை உறுப்பினர் களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்குரிய பொருள் வழங் கலுக்கான கேள்வி கோரலில் மிகப் பெரிய ஊழல் மோசடி நடைபெறுகின்றது. இவ்வாறு மாகாண சபை உறுப்பினர்கள் சபையில் நேற்றுப் பகிரங்கமா கக் குற்றம் சுமத்தினர்.

வடக்கு மாகாண சபையின் தலை மைச் செயலர் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நேற்றுக் காலை நடைபெற்றது. அதிலேயே உறுப்பினர்கள் இவ்வாறு குற்றஞ் சாட்டினர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர். களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கான பொருள் கொள் வனவில் தனித்து விலையை மாத் திரம் பார்க்காமல் அதன் தரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவ ஞானம் குறிப்பிட்டார்.

இதனைத்தான் நான் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போதும் வலியு றுத்தியிருந்தேன். வடக்கு மாகாணத் துக்கு பொதுவான கேள்வி கோரல் நடைமுறை இருக்க வேண்டும். கேள்வி கோரலில் முறைகேடு ஊழல் இருப்பதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள் ளன. அதைத் தலைமைச் செயலாளரின் கீழ் ஒருங்கிணைக்க வேண்டும். ஒவ்வொரு அமைச்சுக் களும் தமக்கான பாதுகாப்பு உத்தி யோகத்தர்களை கடந்த ஆண்டு தெரிவு செய்யும் போது ஒவ்வொரு விதமாகச் செயற்பட்டனர். அவ்வாறு இருக்கக் கூடாது - என்று ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் வலியு றுத்தினார்.

ஒரே மாவட்டத்தில் ஒரே பொருளை இருவேறு திணைக்களங்கள் இரு வேறு விலைக்கு அதுவும் மிகப் பெரிய வித்தியாசத்தில் கொள்வனவு செய் துள்ளனர் என்று ஆளும் கட்சி உறுப் பினர் இ.இந்திரராசா குற்றம் சுமத்தினார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் முதலமைச்சர் அவைத் தலைவர் உள்ளிட்டோருக்கு கடந்த காலத்தில் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கை யும் இல்லை - என்று கூறினார் ஆளும் கட்சி உறுப்பினரான ம.தியா கராசா.

நாம் வாழ்வாதார உதவிக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றோம். சம்பந்தப் பட்ட திணைக்களங்கள் பயனாளி களை கடைக்கு நேரில் அழைத்துச் சென்று, உங்களுக்கு இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. நீங் கள் விரும்பியதை எடுங்கள் என்று சொல்கின்றார்கள். இது சரியான நடவடிக்கை அல்ல - என்று எதிர்கட் சித் தலைவர் சி.தவ ராசாவும் குற்றச் சாட்டை முன்வைத்தார். மாவட்ட விலைக் கட்டுப்பாட்டுக் குழு இருப்பதைப் போன்று மாகாண விலைக் கட்டுப்பாட்டுக் குழு இருக்க வேண்டும். இதன் மூலம் பிரச்சினை களைத் தவிர்க்கலாம் - என்று எதிர் கட்சி உறுப்பினர் வை.தவநாதன் குறிப்பிட்டார்.

மாகாணத்துக்கான கேள்வி கோரல் குழுவை உருவாக்குமாறு இரண்டு ஆண்டுக்கு முன்னர் கேட்டேன். இது வரை நடவடிக்கை இல்லை. நாம் ஒதுக்கீடு செய்யும் நிதியில் யாழ்ப் பாணத்தில் பொருள்களை வாங்கி வவுனியாப் பயனாளிக்கு விநியோ கிக்கின்றனர். எமது மாவட்டத்திலும் வர்த்தக நிலையங்கள் இருக்கின் றன. அங்குள்ள வர்த்தகர்கள் இதனை எம்மிடம் கேட்கின்றனர். அந்தந்த மாவட்டங்களிலேயே பொருள் கொள் வனவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று வவனியா மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்க நாதன் தெரிவித்தார். (ற-5)



யாழ்ப்பாணம் நோக்கி உப்பு ஏற்றி வந்த பார ஊர்தி ஏ-9 வீதியில் நேற்றுத் தடம்புரண்டதில் அருகில் இருந்த மின்கம்பம் முறிந்து சேதமடைந்தது. இந்த விபத்து கனகராயன்குளம் பகுதியில் நடந்துள்ளது. அம்பாந்தோட்டையில் இருந்து உப்பு ஏற்றிவந்தபோதே பார ஊர்தி வீதியை விட்டு விலகித் தடம் புரண்டது. மின்கம்பம் சேதமடைந்ததால் அந்தப் பகுதியில் மின்சாரம் சில மணிநேரம் தடைப்பட்டது. மின்கம்பம் மாற்றப்பட்டு சீர் செய்யப்பட்டமைக்கான அனைத்துச் செலவுகளும் பார ஊர்தியின் உரிமையாளர் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தினார். (ற-4,101)

# பதவிப் பெயர்களுக்கு தூய தமிழ் பெயர்கள் வேண்டும்

## வட மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

அரசமைப்பில் காணப் படும் பதவிப் பெயர்களை தூய தமிழில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கொழும்பு அரசைக் கோரும் தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறை வேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற் றது. அதில் அவைத் தலை வர் சி.வி.கே.சிவஞானம் பிரேரணையை முன்வைத் தார்.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் ஆகியவற் றில் காணப்படும் பதவிப் பெயர்கள் பொருத்தமற்ற வையாக காணப்படுகின் றன. அவற்றைபின்வருமாறு மாற்றம் செய்ய வேண்டும். இத்தகைய பதவிப் பெயர் கள் காணப்படும் ஏனைய சட்டங்களிலும், விதிகளி லும் மாற்றங்கள் இடம் பெறுவதற்கான சட்டத்திருத் தத்தை மேற்கொள்ள வேண்டும்.

தமிழில் தற்போது உள்ள பிரதான அமைச்சர் என்ற பதம் முதலமைச்சர் என் றும், வட மாகாணம் என் பது வடக்கு மாகாணம் என வும், தவிசாளர் என்பது மாகாண சபா நாயகர் என வும், பிரதி தவிசாளர் என் பது மாகாண பிரதி சபா நாயகர் எனவும் மும்மொழி களிலும் மாற்றப்பட வேண்டும் என்றார்.

அவைத் தலைவரின் இந்தப் பிரேரணைக்கு, ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எதிர்ப்பு வெளியிட்டார். இருப்பினும் பிரேரணை உறுப்பினர்களால் வழி மொழியப்பட்டு நிறைவேற் றப்பட்டது. இந்தப் பிரேரணை ஜனாதிபதி, பிரதமர், மாகாண சபை கள் உள்ளூராட்சி அமைச் சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (ற-5)

# அன்ரனி ஜெகநாதனுக்கு அஞ்சலி

முல்லைத்தீவு, டிசெ. 21

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வட மாகாண சபையின் மறைந்த முன்னாள் பிரதி அவைத் தலைவர் அன்ரணி ஜெகநாதனுக்கு ஒரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுந்தினம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஆரம்பித்து அமைச் சர் ரிசாத் பதியுதீன் உரையாற்றினார்.

"எங்களுடன் கூடவே இருந்து முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்காக வாழ்ந்த ஒரு நல்ல மனிதரை இழந்து நிற்கின்றோம். அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமான அனுதாப பேரணையை முன் மொழிகின்றேன்."- என்று அவர் குறிப்பிட்டார்.

அதை வழி மொழிந் தார் நாடாளுமன்ற உறுப்பினரும் இணைத் தலைவரு மான மருத்துவர் சிவமோகன்.

"மக்களின் குரலாக ஒலித்துக்கொண்டி ருந்தவர். அந்த வெற்றிடத்தை எந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் உணரக் கூடியதாக இருக் கும்."-என்றார் அவர்.

மாவட்ட ஒருங்கி ணைப்பு குழு கூட் டத்தில் கலந்து கொண்ட அனை வரும் எழுந்து நின்று மறைந்த முன்னாள் பிரதி அவைத்தலை வர் அன்ரனி ஜெக நாதனுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். அதன் பின்னர் கூட்டம் ஆரம்பமானது .(ற-21,7)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவோருக்குப் பொலிஸார் ஆதரவு

## குற்றஞ்சாட்டுகின்றார் ரவிகரன்

முல்லைத்தீவு, டிசெ. 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடும் வெளிமாவட்ட மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அவற்றை ஆதரிப்பதாகவே பொலிஸாரின் செயற்பாடுகள் அமைந்துள் ளன.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப் பினர் து.ரவிகரன் குற்றஞ்சாட்டினார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதன் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

அவர் தெரிவித்ததாவது-

கொக்கிளாயில் வெளிமாவட்ட மீனவர் களின் சட்டவிரோத நடவடிக்கைகளால் பிரதேச மக்கள் பாதிக்கப்படுகின்றனர். பல தடவைகள் இது தொடர்பாகப் பேசியுள்ளோம். இந்த விடயத்தில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிற் திணைக்களத்தின் செயற்பாடுகளில் வேகம் காணாது என்றே கூற வேண் டும்.

கொக்கிளாய் பகுதி ஆற்றிலே 25 குதிரை வலுக்கொண்ட இயந்திரங் களின் துணையுடனும், 35 மில்லி மீற்றர் வலைகளைப்பயன்படுத்தியும்மீன்பிடியில்ஈடுபடுகின்றார்கள். நன்னீர் மீன்பிடிச் சட்டத்தை மீறி வெளி மாவட்ட மீனவர்கள் தொடர்ந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றார்கள். கொக் கிளாய் களப்பு பகுதியில் மீன்பிடியையே நம்பியுள்ள எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்றனர்.

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின் றார்கள் என்பதை அறிந்து திணைக் களத்தினர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸாரையும், கொக்கிளாய் பகுதி மீனவர்களையும் அழைத்துச் சென்றனர். கொக்கிளாய் பகுதி மீனவர்களை வெளிமாவட்ட மீனவர்கள் தாங்கிப் படகையும் சேதப்படுத்தி னர். பொலிஸாருக்கும் சிறுகாயம் ஏற்படுத்தப்பட்டது.

கையில் துப்பாக்கி வைத்திருந்த பொலிஸார் ஒரு சத்த வெடிகூட வைக்க வில்லை.

சட்ட ஒழுங்கை பாது காக்கும் பொலிஸார் திணைக்கள அதி காரிகளுக்கும், கொக்கிளாய் பகுதி மீனவர்களுக்கும் பாதுகாப்பை வழங்கவில்லை

பொலிஸார் இவ்வாறு ஒருதலைப் பட்சமாக நடப்பதை கண்டிக்கின்றேன். சட்டவிரோத செயற்பாடுகளால் எங்கள் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. பொலிசார் உரிய முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.- என்றார். (ற-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. மாவட்டத்தில் மணல் அகழ கட்டுப்பாடு

முல்லைத்தீவு, டிசெ. 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பெறப்படும் கிரவல், மணல் மாவட்ட மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்த பின்னரே வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடை பெற்றது. அதன் இணைத் தலைவர்களாக அமைச்சர் ரிசாத் பதியுதீனும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோக னும் கலந்து கொண்டனர்.

அதில் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் தேவைகளுக்காகவும், உட்கட்டுமான அபிவிருத்தி பணிகளுக்குமான கிரவல், மணல்களை பெறுவதில் தொடர்ந்தும் சிரமம் காணப்படுகின்றது என்று சுட்டிக் காட்டப்பட்டது.

"எமது தேவைக்காக மணல் அகழ்கின்ற போதும் கைது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஏதாவது ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து பொலிஸார் கைது செய்கின்றனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து தாராளமாக மணல், கிரவலை அகழும் முதலாளிகள் எந்தப் பிரச்சினையும் இல்லாது வழியனுப்பப்படுகின்றனர்


கொக்கிளாய் வீதியில் 15ஆம் கட்டையில் இருந்து மணலாறுக்கு போகும் வழியில் முந்திரியக்குள சந்திவரை வீதியின் இரண்டு பக்கமும் ஒருகாலமும் பயன்படுத்த முடியாத அளவுக்கு தரை அகழப்பட்டுள்ளது. குமுழமுனையில் 300 ஏக்கருக்கு மேற் பட்ட பிரதேசம் கிரவலுக்காக அகழப்பட்டது. திணைக்களங்கள் அனைத்தும் எமது வளங்களை அழிக்கும் வகையிலேயே செயற்படுகின்றன. இணைத்தலைவர் கள் இது தொடர்பில் தகுந்த முடிவை எடுக்க வேண்டும்" -என்று கூட்டத்தில் கலந்துகொண்ட சமுக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

> முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற உள்ளதால் மாவட் டத்தின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்த பின் னரே வெளிமாவட்டங் களுக்கு கொண்டு செல்ல அனு மதிக்கப்பட வேண்டும்

இந்த விடயம் தொடர்பான இணைத் தலைவர்கள் ஆலோசித்தனர்.

"கடந்த பிரதேச செயலக மட்ட ஒருங் கிணைப்பு குழு கூட்டங்களிலும் இது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அகழ்வு தொடர்ந்து நடைபெறு வதால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் தனியாருக்கு கொடுக் கப்பட்ட மணல், கிரவல் அகழ்வுக்கான அனுமதிகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும். மணல், கிரவல் அகழும் அனு மதியை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங் கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கமக்கார அமைப்பு மற்றும் பிரதேச சபைகள் என்பவற்றுக்கு வழங்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற உள்ளதால் மாவட்டத்தின் தேவைகளை முழுமையாக பூர்த்திசெய்த பின்னரே வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்ல அனு மதிக்கப்பட வேண்டும்." என்று இணைத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிசாத் பதியுதீன் தீர்மானம் நிறைவேற்றினார்.

(ந-7)




# இராணுவம் வெளியேறியும் காணியை விடுவிக்க மறுப்பு

வவுனியா, டிசெ.21

வவுனியா - இராசேந்திரன்குளம் - விக்ஸ் காட்டுப் பகுதியில் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணி அடங்கலாக அரச காணியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ள போதும் அந்தப் பகுதியில் படையினரின் பிரசன்னம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த காணி இராணுவத்தின் சொத்து எனவும் அதற்குள் பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அங்கு பதாகையொன்றும் தொங்கவிடப்பட்டுள்ளது.

காணியின் உரிமையாளரான கந்தையா இராசதுரை தெரிவித்ததாவது:

வவுனியா - இராசேந்திரன்குளம் - விக்ஸ் காடு என்ற பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறியிருந் தனர். குறித்த பகுதிக்கு அடிக்கடி வரும் இராணுவத்தினர், இராணுவம் முகாம் இருந்த பகுதிக்குள் வெளியார் பிரவேசிக்கக்கூடாது என கிராம சேவகருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

போர் காரணமாக 1990ஆம் ஆண்டுகளில் இராசேந்திரன் குளம் பகுதியில் இருந்து நாம் இடம்பெயர்ந்ததை அடுத்து எமது காணியை இராணுவத்தினர் கையகப்படுத்தியிருந்தனர். இடம்பெயர்ந்து மடுவில் தற்காலிகமாக வசித்த வந்த நாம் 1998ஆம் ஆண்டு சொந்த இடத்துக்குத் திரும்பினோம். இது வரை காணி எமக்கு மீள வழங்கப்படவில்லை. 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி காணியை விரைவில் கையளிப்போம் என்று இராணுவ முகாமின் அதிகாரிகளால் சிங்கள மொழியில் கடிதம் வழங்கப்பட்டது. இதுவரை எமது காணிக்குள் எம்மை அனுமதிக்கவில்லை. எமது காணியை மீளப் பெற்றுதர வேண்டும் - என்றார். (ந-21)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விடயங்கள் எமக்குச் சவால்

## வரவு-செலவுத் திட்ட உரையில் முதலமைச்சர் சி.வி கருத்து

*வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரின் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை:*

நிர்வாக ரீதியான செயற்பாடுகளின் இலகு தன்மையினைக் கருத்தில்கொண்டு பிரதம செயலாளர் செயலகத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள நிதியும் திட்டமிடலும், மாகாண நிர்வாகம் போன்றவற்றுடன் எமது அமைச்சின் கீழ் இயங்கும் மகளிர் விவகாரம் புனர்வாழ்வு ஆகியவற்றைத்தவிர ஏனைய துறைகளுக்கும் சேர்த்து மொத்தமாக எமது அமைச்சிற்கு 2017ஆம் ஆண்டுக்கு 2,732.111 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 2,430.611 மில்லியன் ரூபா மீண்டுவரும் செலவினம். 301.5 மில்லியன் ரூபா மூலதனச் செலவினம்.

முதலமைச்சரின் அமைச்சிற்கு மட்டும் 2017ஆம் ஆண்டிற்கு 63.138 மில்லியன் ரூபா மீண்டெழும் செலவினத்திற்காகவும், பிரமாண அடிப்படையிலான கொடைக்கு ரூபா 8 மில்லியனும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத் திக் கொடைக்கு ரூபா 42 மில்லியனுமாக மொத்தமாக 113.138 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**1. வீடமைப்பு**

இத்துறைக்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 12.75 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. போரால் பாதிக்கப்பட்ட, வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மற்றும் அரசின் ஏனைய வீட்டுத் திட்டங்களுள் உள்ளடக்கப்படாத பாதிக்கப்பட்டவர்களுள் 17 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுப் புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. ஒரு வீடு நிர்மாணிப் பதற்காக அமைச்சின் 750,000 ரூபாவும், பயனாளியின் 155,000 ரூபாவும் சேர்த்து தலா 905,000 ரூபாவில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் இத் தொகை அதிகரிக்கப்படும்.

போரால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்காக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நிதி ஒதுக்கீடு போதாது. இந்நிலையில் வீடமைப்புக்காக 2017 ஆம் ஆண்டுக்கு 12 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலும் பார்க்க .75 மில்லியன் குறைவாகவே கிடைத்துள்ளது.

**2. சுற்றுலாத்துறை**

மேலாண்மைத் திறன் கொண்ட சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் ஒன்றின் வரைவை நாம் உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளோம். உறுப்பினர்களின் கருத்துக்களை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். அத் திட்டத்தை அடிப்படையாக வைத்து நீண்ட காலத் திட்டத்தைத் தீட்டவுள்ளோம்.

2017 ஆம் ஆண்டிற்கு ரூபா 30 மில்லியன் நிதி மட்டுமே சுற்றுலாத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியானது, சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய இடங்களை அழகுபடுத்தல், பாரம்பரிய, இயற்கை, சமயம் சார், சுற்றுலாத்துறைகளை விருத்தி செய்தல், ஒருங்கிணைக்கப்பட்ட வசதிகள் உள்ளடங்கிய மையங்களைத் தனியார் துறையின் பங்களிப்புடன்உருவாக்கப் பயன்படும்.

**3. மகளிர் விவகாரம்**

இத்துறைக்கு 2016 ஆம் ஆண்டு 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு உதவி வழங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டில், பெண்களுக்கான தொழில் வாய்ப்பு, தொழிற் பயிற்சி, பெண்களின் இயல்தகைமைகளை முன்னேற்றக் கூடிய பயிற்சி, சிறிய ஆடை உற்பத்தி நிலையங்களை நிறுவி பெண்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கவுள்ளோம்.

**4. புனர்வாழ்வளித்தல்**

வடக்குச் சுகாதார அமைச்சு ஆரம்பித்த முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட மற்றும் மாற்றுத்திறனாளிகளாக காணப்பட்ட 538 பயனாளிகளுக்கு 65.63 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் இருக்கை மலசலகூடங்களை அமைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. அமைச்சின் 122,000 ரூபாவும் பயனாளியின் 40,000 ரூபாவுமாக 162,000 ரூபா ஒரு மலசலகூடத்திற்கு மதிப்பிடப்பட்டது.

இவ்வருடத்தில் கிடைக்கப்பெற்ற 25 மில்லியன் ரூபாவினையும் சேர்த்து தற்போது வரை 210 மாற்று வலுவுடையோருக்கான விசேட மலசலகூடங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. பகுதியளவில் பூர்த்தியடைத்த ஏனையவற்றுக்குத் தேவையான 20 மில்லியன் ரூபா நிதி இவ்வருடத்தில் கிடைக்கப்பெறாததால் அதன் தொடர்ச்சியை 2017 இல் மேற்கொள்ளவுள்ளோம்.

புனர்வாழ்வுக்கு 2017 ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கீடு செய்யப்படாது உள்ள சிறியளவிலான நிதியிலிருந்து குறிப்பிட்ட அளவு நிதியினை இத்துறைக்கு ஒதுக்கி முக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்.

**5. சட்டமும் ஒழுங்கும்**

வடக்கில் சட்டமும் ஒழுங்கும் பேணப்படுவதற்காக ஒன்றிணைந்த பொலிஸ் – சிவில் பாதுகாப்புக் குழுவினை அமைக்கும் முயற்சிகள் 2015 இல் எடுக்கப்பட்டபோதும் 2016 இல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தக் குழுவை அமைப்பதற்கான கருத்தாவணம் எம்மால் தயாரிக்கப்பட்டு பொலிஸ்மா அதிபர் மற்றும் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடுத்த கூட்டங்கள் பல காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்பட்டன. வரும் வருடத்தில் இக்குழு கூடும்.

**6. உள்ளூராட்சித்திணைக்களம்**

2017ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திற்காகரூபா 1,840.162 மில்லியனும், பிரமாண அடிப்படையிலான கொடைக்கு ரூபா 4.5 மில்லியனும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைக்கு ரூபா 198 மில்லியனுமாக மொத்தமாக 2042.662 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு 263.74 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 87 வேலைத்திட்டங்கள் 203 மில்லியன் ரூபா செலவில் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 6 கிராமிய வீதிகள் 32.9 மில்லியன் ரூபாவில் புனரமைக்கப்படுகின்றன.

2015 இல் உருவாக்கப்பட்ட மாகாண வருமான வரிகள் திணைக்களத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் வரை திரட்டப்பட்ட முத்திரைத்தீர்வை ரூபா 298.5 மில்லியனும், நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 94.13 மில்லியனும் திரட்டப்பட்டுள்ளன. இதில் முத்திரைத்தீர்வை வருமானம் 2017 இல் உள்ளூராட்சிச் சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

**முத்திரைத்தீர்வை நிலுவை**

2011ஆம் ஆண்டில் இருந்து 2015 ஜூன் மாதம் வரைக்கு மான 34 உள்ளூராட்சி மன்றங்களின் முத்திரைத் தீர்வை நிலுவையாக 1202 மில்லியன் ரூபாவினை மத்திய திறைசேரி உள்ளூராட்சி மன்றங்களுக்கு மீளளிக்க வேண்டியுள்ளது.

**நெல்சிப் திட்டம்**

2016ஆம் ஆண்டில் நெல்சிப் திட்டத்திற்காக 1145 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு 2016ஆம் ஆண்டு நவம்பர்வரை 909 மில்லியன் ரூபா103 வேலைக்காக செலவீடுசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மத்திய சந்தையில் தீ விபத்து ஏற்பட்டு சந்தை முற்றாக அழிவடைந்த நிலையில் கடைகளை நடத்தியவர்களின் வாழ்வாதாரப் பாதிப்பினை ஈடுசெய்வதற்காக 124 பயனாளிகளுக்கும் தலா 20,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது. பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து 11.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு அழிவுற்ற கடைகள் 27.10.2016 இல் வேலைகள் முடிவுறுத்தப்பட்டு கையளிக்கப்பட்டன.

**7. காணி ஆணையாளர் திணைக்களம்**


காணி ஆணையாளர் திணைக்களத்தினூடாக எமது அரச காணிகள் தொடர்பில் நாம் வரையறுக்கப்பட்ட அளவிலேயே எமது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்க முடிகிறது. பிரதேச மட்டத்தில் மாகாண அலுவலர்கள் பிரதேச செயலாளர்களின் கீழ் பணிபுரிந்து வருகின்றபோதும் பல தேவைகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எம்மால் மக்கள் நலன் கருதும் வகையிலேயே கையாளப்படுகின்றன. காணி தொடர்பான விடயங்களை கையாளுதல் , சவால்மிகுந்த ஒன்றாகவே காணப்படுகின்றது.

அரச காணிகள் மட்டுமல்லாமல், பெருமளவிலான தனியார் காணிகளும், படையினரின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டு அவற்றை விடுவித்துக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. அரசியல் தலையீடுகளினால் எமது கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் பெருமளவிலான அரச காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

2017ஆம் ஆண்டுக்கு 85.126 மில்லியன் ரூபா மீண்டு வரும் செலவிற்கும் பிரமாண அடிப்படையிலான கொடைக்கு ஒரு மில்லியன் ரூபாவும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத் திக் கொடைக்கு ரூபா 4 மில்லியனும் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்பப் பரிமாற்றப் பயிற்சிகள்**

வட மாகாணத்தின் சிறு கைத்தொழில் துறைக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய சுமார் 17 வகையான குறுங்கால பயிற்சிகள் ரூபா 1.08 மில்லியனுக்கு வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 961 பயனாளிகள் 84 பயிற்சிகளினூடாக பயிற்றுவிக்கப்பட்டு பயிற்சியின் நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.



**சிறுகைத்தொழில் துறை**

தொழிற்துறை திணைக்களத்தினால் பாரம்பரிய சிறுகைத் தொழில் திறன் விருத்திக்கான மரவேலை, தும்பு வேலை மற் றும் மட் கல வேலைப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தெரிவு செய்யப்பட்ட 58 சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு 1.25 மில்லியன் ரூபா பெறுமதிக்கு அரைமானிய திட்டத்தில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது அவர்களது சுய தொழில் முயற்சியை ஊக்குவிப்பதற்கு மிகவும் வாய்ப்பாக உள்ளது.

கல்வித்திணைக்களத்தின் 1.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக எமது திணைக்களத்தில் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கான கள வேலையின் பயிற்சியாக சம்பளத்துடன் கூடிய தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டு பாடசாலைத் தளபாடங்கள் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

**8. சிறப்புத் திட்டம்**

தனியார் பங்களிப்புடனான தொழில் முயற்சியானது அபிவிருத்தியில் முக்கிய அம்சமாக கருதப்படுவதால் ஆரம்ப முயற்சியாக தனியார் துறையுடன் இணைந்து சுகாதார சிறுதுண்டுகள் உற்பத்தி செய்யும் நிலையங்கள் கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்டங்களில் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டு உத்தேசிக்கப்பட்ட திட்டங்கள்

தொழிற்துறைத் திணைக்களத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்பு உபகரணங்கள் வழங்குவதற்காக வடக்கில் ரூபா 5.00 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டிற்கு ரூபா 74.560 மில்லியன் மீண்டு வரும் செலவினத்திற்கும், பிரமாண அடிப்படையிலான கொடைக்கு ரூபா 2 மில்லியனும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட கொடைக்கு ரூபா 15 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**9. சமூகசேவைகள் திணைக்களம்**

இந்தத் திணைக்களத்தின் கண்காணிப்பில் 77 முதியோர் சங்கங்களும், 7 மாற்று வலுவுடையோர் இல்லங்களும், 8 தனி யார் முதியோர் இல்லங்களும், 7 முதியோர் பகல்பராமரிப்பு நிலையங்களும் இயங்கிவருகின்றன.

வடக்கு மாகாணத்தில் ஆதரவற்ற மனவளர்ச்சி குன்றியோரைப் பராமரிப்பதற்கு தனியான அரச இல்லங்கள் ஏற்படுத்தப்படவேண்டியுள்ளன. அவர்களுக்கான வதிவிடத்துடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்க வேண்டும்.

**2016 இன் அடைவுகள்**

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைக்கு 30 மில்லியன் வழங்கப்பட்டது, மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றவர்களுக்கான பயிற்சி நிலையம் அமைப்பதற்காக ரூபா 11.6 மில்லியனும், மாற்றுத்திறனாளிகளின் வதிவிடங்களின் அணுகுகை வசதியை ஏற்படுத்துவதற்காக ரூபா 6 மில்லியனும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றவர்களுக்கான தொழிற்பயிற்சிக்காக 1.4 மில்லியனும் செலவு செய்யப்பட்டன.

வலிந்துதவும் சமூக சேவை அமைப்புக்களின் கட்டட வேலைகள் ரூபா 8.15 மில்லியன் ரூபாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூத்த பிரஜைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவாக ரூபா 207.14 மில்லியனும், காசநோய்க் கொடுப்பனவாக 1.664 மில்லியனும், தொழுநோய்க் கொடுப்பனவாக 0.493 மில்லியனும், தலசீமியா கொடுப்பனவாக 0.319 மில்லியன் ரூபாவும், சிறுநீரகநோய்க் கொடுப்பனவாக ரூபா 18.625 மில்லியனும், முள்ளந்தண்டு வடப்பாதிக்கப்பட்டவர்களுக் கான கொடுப்பனவாக ரூபா 11.135 மில்லியனும், புற்றுநோய் சிகிச்சைக்கான கொடுப்பனவாக ரூபா 27.575 மில்லியனும் வழங்கப்பட்டுள்ளது.

**2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகள்**

2017 ஆம் ஆண்டுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் மீண்டெழும் செலவினத்திற்காக 367.625 மில்லியன் ரூபாவும், பிரமாண அடிப்படையிலான நிதியாக 2 மில்லியன் ரூபாவும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியாக 25 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது 2016லும் பார்க்க ஐந்து மில்லியன் குறைவு.

(கு-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.நா. சபையின் கண்காணிப்புக் குழு புறப்படுகிறது அலெப்போவை நோக்கி

மொஸ்கோ, டிசெ. 21
அலெப்போ நகரில் போர் முடிந்துள்ளது என்று அறிவிக்கப்பட்ட பின்னரும் அங்கு போர்க் குற்றங்கள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் அவதானிப் புக் குழு குறித்த நகருக்குச் செல்ல தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிரிய ஜனாதிபதி அல் அசாத்தை பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திவந்த குழு படிப்படியாக அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவாகவும் மாற்றம் பெற்றது. சிரியாவின் இரண்டாவதும், பெரியதும் முக்கிய நகரமுமான அலெப்போ கடந்த சில வருடங்களாக அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பிடியிலிருந்தது. நகரை மீட்கும் போரில் சிரியாவுக்கு ரஷ்யா பெரும் ஆதரவை வழங் கியது. ஈரானும் ஆதரவு வழங்கியது. அலெப்போ நகர் தற்போது அரச படையால் மீட்கப்பட்டுள்ளது.


கடந்த ஆறு வருடங்களாக இடம்பெற்ற போரில், 3 லட்சத்து 10 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர். அலெப்போ நகர் மீட்கப்பட்டுள்ளது என்று அறி விக்கப்பட்ட பிற்பாடும் அங்கு அவ்வப்போது பொது மக்களுக்கு எதிரான கடும் தாக்குதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ரஷ்யாவின் ஆதரவு பெற்ற சிரியப் படை அதை நிகழ்த்துகிறது என்று பன்னாட்டு ஊடகங்களும் குற்றஞ்சுமத்தின. இதனால் அலெப்போ விவகாரத்தை கையாள, அந்த நகரின் பரந்த நிலப் பரப்பை கருத்தில் கொண்டு அங்கு போர்க் குற்றங்களை அவதானிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பல அவதானிப்புக் குழுக்களை அங்கு அனுப்ப வேண்டும் என்று பிரான்ஸ் தீர்மானம் கொண்டு வந்தது.

உலக நாடுகள் பல வற்றின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி ஐக்கிய நாடுகள் சபையின் 113 பிரதிநிதிகள் அலெப்போவுக்கு விரையவுள்ளனர். (ம-எ)

# ட்ரம்ப் ஜனாதி
# பிரதிநிதிகளும்

வொஷிங்ரன், டிசெ. 21
அமெரிக்க ஜனாதிபதியை முறைப்படித் தெரிவு செய்யும் தொகுதிப் பிரதிநிதிகளின் தேர்தலிலும் வெற்றிபெற்றதை அடுத்து டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாவது உறுதியானது.




அமெரிக்காவில் 58 ஆவது ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. ஜனநாயகக் கட்சியில் வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனை வீழ்த்தி குடியரசுக் கட்சியில் ட்ரம்ப் ஆட்சிப்பீடம் ஏறுவதை கிட்டத்தட்ட உறுதிசெய்தார். அமெரிக்கத் தேர்தல் வித்தியாசமான நடைமுறைகளைக் கொண்டது. அதாவது மக்கள் ஹிலாரிக்கோ அல்லது ட்ரம்புக்கோ (ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு) வாக்களிப்பதில்லை. மாறாக குறித்த கட்சிகளால் அமெரிக்காவின் 538 தேர்தல் தொகுதிகளிலும் நிறுத்தப்படும் வேட்பாளர்களுக்கே வாக்களிப்பார்கள். அவர்களின் வெற்றி

அந்தக்
வேட்பாள
எனக் க
தேர்தல்
பிற்பாடு



# சீனாவில் கவிழ்ந்தது படகு 11 பேரைக் காணவில்லை

பீஜிங், டிசெ. 21
சீனாவில் மீனவர் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேரைக் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பியுஜியன் மாகாணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. 14 மீனவர்கள் படகில் இருந்தனர். அவர்களில் 3 பேர் மீட்கப்பட்ட நிலையில், ஏனையவர்களைத் தேடும் பணிகள் துரிதமாக்கப்பட்டன. 15 படகுகள், உலங்கு வானூர்தி ஆகியனவும் தேடுதல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன.

விபத்து இடம்பெற்று மீட்கப்பட வேண்டிய குறிப்பிட்ட நேர அளவு கடந்து விட்ட காரணத்தால், உயிரிழப்புக்கள் ஏற்படலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. விபத்துக்கான காரணம் குறித்து உத்தியோகபூர்வமாக எவையும் தெரிவிக்கப்படவில்லை. (ம-எ)

## எல் சவடோரில்

# கத்தோலிக்கப் பாதிரியார்களின் பாலியல் குற்றங்கள் உறுதி

சான் சல்வடோர், டிசெ. 21
மத்திய அமெரிக்க நாடான எல் சல்வடோரில் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த சில பாதிரியார்கள் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று நிரூபிக்கப்பட்டது.

குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக கத்தோலிக்கத் திருச்சபைத் தலைமைப் பீடம் விசாரணை நடத்தியது. பிரான்சிஸ்கோ கால்வேஸ், அன்டோனியோ மொலினா, ஜீசஸ் டெல்கடோ ஆகிய 3 பாதிரியார்களும் 1980 முதல் 2000 ஆம் வரையிலான காலகட்டத்தில், இதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்டனர் என்று- நிரூபிக்கப்பட்டது. இதனையடுத்து அவர்கள் மூன்று பேரையும் திருச்சபை நிர்வாகம் இடைநீக்கம் செய்து, நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-எ)



# ஆள்களை விட ஆடுகள் அதிகம்

லண்டன், டிசெ. 21
இங்கிலாந்தின் வேல்ஸ் பகுதியில் நபருக்கு மூன்று ஆடுகள் என்ற விகிதத்தில் ஆடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த நகரில் 98 லட்சத்து 10 ஆயிரம் ஆடுகள் உள்ளன. மனிதர்களின் எண்ணிக்கை 30 லட்சத்து 26 ஆயிரமாக உள்ளது. 2009ஆம் ஆண்டின் பின்னரே ஆடுகளின் எண்ணிக்கை துரிதகதியில் அதிகரித்தது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

# துருக்கிக்கான ரஷ்யத் தூதுவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு



அங்காரா, டிசெ.21
துருக்கிக்கான ரஷ்யாவின் தூதுவர் அன்றி கர்லோவ், பொலிஸ் உத்தியோகத்தர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். துருக்கித் தலைநகர் அங்காராவில் நேற்று முன்தினம் ஆரம்பமான [illegible] கலைத் தொடர்பான கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக கார்லோவ் சென்றிருந்தார். நிகழ்ச்சியின் நடுவே புகுந்த ஆயுததாரி ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கார்லோவ் உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மர்ம நபர் என்று சில ஊடகங்களும், அவர் துருக்கிப் பொலிஸைச் சார்ந்தவர். அவரது பெயர் [illegible] (வயது-22) என்று வேறு சில ஊடகங்களும் செய்தி வெளியிட்டன. பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் ஆயுததாரியும் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் இரு நாட்டு உறவுகளையும் பாதிக்கும் செயல் என்று துருக்கி ஜனாதிபதி எர்டகன் தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி புடினும் தனது கண்டனத்தை வெளிப்படுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ - மூன், தேவையற்ற தீவிரவாதச் செயல் என்று கண்டித்துள்ளார். (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதியாவது உறுதி
# தேர்ந்தெடுத்தனர்



“37 பேர் எதிராக வாக்களித்தால் ட்ரம்ப்பின் ஜனாதிபதிக் கனவு தகரும் என்று கருதப்பட்ட நிலையில், பிரதிநிதிகளின் தெரிவிலும் வெற்றிபெற்று ஜனாதிபதியாவதை உறுதி செய்தார் ட்ரம்ப்.”

கட்சியின் ஜனாதிபதி
ருக்கும் கிடைத்த வெற்றி
ருதப்படும். மக்களின்
நடைபெற்று முடிந்த
, மக்கள் தேர்வுசெய்த

பிரதிநிதிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்வார்கள்.
முடிவடைந்த தேர்தல் நிலவரத்தின்படி ட்ரம்ப் களமிறங்கிய குடியரசுக் கட்சி 306 தொகுதிகளையும் ஹிலாரியின் ஜனநாயகக் கட்சி 232 தொகுதிகளையும் பெற்றன. தொகுதிப் பிரதிநிதிகள் 538 பேரும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) முறைப்படி தமது ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய ஒன்றுதிரண்டனர்.
538 பேரில் 306 பேர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். 270 பேரின் ஆதரவு கிடைத்தாலேயே ட்ரம்ப் ஜனாதிபதியாவது உறுதி எனும் நிலை இருந்தது.
எனினும் 37 பேர் எதிராக வாக்களித்தால், ட்ரம்ப்பின் ஜனாதிபதிக் கனவு தகரும் என்று கருதப்பட்ட நிலையில், பிரதிநிதிகளின் தெரிவிலும் வெற்றிபெற்று ஜனாதிபதியாவதை உறுதிசெய்தார் ட்ரம்ப். (ம-எ)



# ஜேர்மனியில் ட்ரக் விபத்து
## 12 பேர் பரிதாப உயிரிழப்பு


பெர்லின், டிசெ. 21
ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ட்ரக் விபத்தில் 12 பேர் கொல்லப்பட்டதுடன், 48 பேர் காயமடைந்தனர்.
மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள வர்த்தகப் பகுதியில், இரவு வேளையில் இந்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. வாகனத்தைச் செலுத்திய சாரதி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பாகிஸ்தான் அல்லது ஆப்கானிஸ்தானில் இருந்து வந்த அகதியே அவர் என்ற ஆரம்பக்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது.
சம்பவத்தில் உயிரிழந்த வர்களுக்கு ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மேர்கல் தனது கவலையையும் விபத்துக்கு கண்டனத்தையும் தெரிவித்தார். (ம-எ)




2017 ஆம் ஆண்டுக்கான பிரான்ஸ் அழகியாக அலிசியா அய்லீஸ் என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவானார். பிரான்சின் மொன்ட்பிலியர் பகுதியில இந்தப் போட்டி இடம்பெற்றது. பல்வேறுபட்ட கலை, கலாசார நிகழ்வுகளும் அங்கு அரங்கேறின. (ம-எ)

# ஜப்பானில் பறவைக் காய்ச்சல் தடுக்கும் ஏற்பாடுகளும் தீவிரம்

டோக்கியோ, டிசெ. 21
ஜப்பான் நாட்டில் மிக விரைவாக பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது. குறித்த நோய்த் தாக்கத்தை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் அந்த நாடு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளது.
கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அந்த நாட்டின் நீகிட்டா நகரத்தில் பறவைக்காய்ச்சல் தாக்கி 5 லட்சத்து 50ஆயிரம்கோழிகளும், 23ஆயிரம்வாத்துகளும்கொன்று புதைக்கப்பட்டன. இப்போது ஜப்பானின் ஹொக்கைடோ தீவுப்பகுதியில் பறவைக்காய்ச்சல் பரவி வருவது மக்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதையடுத்து அங்கு 2 லட்சத்து 10 ஆயிரம் கோழிகள் கொன்று புதைக் கப்பட்டன. குறித்த நகர மக்கள் தமது வளர்ப்பு பறவை களையும் கொன்று புதைக்க அதிகாரிகள் உத்தரவிட்டனர். (ம-எ)



# அதிர்ந்தது ஈக்குவடோர்



குவிட்டோ, டிசெ. 21
பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள ஈக்குவடோர் நாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நில அதிர்வில் 3 பேர் உயிரிழந்தனர்.
எஸ்மரல்டாசில் மாகாணத்திலேயே இந்த அதிர்வு உணரப்பட்டது. முதலாவது பலமான அதிர்வின் பின்னர் 37 சிறுசிறு அதிர்வுகள் உணரப்பட்டன. இந்த இடரில் 47 பேர் காயமடைந்ததுடன், 700 குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. பொருளாதாரச் சேத விவரம் குறித்த உத்தியோக பூர்வ அறிவிப்புக்கள் வெளியாகவில்லை. (ம-எ)

# அனுமதியின்றி வைக்கப்பட்ட ஜெயாவின் சிலை அகற்றம்

சென்னை, டிசெ. 21
தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் வைக்கப்பட்ட சிலை, தமிழ்நாட்டு அரசின் அனுமதிபெறாத காரணத்தால் அகற்றப்பட்டது.
ஜெயலலிதாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள், பொதுமக்கள் வந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தி வருகின்றனர். முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்களும் அவ்வப்போது சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை ஜெயலலிதா நினைவிடத்துக்கு மீஞ்சூர் ஒன்றியம் நாலூர் ஊராட்சி செயலாளர் முத்துக்குமார் அஞ்சலி செலுத்த வந்திருந்தார்.
அப்போது அவர் தத்ரூபமாக செய்யப்பட்ட சிலையை நினைவிடத்தில் வைத்து வணங்கினார். நீலவண்ண சேலையில் ஜெயலலிதா சிரித்தபடி இருக்கும் 2 அடி உயரம் உள்ள இந்த சிலை ஆந்திராவில் வடிவமைக்கப்பட்டதாகும். புதிதாக ஜெயலலிதாவுக்கு சிலை வைக்கப்பட்ட தகவல் வேகமாக பரவியது. உடனே பொதுப்பணித்துறையினரும், பொலிஸாரும் அங்கு விரைந்தனர். சிலை வைக்க அரசிடம் முறைப்படி அனுமதி பெறவில்லை என்பதால், சிலையை அங்கிருந்து அப்புறப்படுத்தி எடுத்துச் சென்றுவிட்டனர். (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர்க்குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிமன்றே பொருத்தம்

இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான விசா ரணை எப்படி நடத்தப்படவேண்டும் என்பது தொடர்பான மக்களின் கருத்து, இன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

பன்னாட்டு நீதிமன்றத்தின் மூலமே விசாரணை நடத்தப்படவேண்டும் என்கிற மக்களின் கருத்தை, நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணி முன்வைத்துள்ளது என்று முற்கூட்டி வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

இது, இந்த விடயத்தில் அரச தலைவர் கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கு முற்றிலும் எதிரானது. எனினும், பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசித்தே இந்தப் பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் வலியுறுத்துவதால், இந்த விடயத்தை அரச தலைவரால் அவ்வளவு எளிதாகப் புறந்தள்ளிவிடவும் முடியாது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும், மனிதத்துக்கு எதிரான குற்றங்களையும் (இவற்றையே போர்க்குற்றம் என்று பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றது) விசாரிப்பதற்குப் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகளையும், சட்டவாதிகளையும், வழக்குத் தொடுநர்களையும் கொண்ட தனி நீதிமன்றம் ஒன்றைக் கொழும்பு அரசு அமைக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 2015 மார்ச் மாத தீர்மானம் வலியுறுத்துகிறது. தானும் ஒரு பங்காளியாக இணைந்து கொண்டே கொழும்பு அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

இருந்தாலும், அதன் பின்னரான காலங்களில் தீர்மானத்தில் இருந்து நழுவும் போக்கையே கொழும்பின் அரச தலைவர்கள் வெளிகாட்டி வந்தார்கள். வெளிநாட்டு நீதிபதிகளைத் தனி நீதி மன்றத்தில் உள்ளடக்குவதற்குத் தாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறார். அதுமட்டுமல்லாமல், இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைக்கான அழுத்தத்தைக் கைவிட வேண்டும் என்று அமெரிக்க அரச தலைவராகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்பிடம் கோரிக்கையும் முன்வைத்திருந்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய தனி நீதிமன்றத்தை வெளிப்படையாக எதிர்த்துக் கருத்துக்களை வெளியிடவில்லை என்றாலும், அரச தலைவரின் கருத்தை ஆதரிக்கும் விதத்திலேயே செயற்படுகிறார்.

இத்தகையதொரு நிலையில் நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச்செயலணியின் அறிக்கை வெளிவந்திருக்கிறது. இந்தச் செயலணி வடக்கு – கிழக்கு உட்பட பல இடங்களிலும் நடத்திய மக்கள் சந்திப்புக்களில் பெறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தாக போர்க்குற்ற விசாரணைக்குப் பன்னாட்டு நீதிமன்றமே வேண்டும் என்கிற பரிந்துரை அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் பரிந்துரை உண்மையில் வரவேற்கத்தக்கது. பாதிக்கப்பட்ட மக்களின் ஆழமான விருப்பத்தைப் பிரதிபலிப்பது.

கொழும்பு அரசின் நீதித்துறையின் மீது கடந்த 30 ஆண்டுகளில் தமிழ் பேசும் மக்கள் இழந்திருந்த நம்பிக்கையை ஒரு சில வருடங்களில் மீளக்கட்டியெழுப்பிவிட முடியாது. தலைமை நீதியரசரைத் தமிழராக நியமிப்பதன் மூலமும், நீதிமன்ற விடயங்களில் அரச தலையீடு எதுவும் இல்லை என்று அறிக்கையிடுவதன் மூலமும் மட்டும் அந்த நம்பிக்கையைத் தமிழ் பேசும் மக்களிடம் தோற்றுவித்துவிடமுடியாது.

தொடர்ச்சியான செயற்பாடுகளின் மூலமே அந்த நம்பிக்கையை மக்களிடம் மெல்ல மெல்லக் கட்டியெழுப்ப முடியும். அதற்காக அவ்வளவு காலம் போர்க்குற்ற விசாரணைகளைத் தாமதப்படுத்தவும் முடியாது.

அதேநேரம் போர்க்குற்ற விசாரணைகளில் தமிழ் நீதிபதிகளை அதிகம் நியமித்தாலென்ன, சிங்கள நீதிபதிகளை அதிகம் நியமித்தாலென்ன அத்தகைய நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்படும் தீர்ப்பு அடுத்த இனத்தவரால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகமுள்ளது.

இவற்றை எல்லாம் கருத்திலெடுக்கும்போது, பன்னாட்டு நீதிமன்றத்தின் மூலம் நடத்தப்படும் விசாரணையே சரியான தீர்வாக இருக்க முடியும். தனது விடாப்பிடியான நிலையில் இருந்து இறங்கி வந்து அரச தலைவர் அந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# புடம்போட்டுத் தமது தூய்மையை சசிகலாவால் நிரூபிக்க இயலுமா?

மு.ஈழத்தமிழ்மணி



தமிழக அரசியலில் மன்னார்குடியின் ஆதிக்கம் பற்றியே கடுமையாக இன்று விமர்சிக்கப்பட்டு வருகின்றது. அ.தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளராக வரத்துடிக்கின்ற திருமதி சசிகலா நடராஜன் மீது அ.தி.மு.க. அரசியல்வாதிகளின் கவனம் திரும்பியுள்ளது.

முதலமைச்சரான ஓ.பன்னீர் செல்வம் தொடக்கம், அமைச்சர்கள் வரை, எம்.எல்.ஏக்களிலிருந்து அ.தி.மு.கவின் மத்திய தரப் பிரமுகர்கள்வரை, சின்னம்மா என்ற அடைமொழியுடன் சசிகலாவிடம் நேரடியாகச் சென்று கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை ஏற்குமாறு வேண்டி வருவது தமிழக மக்களை ஒருவிதத்தில் முகம் சுழிக்கவும் வைத்திருக்கின்றது.

ஒன்றரைக் கோடி தொண்டர்களைச் சுமந்து கொண்டிருக்கின்ற அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக சசிகலாவை நியமிப்பதை தொண்டர்கள் முழு மனதாக ஏற்றுக் கொள்வார்களா? ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனைக்கு செல்லும் வரையில் சசிகலாவைத் தமது உற்ற தோழியாகவே வைத்திருந்தாரே தவிர, அ.தி.மு.கவைத் தனக்குப்பின் வழி நடத்தக்கூடிய தலைவி சசிகலாவே எனத் தனது வாயால் பகிரங்கமாக ஒருபோதும் அறிவிக்கவேயில்லை.

> திருமதி சசிகலா நடராஜன் மீது அ.தி.மு.க. அரசியல்வாதிகளின் கவனம் திரும்பியுள்ளது. முதலமைச்சரான ஓ.பன்னீர்செல்வம் தொடக்கம், அமைச்சர்கள் வரை எம்.எல்.ஏக்களிலிருந்து அ.தி.மு. கவின் மத்தியதரப் பிரமுகர்கள் வரை சின்னம்மா என்ற அடைமொழியுடன் சசிகலாவிடம் நேரடியாகச் சென்று கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை ஏற்குமாறு வேண்டி வருவது தமிழக மக்களை ஒருவிதத்தில் முகம் சுழிக்கவும் வைத்திருக்கின்றது.

மறைந்த முதலமைச்சரான எம்.ஜி.ஆர் ஸ்தாபித்த அ.தி.மு.கவின் தலைமைப் பொறுப்பேற்ற ஜெயலலிதாவுக்கு, அவரோடு நெருக்கமாக இருந்த சசிகலா வேண்டியவராகவே மாறியதுடன், அவருடன், அவரது கணவரான நடராஜன், சசிகலாவின் சகோதரர் திவாகரன், டாக்டர் வெங்கடேஷ், டி.டி.வி. தினகரன், பாஸ்கரன் என ஒரு கூட்டமே சசிகலாவின் பலத்தோடு போயஸ்கார்டனை ஆக்கிரமித்துக் கொண்டது. சசிகலா, இளவரசி இருவரும் ஜெயலலிதாவுக்குரியவர்களாக இருந்தார்கள். நடராஜனை சசிகலா ஒதுக்கி வைத்திருந்தார்.

பின்னர் ஜெயலலிதா உற்ற தோழியாக சசிகலாவை மட்டுமே தன்னுடன்வைத்துக்கொண்டார். ஆட்சிக்கும் - கட்சிக்கும் சம்பந்தமில்லாத இவர்கள்தான், இன்று அ.தி.மு.கவின் வழி நடத்துநர்களாக மாறியிருக்கின்றனர். 1991ஆம் ஆண்டு முதன் முறையாக ஆட்சியைப் பிடித்த போது, கட்சியிலும் நிர்வாகத்திலும் சசிகலா குடும்பத்தினர் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். சசிகலா உச்சபட்சமாக தன் குடும்பத்தின் வாரிசான சுதாகரனை ஜெயலலிதாவின் வளர்ப்பு மகனாக்கி அழகு பார்த்தார்.

### ஒரே சமயத்தில் சசிகலா மீது வெறுப்புற்ற தமிழக மக்களும் ஜெயலலிதாவும்

வளர்ப்பு மகனது திருமணத்தின் பின், ஜெயலலிதாவுக்கு எதிர்ப்புகள்வலுத்தன. ஜெயலலிதாவின் ஆட்சிமீது மக்கள் வெறுப்படைந்தனர். தோழியான சசிகலாமீது அ.தி.மு.க தொண்டர்கள் வெறுப்புற்றனர். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் ஜெயலலிதா மீது வழக்குகள் குவிந்தன. சிறைக்கம்பிகளையும் எண்ணும் நிலைக்கு ஆளானார் ஜெயலலிதா. வழக்குகள் - வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகள் கோடுகள் என தத்தளித்தார். சசிகலாவின் மீது கடும் கோபம் கொண்டார். 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழகத்தின் சட்டசபைக்கான தேர்தலில் அ.தி.மு.க. தோல்வியடைந்தது மட்டுமல்லாமல், ஜெயலலிதாவும், தான் போட்டியிட்ட தொகுதியிலும் படுதோல்வியடைந்தார். தமது தோல்விக்குத் தம்மைச் சுற்றி நெருக்கமாக இருந்தவர்களான சசிகலா குடும்பத்தினர்தான் காரணம் என்பதை மறைமுகமாகவும் பட்டும் படாமலும் ஜெயலலிதா கூறியிருந்தார். இனி சசிகலா குடும்பத்தினரோடு எந்தவிதமான தொடர்புகளுமில்லை என அறிவித்த ஜெயலலிதா, சில மாதங்கள் கழிய, மீண்டும் அவர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டார்.



சசிகலா ஆரம்பத்தில் அரசியலில் ஈடுபாடற்றவராக இருந்துள்ளார். எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலத்தின் போது அ.தி.மு.கவில் இணைக்கப்பட்ட ஜெயலலிதா, கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராகவும், எம்.ஜி.ஆரால் மக்கள் முன் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தார். மக்களின் ஆதரவும் ஜெயலலிதாவுக்குப் பெருகியது. தமக்குப்பின் ஜெயலலிதாதான் தமது அரசியல் வாரிசு என எம்.ஜி. ஆரால் தெரிவிக்கப்படாதபோதிலும், அவரின் திறமை, ஆளுமைகளை வைத்து ஜெயலலிதாதான் அடுத்த வாரிசு என மக்கள் முடிவெடுத்து விட்டனர்.

ஆனால் சசிகலாவின் நிலைமை அப்படியிருக்கவில்லை. ஜெயலலிதா சுகவீனமுற்று அப்பலோ மருத்துவமனை செல்லும்வரை சசிகலாவைத் தனது வாரிசாக நியமிக்கவுமில்லை. மன்னார்குடியில் சசிகலாவின் அரசியல் ஆளுமை வெளிப்பட்டதுமில்லை. மன்னார்க்குடித்தொகுதியில் அ.தி. மு.கவை சசிகலா குடும்பத்தினரால் வெற்றியடைய வைக்க முடியவில்லை. ஜெயலலிதாவுடன் 25 வருடங்களுக்கு மேல் உற்ற தோழியாக சசிகலா கூடவேயிருந்திருந்தாலும், அதை மட்டும் அடிப்படையாக வைத்தா சசிகலாவை அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிக்க உயர்மட்டப் பிரமுகர்கள் முன் வந்திருக்கின்றனர்?

**அரசியல் தலைமைத்துவத் திறனற்ற அ.தி.மு.க. உயர்மட்டத் தலைவர்கள்**

இதிலிருந்து ஜெயலலிதாவின் அரசியல்வாரிசாக ஆவதற்கான அரசியல் அனுபவ வளர்ச்சியைக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் எவரும் கொண்டிருக்கவில்லை என்பது புலனாகிறது. மறைந்த முதல்வரான ஜெயலலிதா கட்சியைக் கட்டுக்கோப்புடன் வைத்திருந்தமை போன்று தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டுமானால், அதற்கு ஒரே வழி கட்சியின் பொதுச் செயலாளராக சசிகலா பொறுப்பேற்பதே என்ற நிலைப்பாடு கட்சியின் உயர்மட்டத்தலைவர்கள் மத்தியில் நிலவுகிறது. இந்தக் கருத்துக்கு மாற்றுக் கருத்துக் கட்சியில் கிடையாது. 33 ஆண்டுகளாக ஜெயலலிதாவுக்காகவே தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் சசிகலா என திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் முதலமைச்சரான பன்னீர் செல்வம்.

சசிகலாவால்தான் ஜெயலலிதா 1996இல் தேர்தலில் தோற்கவும், வழக்குகளைச் சந்திக்கவும் நேரிட்டது. இதனால் சசிகலா மீது அ.தி.மு.க. தொண்டர்கள் கோபம் கொண்டிருந்தனர். ஜெயலலிதா செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி அப்பலோ மருத்துவமனையில் நீர்ச்சத்துக் குறைவு, காய்ச்சல் என்பவற்றால் பாதிக்கப்பட்டு சேர்க்கப்பட்டு 75 நாள்களின் பின்னர் டிசெம்பர் 5ஆம் திகதி சாவடைந்தார்.

சின்னம்மா என அ.தி.மு.கவின் அமைச்சர்களால் தற்போது அழைக்கப்படுகின்ற சசிகலாவுக்கு அந்தத் தகுதி உண்டா?

சசிகலாவால்தான் ஜெயலலிதா 1996 இல் தேர்தலில் தோற்கவும், வழக்குகளைச் சந்திக்கவும் நேரிட்டது. இதனால் சசிகலா மீது அ.தி.மு.க. தொண்டர்கள் கோபம் கொண்டிருந்தனர். ஜெயலலிதா செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி அப்பலோ மருத்துவமனையில் நீர்ச்சத்துக் குறைவு, காய்ச்சல் என்பவற்றால் பாதிக்கப்பட்டு சேர்க்கப்பட்டு. 75 நாள்களின் பின்னர் டிசெம்பர் 5ஆம் திகதி சாவடைந்தார். சாதாரண சுகவீனம் தானெனச் சொன்ன மருத்துவமனை வட்டாரங்கள், உடல் நிலையில் நல்ல முன்னேற்றம்; பயப்படத்தேவையில்லை என்று அறிக்கையூடாக தகவல்களைக் கொடுத்துக் கொண்டுதானேயிருந்தனர். ஆயினும் ஜெயலலிதாவைச் சுற்றி நின்றவர்கள் ஏன் அவருக்கான சிகிச்சை குறித்து பெரியளவில் அக்கறை காட்டவில்லை என்பதும், அ.தி.மு.க. அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் கேள்விகளாக எழுந்துள்ளன. ஜெயலலிதாவின் உடல் நிலை பாதிக்கப்பட்டு, அப்பலோ மருத்து வமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வேளையில், முதலமைச்சர் பன்னீர்ச் செல்வம் உட்பட அ.தி.மு.க. பிரமுகர்கள் எவருமே அவரை நேரில் பார்க்க அனுமதிக்கப்படவுமில்லை.

சசிகலா குடும்பத்தினரால் மட்டும் ஜெயலலிதா கண்காணிக்கப்பட்டாரேயன்றி, வேறு எவரினது தலையீடுகளுக்கும் சசிகலா அனுமதிக்கவில்லை. அப்பலோ மருத்துவமனையில் 75 நாள்களாக அம்மாவுக்கு எத்தகைய சிகிச்சைகள் நடைபெற்றதோ அவை அத்தனையும் ஆதாரமாக வெளியிட்டு சசிகலா தானொரு குற்றமற்றவர் என்பதை எங்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும் என அ.தி. மு.க.தொண்டர்கள் தற்போது குரலெழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

**அரசியலில் ஜெயலலிதாவின் இடத்தை நிரப்ப எவராலும் இயலாது**


எம்.ஜி.ஆர். விட்டுச் சென்ற இடம், சில ஆண்டுகளின் பின்னர் புரட்சித் தலைவி ஜெயலலிதாவால் நிரப்பப்பட்டதுபோல், இனிமேல் அந்த இடத்தை எவராலும் நிரப்பவும் முடியாது; ஈடுகட்டவும் முடியாது.

ஜெயலலிதா மறைந்து இருவாரங்கள் கடந்த நிலையில், அவரது சாவின் இறுதி நாள் நிகழ்வில் சசிகலாவும் சகாககளும் நடந்து கொண்ட விதங்கள் பற்றிய பல கேள்விகள் சமூக வலைத்தளங்களில் தினமும் உலா வருகின்றன. ஜெய லலிதாவின் மரணத்தில் நீடிக்கும் மர்மம் பற்றி தமிழக மக்களால் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டும் வருகின்றன.

சசிகலாவைக் கட்சியின் பொதுச் செயலாளராக தற்போதைய நிலையில் தெரிவு செய்யமுடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. அ.தி.மு. கவின் விதிமுறையின்படி, தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் நிரந்தர உறுப்புரிமை பெற்ற ஒருவரையே பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிட பொதுக்குழு அங்கீகரிக்கும். சசிகலா மீண்டும் அ.தி.மு.கவில் இணைந்து 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமே ஐந்து ஆண்டுகள் முடிவடைகின்றன. இதனால் சட்டரீதியாகச் சசிகலாவினால் பொதுச் செயலாளர் பதவியை வகிக்க இயலாத நிலை ஏற்படலாம்.

ஜெயலலிதா மறைந்து இரண்டு வாரங்கள் கடந்துவிட்ட நிலையிலும், ஜெயலலிதாவின் மறைவுக்காக தமிழக சாதாரண பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அ.தி.மு.கவை சசிகலா தன்வசப்படுத்திக் கொள்கின்ற அமைதியான நகர்வுகள், நீண்டதொரு அரசியல் பயணத்தில் அவருக்குச் சாதகமாகப் பயனளிக்குமா என்பது கேள்விக்குறியாகவே ஆகியுள்ளது.



# வாசகர் திருமுகம்

## எதற்கும் மனமிருந்தால் இடமுண்டு

எமது யாழ். மக்கள் சுத்தம், சுகாதாரம் என்று வாய் நிறையச் சொல்லிக்கொள்கின்றார்களே தவிர, செயலில் காட்டுகின்றார்களில்லையே. ஏன் இந்த நிலை? குறிப்பாக யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலுக்கு அருகாக தெற்குப்பக்கம் இருக்கின்ற கன்னாதிட்டி காளி கோயில் (சயன்ஸ் ஹோல் அருகில்) பக்கமாக தெரு ஓரத்தில் குவிக்கப்படும் சொப்பிங்பாக் சரைகளால் எந்த நேரமும் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது அத்துடன் சயன்ஸ் ஹோலில் படிக்கும் மாணவ மாணவிகளும் மூக்கைப் பொத்திக் கொண்டு ஓடி ஓடிப்போகின்றார்கள். பாதசாரிகளும், சைக்கிளில் செல்வோரும் மிகுந்த கஷ்டப்படுகின்றார்கள். புட்டுச் சந்தியும் இதே நிலைதான். கழிவுகளை வீதி ஓரத்தில் வீசாது, அந்தக் கழிவுகளைத் தாமாகவே தீயிட்டுச் சாம்பாராக்கி விட்டால் என்ன? திருப்பாவைப் பூசைக்கு வரும் என்போன்றவர்கள், மிகுந்த சிரமத்துக்கு ஆளாகின்றனர். வீதியில் கழிவுகளைப் போடுபவர்களுக்கு இது சமர்ப்பணம். பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமா? இவர்களை உன்னால் கூடத் திருத்த இயலாதா?

*இராசையா ஸ்ரீதரன்*

## சமூக நன்நோக்குடன் செயற்படுவோமே!

வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவின் ஜே/195 கிராம அலுவலர் பிரிவில், சுன்னாகம் மயிலணி வீதியில் அமைந்துள்ள வடலி அம்மன் கோயிலைச் சூழவுள்ள காணிகள், குறிப்பாக வடக்குப் பகுதியிலும், அதனை அண்மித்த வெற்றுக் காணிகளிலும் நுளம்புப் பெருக்கத்திற்கு, குறிப்பாக டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக அடர்ந்து வளர்ந்த புற்களும் சிறு சிறு மரங்களும் வளர்ந்து காணப்படுகின்றன. இதன் காரணமாக, மழை காலத்தில் விசஜந்துக்களின் வதிவிடமாகவும் இது அமைய வழிவகுக்கும். இவ்வாறான நிலைமை நீடிக்குமானால் அயல் குடியிருப்பாளர்கள் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொள்ள வழிவகுக்கும். டெங்கு பரவும் விதத்தில் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருக்கும் காணி உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றம் தண்டம் விதிக்கும் நடைமுறை வழக்கில் இருந்தும், குறித்த பகுதிக் காணி உரிமையாளர்கள் இது விடயத்தில் அக்கறை காட்டாதது கவலைக்குரிய தொன்றே. உரிய சுகாதார அதிகாரிகளின் கவனத்துக்கு இது சமர்ப்பணம்.

*நலன்விரும்பி சுன்னாகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகம்புர துறைமுக விற்பனைக்கு எதிராக மனு

## அரசுக்கு வாசுதேவ எச்சரிக்கை



கொழும்பு, டிசெ 21
அம்பாந்தோட்டை மாகம்புர துறை முகத்தின் 80 வீத உரிமையைச் சீனாவுக்கு விற்கும் இலங்கை அரசின் முயற்சிக்கு எதிராக, நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப் போவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், தமது கட்சியின் சார்பில் இந்த மனுதாக்கல்செய்யப்படும் என்றும் குறிப் பிட்டார்.

பெறுமதிமிக்க நிலங்களை வெளி நாட்டு நிறுவன்ங்களுக்கு அரசு விற்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள நிலங்களைச்சீனாவுக்கு வழங்குவதற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

இந்த நிலையில் மகிந்த அணியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்காரவும் நீதிமன்றத் தடை உத்தரவைப் பெறப் போவதாக எச்சரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# கோத்தபாயவே அடுத்த ஜனாதிபதி

## அடித்துக் கூறினார் சந்தரத்தன தேரர்

கொழும்பு, டிசெ 21
இலங்கையின் அடுத்த ஜனாதிபதி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவே. அந்தத் தகுதி அவருக்கு மட்டுமே இருக்கின்றது. கூடிய விரைவில் இது நிறைவேறும் என அடித்துக் கூறியுள்ளார் பன்னாட்டுப் பௌத்த மையத்தின் மகாநாயக்கரான பரவாஹெர சந்தரத்தன தேரர் கூறியுள்ளார்.

நேற்று முன் தினம் ஜப்பானில் கோத்தபாய தலைமையில் ஒரு பௌத்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வில் ஏராளமான பௌத்தர்களும் பிக்குகளும் கலந்து கொண்டிருந்தனர். அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே சந்தரத்தன தேரர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இப்போது பௌத்தத்திற்காகக் குரல் கொடுத்து அதனைப் பாதுகாத்து சிங்களவர்களைக் காப்பாற்றும் ஒருவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மட்டுமே.

பௌத்தத்தைக் காக்கப் பாடுபடுகின்ற ஒருவரும் சிங்கள இனத்தை பாதுகாக்கின்ற ஒருவருமே அடுத்த தலைவர் ஆக முடியும். அந்த வகையில் முழுச் சிங்களத்தையும் காத்துக் கொண்டு வரும் ஒருவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்.

முழுமையானதோர் சிங்களவராகப் பௌத்தனாக வலம் வந்து கொண்டிருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் சாதாரண மனிதர் அல்லர். சிங்களவர்களைக் காக்கப் பாடுபடும் மாமனிதர்.

இப்போது போலவே எதிர் காலத்திலும் சிங்களவரே எழுக, பௌத்தனே எழுக என பௌத்தத்திற்காக நீங்கள் குரல் கொடுப்பீர்கள் என்று நாம் முழுமையாக நம்புகின்றோம். அதன்படி எதிர்காலத்தில் ஜனாதிபதியாகக் கூடிய தகுதி கோத்த பாயவுக்கு மட்டுமே உண்டு. நிச் சயமாக அவர் இலங்கையில் ஜனா திபதியாக கூடிய விரையில் பதவி ஏற்பார்.

அப்படி அவர் பதவி ஏற்கும்போது இலங்கையில் ஸ்ரீ மஹாபோதியில் இருந்து ஒரு புத்தர் சிலையை கொண்டு சென்று ஜப்பானில் நிறுவவேண்டும். இதனை அவர் மறுக்கமாட்டார் என்பது நிச்சயம் என்றார். (கு)



# நீர் மின் நிலையத்தை எதிர்த்து போராட்டம்

கொழும்பு, டிசெ 21
லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்ஜீன் தோட்டப் பகுதியில் நிறுவப்படவுள்ள நீர் மின் உற்பத்தி நிலையத்தை மக் களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெடுக்குமாறு கோரி ஆர்ப்பாட்டமொன்று நேற்று நடத்தப்பட்டுள்ளது.

வட்டவளை பெருந்தோட்ட கம்பனி நிர்வாகத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்தினால் சுமார் 60 குடியிருப்பாளர்கள் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுவதாக தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீர் மின் உற்பத்தி நிலையத்துக்கான தண்ணீர் உள்வாங்கும் குழாய்களைப் புதைப்பதற்காக மண் அகழ்வு செய்யப்படுவதால் இப்பகுதியில் இடர் ஏற்பட கூடிய வாய்ப்பு இருப்பதாக தோட்டத் தொழிலாளர்கள் கடிதம் மூலம் தோட்ட அதிகாரியின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டுவந்துள் ளனர்.

இதன்போது இந்தத் திட்டத்தை நிறுத்துவதாகத் தெரிவித்த தோட்ட அதிகாரி மீண்டும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கத் தனியார் கம்பனிக்கு இடம் கொடுத்துள்ளார்.

குடியிருப்புப் பகுதிகளுக்குப் பாதிப்பு ஏற்படாது என அதிகாரிகள் உத்தரவாதம் வழங்கினால் மட்டுமே இந்தப் போராட்டத்தினைக் கைவிடுவோம் எனவும், இல்லையெனில் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கூறினர். (கு)



# மாத்தறைப் பொலிஸாரிடம் சிக்கியது அமெ. ஹம்மர் ஜீப்

கொழும்பு, டிசெ 21
பிரபல தொழிலதிபர் ஒருவரின் மகன் செலுத்திச் சென்ற அமெரிக்கத் தயாரிப்பான ஹம்மர் ரக ஜீப் ஒன்றை மாத்தறைப் பொலிஸார் மறித்து விசாரணை செய்துள்ளனர்.

குறித்த ஜீப் பதிவு எண் இல்லாமல் சென்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த வாகனத்தைப் பயன்படுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதம் மற்றும் காப்பீட்டு சான்றிதழ்களைக் காண்பிக்குமாறு பொலிஸார் குறித்த வாகனத்தை ஓட்டிச் சென்றவரிடம் கேட்டுள்ளனர்.

மூன்று மாதங்களுக்குள் மீண்டும் குறித்த வாகனத்தை அமெரிக்காவுக்குத் திருப்பி அனுப்பவுள்ள தாகக் குறித்த சாரதி பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

குறித்த வாகனம் பொலிஸாரால் பின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (கு)

# முன்னாள் தளபதியிடம் 2 1/2 மணிநேர விசாரணை

கொழும்பு, டிசெ 21
முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரியவிடம் இரண்டரை மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

குற்ற விசாரணைப் பிரிவினர் இவ்வாறு நேற்று முன் தினம் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை வழக்குத் தொடர்பிலேயே ஜகத் ஜயசூரியவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியில் ஜகத் ஜயசூரிய வன்னிக் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றியிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பில் ஏற்கனவே இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 17 படையினரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

படைத் தளபதியாகக் கடமையாற்றிய காலத்தில் லசந்த கொலை குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டதா என ஜகத் ஜயசூரியவிடம் விசாரணை நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஜெனரல் ஜகத் ஜயசூரிய தற்போது பிரேஸிலுக்கான தூதுவராகக் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# பிரபா கணேசனுக்கு புதிய பதவி

கொழும்பு, டிசெ 21
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், வன்னி மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான சிறப்புப் பணிப்பாளராக, முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபயகோனினால், நேற்றுக் காலை வழங்கப்பட்டது. (கு)

# பாசிக்குடாக் கடலில் இயந்திரப் பாகங்கள்

மட்டக்களப்பு, டிசெ 21
மட்டக்களப்பு பாசிக்குடா கடற்கரையிலிருந்து வடக்கே 20 கடல் மைல் தொலைவின் ஆழ்கடல் பகுதியில் இயந்திரப் பாகங்கள் காணப்படுவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் அங்கு கப்பல் அல்லது விமானத்தின் பாகங்களை ஒத்த இயந்திரப் பாகங்கள் காணப்படுவதாகக் கடற்படையினரிடம் தெரிவித்தனர்.

பாசிக்குடா கடற்கரையிலிருந்து 20 கடல் மைல் வடக்கு நோக்கி வங்காளக் கடலின் ஆழ்கடல் பகுதியிலேயே இவை தென்படுவதாக மீனவர்கள் கூறினர்.

இவை கப்பலின் பாகங்களா அல்லது பெரிய விமானத்தின் பாகங்களா என்பது குறித்து தங்களால் உறுதிபடக் கூற முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த இடத்துக்குக் கடற்படையினரின் கண்காணிப்பு ஆய்வுப் பிரிவினர் சென்றுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (கு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகறிந்த கவிஞர் ஆன் ரணசிங்க



சாந்தன்

'ஜூலை 83' என்ற தம்முடைய கவிதையில், 'நாற்பதாண்டுகளின் பின் தீ எரிந்தது; இரவு வான் சிவந்தது; எங்கும் வன்முறை...' என்று அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகக் கட்ட விழ்த்து விடப்பட்ட அராஜகங்கள் பற்றிக் கூறிய உலகறிந்த கவிஞர் ஆன் ரணசிங்க தமது தொண்ணூறாவது வயதில் கடந்த17 ஆம் திகதி காலமானார். அவருடைய 'ஜூலை 83' என்ற கவிதை மிகுந்த கவனத்தை ஈர்த்த ஒன்று. அக்கவிதை பற்றிச் சொல்லும் போது 'கடந்த நூற்றாண்டின் நாற்பதுகளின் தொடக்கத்தில் நாஸிகள் அரங்கேற்றிய கொடுமைகளை என் மனக்கண்ணில் மீளக்காட்டியவையாகவே இவ்வன்முறைகள் அமைந்தன. அதன் வெளிப்பாடே இக்கவிதை' என்றார் அவர்.



ஜேர்மானிய யூதராகப் பிறந்து, நாஸிக் கொடுமையின் காரணமாக, இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் தம் பெற்றோர், உற்றார், உறவினரை இழந்த 13 வயது சிறுமியாக, அரும்பொட் டில் தப்பி இங்கிலாந்து சென்று, அங்கு தாதியர் பயிற்சி முடித்து, சிங்களவரான ஒரு மருத்துவப் பேராசிரியரை மணந்து, இலங்கையைத் தமது தாயகமாக்கிக் கொண்டவர். இலங்கை வந்தபின், தமது ஜேர்மன் இளமைக்கால அனுபவங்களை ஆறுமாதகாலம் தொடராக அவர் 'வீரகேசரி' வாரவெளியீட்டில் எழுதியபோது இரை மீட்க நேர்ந்த நினைவுகள், அந்த முப்பதுகளின் பிற்பகுதியில் இழக்க நேர்ந்த தம் உறவுகளைத் தேடும் தாபத்தைத் தூண்டவும் காரணமாயின. ஆன் ரணசிங்கவின் கவிதைகளிலும் ஏனைய ஆக்கங்களிலும் இளவயதின் அந்த அழிக்கவொணா வலிகளும் வடுக்களும் இயல்பாகவே பிரதிபலித்தன. நாஸிக் கொடுமைகள், நரக வர்ணனைகளையும் மிஞ்சிய 'ஒஷ்விற்ஸ்' போன்ற யூத இன ஒழிப்பு முகாம்கள் போன்றவை பற்றிய பதிவுகளும் படிமங்களும் அவர் கவிதைகளில் இடம் பெறுவன.

'துவம்சம் –1944' என்ற கவிதையில் தம் தாயை இப்படி நினைவு கூர்கிறார்:

> 'உலகின் எந்த மூலையில் உனை அவர் புதைத்தனர், அறியேன்.
> உன் புதைகுழி மேற்படர்ந்து காய்ந்திறுகிக் குத்தும் கட்டைப்புற்களில்
> எந்த ஊதற் காற்றின் ஊளை இரைகிறதோ...
> மென்னீல உறைபனியின் குத்தும் கொடுங் குளிரில் நிர்வாணமாகி– நீ
> உடல் விறைக்க நடந்த அந்த டிசெம்பர் காலை!
> அப்போதெனை நீ நினைந்தாயோ அம்மா.
> சாம்பல் பூத்த விடிகாலை வானின் கீழ் அதுவே முடிவென அறிந்து நீ
> நடந்த அக்கணம், வெறுமையின் முடிவு. வெறுமையின் தொடக்கமும்!
> அப்போதெனை நீ நினைந்தாயோ?'

ஆன் ரண சிங்கவின் கவிதைகள் பத்துக்கு மேற்பட்ட தொகுதிகளக வெளி வந்துள்ளன. ஆங்கிலத்தில் மட்டுமன்றி ஜேர்மன் மொழியிலும் எழுதினார். மொழி மாற்றங்களும் செய்துள்ளார். அவருடைய கதைகளும் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இலங்கை ஆங்கில எழுத்தாளர் கூட்டுறவு என்கிற அமைப்பை உருவாக்கி அதன் உயிர் நாடியாக வும் செயற்பட்டவர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய வெளியீட்டுப்பிரிவில் நிறைவேற்றுச் செயலராக 1975லிருந்து 1990 வரை பணிபுரிந்தவர். தமிழர் நிலைமைகள் பற்றிய அக் கறை மிக்க கலைஞராக அறியப்பட்டவர். இலங்கையின் கவிதை வரலாற்றில் மட்டுமன்றி, உலகக் கவிதை வரலாற்றிலும் அவருக்கென ஓர் இடமுண்டு.

> அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகக் கட்ட விழ்த்து விடப்பட்ட அராஜகங்கள் பற்றிக் கூறிய உலகறிந்த கவிஞர் ஆன் ரணசிங்க தமது தொண்ணூறாவது வயதில் காலமானார். அவருடைய 'ஜூலை 83' கவிதை மிகுந்த கவனத்தை ஈர்த்த ஒன்று.

# மூன்று நூல்கள் வெளியீடு




யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணியின் மூன்று நூல்கள் அண்மையில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்டன. கோப்பாய் ஆசிரிய கலாசாலை உப அதிபர் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கலாமணியால் எழுதப்பட்ட 'எம்மவர்கள்', 'பூதத்தம்பி' 'தெளிதல்' ஆகிய மூன்று நூல்களுமே வெளியிடப்பட்டன.

நூலின் வெளியீட்டுரையை எழுத்தாளர் தெணியானும், ஆய்வுரைகளை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.கமலநாதன் யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணா மற்றும் ஓய்வுநிலை வங்கியாளர் மா. கிருஸ்ணானந்தம் ஆகியோர் நிகழ்த்தினர். (சு-108)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நா.யோகேந்திரநாதன்

போர்க்கால இலக்கியங்கள்-12

# மூத்த ஊடகவியலாளர் கோபுவின் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை



இந்திய அமைதிப் படையின் சிப்பாய்கள் எல். ரீ. ரி.ஈ என்று இளைஞர் களையும் வயது முதிர்ந்தவர்களையும் கைது செய்து செய்த சித்திரவதைகளும் அதைப் பார்த்து அவர்கள் சிரித்து மகிழ்வதையும் பார்த்த போது சிறுவயதில் படித்த, அந்திரேசும் சிங்கமும் என்ற கதைதான் நினைவுக்கு வரும். கிரேக்க நாட்டில் சிறை வைத்திருக்கும் கைதியை மிருகங்கள் வேட்டையாடிப் புசிப்பதை ராஜகுடும்பங்கள் பார்த்து ரசிப்பது அந்தக் கதையின் முக்கிய அம்சம். இந்தியாவிலும் சமஸ்தான மன்னர்கள் மனிதரின் துன்பத்தில் இன்பம் கண்டிருக்கும் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

அதேபோல் இப்போது வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வந்த இந்தியப் பண்பாடு தவறாத ஒழுங்குக் கட்டுப்பாடுமுள்ள இந்திய இராணுவத்தின் அந்தப் படையினர் அப்பாவித் தமிழ் மக்களின் கண்களையும், கை, கால்களையும் கட்டி வைத்துத் துன்புறுத்தி இன்பம் கண்டு மகிழ்ந்தனர்.

இந்திய அமைதிப் படை இலங்கையில் மேற்கொண்ட கொடூர நடவடிக்கைகளையும் அவர்களின் வக்கிர மனப்பான்மையையும் இதைவிட அழுத்தமாக எவரும் சொல்லிவிட முடியாதெனவே எண்ணத் தோன்றுகிறது. உயிருள்ள மனிதர்களைச் சிங்கம் கடித்துக் குதறி உண்பதையும், அந்த மனிதன் தாங்கவொண்ணா வேதனையில் துடிதுடித்துக் கொஞ்சம் கொஞ்சமாக உயிர் விடுவதையும் இரசித்துக் களிக்கும் குரூர மனப்பான்மையுடன் தமிழ் மக்களை வதம் செய்த இந்தியப் படையினரின் காந்தீய முகமூடி நூலாசிரியரால் கிழிக்கப்படுகிறது.

### மூத்த ஊடகவியலாளர் கோபு

கோபு என அழைக்கப்படும் ஈழமண்ணின் மூத்த ஊடகவியலாளரான எஸ்.எம்.கோபாலரத்தினம் இந்தியப் படையினர் ஈழமண்ணில் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர் ஓர் ஊடகவியலாளராக எதிர்கொண்ட நெருக்கடிகளையும் அவரைப் பாதித்த சம்பவங்களையும் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட மிருகத்தனமான கொடுமைகளையும் இந்த 'ஈழமண்ணில் இந்தியச் சிறை' என்ற நூலில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். இது கட்டுரைவடிவில் அமைந்திருந்தாலும் ஒரு நாவலுக்குரிய ஓட்டத்துடன் அமைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்தியப் புலிகள் போர் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒரு பிராந்திய வல்லரசு ஒரு விடுதலை அமைப்பை முற்றாக அழித்து விடக் கங்கணம் கட்டிக் களமிறங்கியபோது ஒரு விடுதலை அமைப்பு தனித்து நின்று துணிவுடனும் வீரத்துடனும் அர்ப்பண உணர்வுடனும் போராடி, அந்த வல்லரசையே மூக்குடைபட வைத்த ஒப்பற்ற வரலாறாகும். விடுத லைப் புலிகளின் ஆற்றலையும் தந்திரோபாய நகர்வுகளையும் கண்டு உலகமே வியந்துபோன நாள்கள் அவை. அதேவேளையில் இந்திய இராணுவம் மேற்கொண்ட போர்க்குற்றங்களும் மனித குல விரோத நடவடிக்கைகளும் அந்தக் காலத்தில் உச்சம் பெற்றிருந்தன. கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகள், காரணமற்ற கைதுகள், மக்களை உயிருடன் கட்டிப் போட்டு விட்டு அவர்கள் மீது டாங்கிகளை ஏற்றி நசித்துக் கொல்லல், வாகனங்களில் செல்வோரை இறக்கி வைத்துத் தாக்குதல் போன்ற கொடுமைகள் நாளாந்தம் அரங்கேற்றப்பட்டன.

> ஒரு சிகரெட் புகைக்கும் நேரத்தில் புலிகளை அழிந்து விடுவோமெனச் சவால் விட்டு வந்தவர்களால் இரண்டு வருடங்களிலும் கூடப் புலிகளை அழிக்க முடியவில்லை. அந்த வெப்பியாரத்தைப் பொது மக்கள் மீது தீர்த்தனர். இராணுவ முகாம்களுக்குள் கொண்டு செல்லப்படும்போதும்—வெளியே கொண்டு வரப்படும் போதும் கண்களையும் கையையும் கட்டிவிட்டு நடக்க வைப்பது, தடுக்கி விழுந்தால் கொட்டனால் 'சலோ' என்று அடிப்பது என உள்ளே செல்லும் போதே துன்புறுத்தல்கள் ஆரம்பிக்கப்பட்டு விடும்.

இவை வெளிவரா வண்ணம் ஊடக நிறுவனங்கள் அடித்து நொறுக்கப்பட்டும், எரியூட்டப்பட்டும் நிர்மூலமாக்கப்பட்டன. ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். பலர் அச்சுறுத்தல் காரணமாகக் கொழும்புக்கு ஓடிவிட்டனர்.

அதேவேளை யில் இந்திய வானொலி நேசக்கரங்கள் என்ற நிகழ்ச்சி ஊடாகப் புலிகளை வசைபாடியும் அமைதிப் படையின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தியும் பரப்புரைகளை மேற்கொண்டது. இடதுசாரிகளின் ஒருபகுதியினரால் இன்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர எழுத்தாளனாகப் போற் றப்படும் ஜெயகாந்தன் இந்திய வானொலியில் தொடர்ந்து எமது போராட்டத்தை கேவலப்படுத்தி ஆற்றிய உரைகளை எவரும் இலகுவில் மறந்துவிடமுடியாது.

இப்படியான ஒரு கொடிய இருண்ட காலத்தைப் பற்றியோ அப்போது மக்கள்பட்ட துன்பங்கள், உயிரிழப்புக்கள் பற்றியோ, விடுதலைப் புலிகள் நடத்திய அர்ப்பணிப்புடன் கூடிய போராட்டங்கள் பற்றியோ படைப்புக்கள் ஒன்றிரண்டே வெளிவந்தன. இவற்றை ஆவணப்படுத்தும் வகையில் கட்டுரைத் தொகுப்புக்களோ நாவல்களோ, சிறுகதைகளோ, கவிதைகளோ குறிப்பிடத்தக்க அளவுக்கு வெளிவந்ததாகத் தெரியவில்லை. ரஜனி திரணகமவால், 'முறிந்த பனை' என்ற ஒரு படைப்பு வெளிவந்த போதிலும், அது விடுதலைப் புலிகளையும் இந்திய அமைதிப் படையையும் ஒரே அளவு கோலால் வெளிப்படுத்தி விடுதலைப் போராட்டத்தின நியாயங்களை உதாசீனம் செய்திருந்தது. ஓரிரு சிறுகதைகள், கவிதைகள் வெளிவந்தாலும் அவை நிலையான இடத்தைப் பிடிக்க முடியவில்லை.

### இடையூறுகளுக்கு மத்தியில்

"களத்தில் காத்தான்" என்ற கூத்தும், "வெற்றிக் களத்தில் வீரவேங்கை" என்ற கூத்தும், "இன்னுமொரு நாடு" என்ற வீடியோ படமும் வெளிவந்த போதிலும், அவை முழுமையாக அந்தக்கால கட்டத்தை வெளிப்படுத்தின என்று சொல்லிவிட முடியாது.

இப்படியான நிலையில் கோபுவால் பல இடையூறுகளைத்தாண்டி 2000ஆம் ஆண்டில் 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற இந்தப் படைப்பு வெளிவந்துள்ளது.

இதை எழுதித் தயாரித்து இந்தியாவுக்குக் கொண்டு சென்று, நூலாக வெளியிடுவதற்கு இவர் எடுத்த முயற்சிகளையும் அதில் அடைந்த தோல்வியையும் தன்னுரையில் மிகவும் வருத்தத்துடன் விவரிக்கிறார். இலங்கையைச் சேர்ந்த இரு எழுத்தாளர்கள்கூட இதை வெளியிட உதவி செய்வதுபோல் போக்குக்காட்டியது மட்டுமன்றி, அந்தப் பிரதியைக்கூட அவரால் திரும்பப் பெற முடியாத நிலையை ஏற்படுத்தினர் என்பதை அவர் குறிப்பிடும் போது சிலரின் இடதுசாரி வேடங்களை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. விடுதலைக்காகத் தமிழ் மக்கள் பட்ட இன்னல்களை ஆவணப்படுத்தக்கூடிய ஒரு வரலாற்றுப் பதிவை முடக்குவதில் [illegible] சந்தர்ப்ப வாதிகளாக விளங்கியுள்ளனர் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

எப்படியிருப்பினும் இது இலங்கையிலேயே 2000ஆம் ஆண்டிலும் 2002ஆம் ஆண்டிலும் இருபதிப்புகளாக வெளிவந்து, நியாயமான படைப்புக்களை எந்த ஒரு சக்தியாலும் தடைசெய்து விட முடியாது என்பதை நிரூபித்தது.

இதன் முன்னுரையில் குறிக்கப்படும் ஒரு விடயம் இன்றைய கால கட்டத்துக்கும் பொருத்தமாக உள்ளது. தமிழ்த் தலைமைகள் இந்திய மாயையிலிருந்து விடுபடவேண்டிய தேவை இந்த நூல் மூலம் தெளிவு படுத்தப்பட்டாலும், இன்னும் ஒரு சாரார் அதிலிருந்து விடுபடவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இந்தியாவைப் புரிந்து கொள்வதில் தமிழ் அரசியல் தலைமைகள் இந்திய மக்களின் அனுபவங்களைக் கணக்கில் எடுக்கவில்லை. இந்தியாவின் விடுதலை அமைப்புகளுடனோ புரட்சிகர அமைப்புகளுடனோ எமது முக்கிய இயக்கங்கள் கட்சிகள் எவையும் உறவைப் பேண விரும்பவில்லை.

இந்தியா விடுதலை பெற்ற ஜனநாயகம் செழித்தோங்கும் ஒரு நாடு என்ற கருத்தே இவர்களிடம் மேலோங்கியிருந்தது. இந்த மாயையிலிருந்து முதலில் விடுபட்டது விடுதலைப் புலிகள்தான். ஆயினும் இதுவும் முற்று முழுதான புரிதல் என்று சொல்வதற்கில்லை. ஒருவகை அனுபவவாத மட்டத்திலேயே அது உள்ளது.

இந்தக் கருத்தை நிரூபிப்பது போல் கோபுவை விசாரணை செய்து ஓர் அதிகாரி அவரிடம் கூறுகிறார். "நாங்கள் இங்கிருந்து போக மாட்டோம். ஒரு எல்.ரீ.ரி.ஈ கூட இல்லாமல் ஒழித்த பின்தான் இங்கிருந்து போவோம். எங்களைச் சிறிலங்கா ஆமி எதிர்த்துச் சண்டை போட்டால் நாங்கள் அவர்களுடனும் சண்டை பிடிப்போம்."

அதாவது இந்திய ஜனநாயகத்தின் ஆக்கிரமிப்புச் சிந்தனை அவர் வார்த்தைகளில் தெளிவாகவே வெளிவந்தன. இந்த விடயத்தில் சிங்களத் தலைமைகள் தெளிவாகவே உள்ளன. இந்தியாவைத் தமது நோக்கங்களுக்கும் பயன்படுத்துமளவுக்குத் தந்திரமான–வெற்றிகரமான அரசியலைக் கையாண்டு வருகின்றன. ஆனால், தமிழ் தலைமைகளோ இந்தியாவால் பயன்படுத்தப்படும் அளவுக்கு நிலைதாழ்ந்து போய்விட்டன. அதனாலேயே தங்களால் பயன்படுத்த முடியாத விடுதலைப் புலிகளை முற்றாகவே அழித்துவிடத்திட்டம் தீட்டியது இந்தியா.

ஒரு சிகரெட் புகைக்கும் நேரத்தில் புலிகளை அழிந்து விடுவோமெனச் சவால் விட்டு வந்தவர்களால் இரண்டு வருடங்களிலும்கூடப் புலிகளை அழிக்க முடியவில்லை. அந்த வெப்பியாரத்தைப் பொது மக்கள் மீது தீர்த்தனர். இராணுவ முகாம்களுக்குள் கொண்டு செல்லப்படும் போதும்- வெளியே கொண்டு வரப்படும் போது-கண்களையும் கையையும் கட்டிவிட்டு நடக்க வைப்பது, தடுக்கி விழுந்தால் கொட்டனால் 'சலோ' என்று அடிப்பது என உள்ளே செல்லும்போதே துன்புறுத்தல்கள் ஆரம்பிக்கப்பட்டு விடும். அதிகாரி ஒருவன் மதுபோதையில் வந்து சிறை அறைகளைத் திறந்து அலுமினியக் கம்பிகளால் எந்தவிதக் காரணமுமின்றிக் கைதிகளை அடிப்பான். காயப்படுவது பற்றியோ குருதி ஒழுகுவது பற்றியோ அவன் பொருட்படுத்துவதில்லை. இளைஞர்கள் மீது அவனின் அட்டகாசம் உச்சம் பெறும். படுப்பதற்குக் கூட இடம்போதாத கூட்டுக்குள்தான் இத்தனை கொடுமைகளும் நடக்கும். அவன் இரவில் அலுமினியக் கம்பியுடன் வந்தால் ஒவ்வொரு அறையாக அலறல் கேட்க ஆரம் பித்துவிடும்.

### சோவின் சினிமாப்படம்

இந்தியா இலங்கைத் தமிழ் மக்களை பாதுகாத்த இலட்சணம் இப்படித்தான் இருந்தது. நடிகரும் ஊடகவியலாளருமாகிய "சோவால் முகமது பின் துக்ளக் என்ற ஒரு சினிமாப் படம் தயாரிக்கப்பட்டது. இது இந்திய அரசியல்வாதிகளின் மோசடிகளைக் கிண்டல் செய்யும் விதத்தில் அமைந்திருந்தது அதில் ஒரு காட்சி.

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த ரசனையில் உள்ளது பயிலத் தொடங்குவதன் ஆரம்பம்

**வீணை இசைக்கலைஞர் விஜயலட்சுமி சண்முகராஜாவுடன் ஒரு நேர்காணல்**

சி.ப.வேந்தன்

இலங்கை வேந்தன் இராவணன் சிவனுக்கு வீணை இசையை மீட்டியே வழிபாடு செய்பவன் என்பதும், அவனுடைய கொடியில் வீணைச்சின்னமே உள்ளது என்பதும், அவனுக்கு மிகவும் பிடித்த அவனால் மிகுந்த திறமையாக மீட்டக்கூடிய இசைக்கருவி வீணை என்பதும், அதே போன்று அந்தக் கவிஞனால் யாழ்பாடிப் பரிசுபெற்று வீணாகானபுரம் எனும் பெயர் கொண்டு புகழ்பெற்றது யாழ்ப்பாணம் என்பதெல்லாம் எமக்கும் இசைக்குமான நீண்ட வரலாற்றைச் சுட்டி நிற்கின்றன.

பார்வதி தேவியின் துயில்நிலையைக் கண்ட பரமசிவனின் எண்ணத்தில் உருவான இந்த வீணை இசைக்கருவி கலைமகளின் கைகளுக்கு சென்றடைந்து இன்று வரையிலும் இந்த உலகிற்கு இசையின்பத்தை ஊட்டி வருகின்றதென நம்பப்படுவதும் எம் ஆன்மீக வரலாறு.

இவ்வாறு கேட்பவர் மனதை மழைநீர் போன்று கரைந்தொழுகச்செய்து இசைவெள்ளத்தில் மிதக்கச்செய்யும் வீணை இசையை நாள் முழுதும் கேட்டுக்கொண்டிருந்தாலும் தீராது என்பது யாவரும் அறிந்ததே. அந்த தெய்வீக இசை காற்றில் கலந்துவந்துகொண்டிருந்த ஒரு மாலைப்பொழுதில் வீணை இசைக்கலைஞர் விஜயலட்சுமி சண்முகராஜா அவர்களை புதன் பொய்கை இதழுக்காக சந்திக்கச் சென்றிருந்தேன்.

தன்னுடைய வீணா விஹார் இசைமன்றத்து மாணாக்கருக்கு வீணை இசையை கற்பித்துக் கொண்டிருந்தவர், என்னை இசையோடு வரவேற்றார்.

வீடு முழுவதும் வீணைகளாலும், அழகிய சிலைகளாலும், ஓவியங்களாலும் நிறைந்து கிடக்கிறது. கலாபூசணம், சங்கீத கலாவித்தகர், யாழ் ரத்னா என பல விருதுகளால் கௌரவிக்கப்பட்டிருக்கும் விஜயலட்சுமியுடன் அவருடைய இசை அனுபவங்கள் பற்றிப் பேசத்தொடங்கினேன். மெல்லிய புன்சிரிப்போடு சத்தமின்றிய ஓசையில் உரையாடினார்.

## இசைப் பரம்பரை இல்லை

நான் இசைப்பரம்பரை என்றதெல்லாம் இல்லை ஆனா எங்கட குடும்பத்தில இசையில எல் லாருக்கும் ஆர்வம் இருக்கு. சின்னவயசிலயே எனக்கு சங்கீதத்தில நல்ல விரும்பம். அந்த வயசில பாட்டுகளும் பாடுறனான். பாடசாலையிலயும் சங்கீதத்த ஒரு பாடமா எடுத்தனான். மூன்றாம் வகுப்புப் படிக்கேக்கயே இசைப்புலவர் சண்முகரட்ணம் மாஸ்ரரிட்ட சங்கீதம் படிச்சனான். அந்தக் காலப்பகுதிகளில் பாடசாலைகளில இசை சம்மந்தமான எந்த நிகழ்ச்சியெண்டாலும் பங்குபற்றுறனான். எனக்கு சங்கீதத்தில இருக்கிற ஆர்வத்தைப் பாத்திற்று என்ர குடும்பத்தினர் நமசிவாயம் என்ற ஆசிரியர் ஒருவரை வீட்டில வந்து சொல்லித்தாறதுக்கு ஒழுங்குபடுத்தி விட்டினம். பிறகு கொஞ்சக் காலத்தால என்ர ஆர்வம் நடனத்தின்ர பக்கம் போட்டுது. அப்ப கொஞ்சக்காலம் இதை விட்டிட்டு நடனத்தை ஏரம்பு சுப்பையா மாஸ்டரிட்ட பழகிக்கொண்டிருந்தன். பிறகு ஏனோ அதையும் விட்டிட்டன். (சிரிக்கிறார்) நான் எப்பவுமே சும்மா இருக்க மாட்டன். எந்த நேரமும் எதையாவது செய்துகொண்டிருக்கிறதுதான் வேலை. தையல் பழகிறது, கைவினைப் பொருள்கள் செய்யிறது, கோலங்கள் இப்பிடி எல்லாத்தையும் தொடங்கீற்று பிறகு விட்டிடுவன். இந்தக்காலப்பகுதியில தான் என்ர நண்பர் மூலமா 67ம் ஆண்டு இராமநாதன் அக்கடமிக்கு விண்ணப்பம் போட்டு அதில தெரிவுசெய்யப்பட்டு அங்க போனன் விண்ணப்பம் போடும் போதே வீணை பழகுவம் என்றுதான் போட்டது. ஆனா அங்க எங்க வீணை பழகிறது, வேற ஏதாவது செய்வம் என்றுதான் நினைச்சது. ஆனா அங்க போனா வீணையை கண்டவுடன அதில ஈர்ப்பு வந்திட்டது. அங்கதான் முதன்முதலா வீணையைப் மிக அருகில பார்த்தனான். கனகசுந்தரம் மாஸ்டர்தான் முதன்முதலா வீணை பழக்கினவர். பிறகு சந்தானம் என்றவரிட்ட பழகினனான். அதுக்குப் பிறகு இந்தியாவில இருந்து கல்யாணகிஸ்ண பாகவதர் என்று ஒருவர் வந்து படிப்பிச்சவர். அதோட விசய ரட்ணம் பேரம்பலம் என்றவரிடமும் படிச்சனான். வீணை படிச்சுக் கொண்டிருக்கேக்கதான் மற்றக் கலைகளை மாதிரி இதை என்னால விடமுடியாது என்று எனக்குத் தோன்றத் தொடங்கிச்சுது. அந்தளவுக்கு இதில நான் ஆர்வத்தோட ஈடுபடத் தொடங்கீற்றன். பிறகு இதில பட்டமும் கிடைச்சு வெளியேறினன். அந்த பிடிப்புத்தான் இன்றைக்கு வரைக்கும் என்னை இதில ஈடுபட வைக்குது. இப்ப பல்கலைக் கழகங்களில வருகைதரு விரிவுரையாளராவும் பாடசாலைகளிலயும் பயிற்றுவித்துக் கொண்டு இருக்கிறன்.

அப்பவே வீணை படிக்க வாறவையின்ர தொகை மற்ற நடனம், சங்கீதம் (வாய்ப்பாட்டு), தோலிசைக் கருவிகள், மேலைத்தேய கருவிகள் என்று எல்லாத்தையும் விட சரியான குறைவாக இருந்தது. என்னோட படிச்சதே முதல்ல நாலைஞ்சுபேர் தான். ஆனா பிறகு எல்லாரும் இதில நல்ல ஈடுபாடு காட்டத்தொடங்கீற்றினம்.

நான் படிச்சுக்கொண்டு இருக்கேக்கயே பயிற்சியா இருக்கும் என்பதற்காக வீட்டிலயும் ஒன்றிரண்டு பேருக்கு இதை சொல்லிக்குடுக்க வெளிக்கிட்டன். அதனால எனக்கு இது நல்ல பரிச்சயமாகத் தொடங்கிற்று. நாளடைவில என்னட்ட படிக்க வாறவையின்ர தொகை கூடத் தொடங்க எனக்கு இன்னும் கூடுதலா வீணையோட என்ர பொழுதை செலவழிக்க சந்தர்ப்பம் கிடைச்சது. நாளடைவில நான் ஓய்வெடுக்க முடியாத அளவுக்கு நிறையப் பேர் வந்து கற்றுக் கொண் டவை.

## வீணா விஹார மன்றம்

அதிலிருந்து வீணா விஹார் என்ற இசைமன்றம் நிறுவி இன்றுவரையும் நடத்திக்கொண்டு வாறன். அதே நேரம் ரசிக ரஞ்சனா சபாவிலையும் வகுப் புக்கள் எடுத்தனான். முன்பு ஒவ்வொரு பௌர்ணமி அன்றைக்கும் கச்சேரிகள் செய்துகொண்டுவந்தனான். பிறகு யுத்தசூழ்நிலையில தடைப்பட்டுப்போச்சு.

இதைத்தவிர புல்லாங்குழல், கிற்றார் இவற்றையும் வாசிப்பன். இதில முழுமையான திறன் இல்லாட்டியும் ஏதோ ஓரளவு அதில பரிச்சயம் இருக்கு.

நான் முதலில சொன்னது மாதிரி எல்லாத்தையும் செய்து பார்க்கிறது என்னுடைய வழக்கம். அப்படித்தான் ஒருமுறை யாழ்ப்பாணத்தில நடத்திய ஓவியக் கண்காட்சி ஒன்றைப் பார்க்க நான் போயிருந்தனான். அங்க இருந்த ஓவியங்களில பிரதிமை ஓவிய வடிவம் எனக்கு நல்லாப் பிடிச்சுக்கொண்டது. அப்ப அதை நான் நிறைய நேரம் நின்று பார்த்துக் கொண்டிருந்தன். அது சம்பந்தமான நிறைய விடயங்களைக் கேட்டு அறிஞ்சு கொண்டன். அப்ப எனக்கு அதில இருந்த ஆர்வத்தைப் பார்த்திட்டு அந்த ஓவியத்த வரைந்த ஓவியர் கலைமாமணி மு. இராசரத்தினம் மாஸ்டர் அது சம்பந்தமான நிறைய விடயங்களை சொன்னார்.; பிறகு அவரே எனக்கு பிரதிமை ஓவியக்கலையை கற்றுத்தந்தார். எனக்கு பல தடவைகள் ஓவியமாதிரியாக அவர் இருந்திருக்கிறார். எனக்கு நேரம் கிடைக்கும் பொழுதுகளிலெல்லாம் ஓவியம் வரையுறது என்ர வழக்கம். அது எனக்கு சந்தோசத்தையும் மன அமைதியையும் கொடுக்கிறமாதிரியான உணர்வு இருக்கும். பரபரப்பான அன்றாட வாழ்க்கையில இது ஓர் ஆசுவாசமான அமைதியைத் தருவதைப் போல இருக்கும்.

வீணா விஹார் என்ற இசைமன்றம் நிறுவி இன்றுவரையும் நடத்திக்கொண்டு வாறன். அதே நேரம் ரசிக ரஞ்சனா சபாவிலையும் வகுப் புக்கள் எடுத்தனான். முன்பு ஒவ்வொரு பௌர்ணமி அன்றைக்கும் கச்சேரிகள் செய்து கொண்டு வந்தனான். பிறகு யுத்தசூழ்நிலையில தடைப் பட்டுபோச்சு.

## முதலில் நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள்

இப்ப ஓரளவு ஆர்வமா பிள்ளைகள் வீணையைக் கற்றுக்கொள்ள வருகினம். ஆனாலும் அவை கூடுதலா இதுக்கு முக்கியத்துவம் குடுக்கினமா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேணும். சில பெற்றோர் தங்கடை விருப்பத்துக்காக தங்கட பிள்ளைகளை கொண்டு வந்து பயில விடுகினம். ஆனால் பிள்ளைகளுக்கு அதில முழு ஈடுபாடு இருக்கிறதில்லை இவையெல்லாம் கற்றுக்கொள்ளுறதில நிறையச் சிக்கலைக் கொண்டு வரும். அதனால நான் சில பெற்றோருக்கு நீங்கள் முதலில் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள் என்று சொல்வதுண்டு. எந்தவிசயமும் ஆர் வமும் விருப்பமும் இருந்தால் மட்டுமே அதில முழுமை பெறமுடியும்.

குறிப்பிட்ட சில பாடசாலைகளில வீணை இருக்கு அதையும் பிள்ளைகள் கற்றுக் கொள்வதோ ஆசிரியர்கள் கற்றுக்கொடுப்பதோ இல்லை. ஏதாவது விழாக்கள் என்றால் மாத்திரம் அதை எடுத்து ஏதோ சமாளிச்சு வாசிச்சு நிகழ்வை முடிச்சுப் போடுவினம். அதைப் போல பல்கலைக்கழகங்களிலயும் பாடத்திட்டத்துக்கும் பரீட்சைக்கும் ஏற்றமாதிரி படிச்சிட்டு அதை ஒப்பிக்கிறதோட முடிஞ்சிடும். மேலதிகமா எதையம் தேடுவதோ கற்றுக்கொள்வதோ இல்லை. ரிவியில தென்னிந்திய நிகழ்ச்சிகளில சின்னக் குழந் தைகள் மிக அழகா சங்கீதத்திலயும் இசைக்கருவிகளிலயும் நடனம் நாடகங் களிலயும் வாறதைப் பாத்திட்டு எல்லாப் பெற்றோரும் தங்கட பிள்ளைகளும் அப்படி வரவேணும் என்று ஆசைப்படு கினமே தவிர அதுக்கான முயற்சிகளை எவரும் எடுக்கிறதில்லை. கேட்டா படிப்புக் குழம்பிடும் என்று காரணம் சொல்கிறார்கள். இது எந்தளவுக்கு உண்மை என்று தெரியாது. இந்தியாவில செய்வதைப்போல மார்கழி இசைத் திருவிழா போன்று இங்கேயும் வரவேணும். அதுக்கு முதலில நல்ல கலைஞர்கள் உருவாகவேணும் என ஆதங்கப்படுகிறார் இவர்.

மகரிஷி யாக்ஞவல்கியர் சொல்வதைப் போன்று சுஸ்வரமாக வீணையை மீட்டிக் கொண்டு, சுருதிசுத்தத்தோடு, லயம் தவறாமல், நாதோபாசனை செய்து விட்டால் போதும் – தியானம் வேண்டாம். யோகம் வேண்டாம் ; தவம் வேண்டாம்; பூஜை வேண்டாம் ; கஸ்டமான சாதனைகள் வேண்டாம். இதுவே மோட்சத்துக்கு வழிகாட்டிவிடும். ஆக ஓர் இசைவாத்தியக் கலைக்கு மோட்சத்தையே அளிக்கும் வல்லமை வாய்க்கப் பெற்றதென்றால் அது எத்தனை தெய்வீக சக்தி வாய்ந்த கருவியாக இருக்கமுடியும். வீணைக் கொடிப்பரம்பரையில் தோன்றிய நம்மில் எத்தனை பேர் வீணை இயையை ரசிக்கிறோம் என்பதே கேள்விக்குறியாகத்தான் உள்ளது. பலவற்றை நாம் கொலுவிலும் கொடியிலும் மட்டுமே வைத்திருக்கிறோம் அதில் வீணையும் ஒன்று. ரசிகத்தொடங்குவதில்தான் உள்ளது பயிலத்தொடங்குவதன் ஆரம்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# ஞானாம்பிகை என்ற தமிழன்னைக்கு முத்துவிழா

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் ஆஸ்திரேலியாவின் சிட்னி கிளையினரால் அப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியையும், பேராசிரியருமான ஞானாம்பிகை குலேந்திரனின் மாணவி முனைவர் ஜெயவித்தியாவினால் உருவாக்கப்பட்ட ஞானகானம் நூல் முத்து விழா மலராக வெளியிட்டு வைக்கப்பட்டது.

திருமதி ஞானாம்பிகை குலேந்திரன் தஞ்சாவூர் அறிவியற் கலைக் கல்லூரியின் பேராசிரியராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கே.சுப்பிரமணியம் தம்பதிகளுக்கு இரண்டாவது வாரிசாக அவதரித்த ஞானாம்பிகை குலேந்திரன் கொழும்பு மெதடிஸ்த கல்லூரியில் கல்வி பயின்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை, முனைவர் என அனைத்துப் பட்டங்களையும் அடுத்தடுத்துத் தனதாக்கிக் கொண்டார். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் ஆசிரியராகவும், பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் அதன் பின்னர் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக் கல்வியைத் தொடர்ந்து அதே பல்கலையில் பேராசிரியராகவும் இசை மற்றும் பரத நாட்டியத் துறைகளின் தலைவராகவும் பதவி வகித்து ஈழ மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர் ஆவார்.

பேராசிரியர் ஏ.குலேந்திரனுடன் திருமண பந்தத்தில் இணைந்து சிறீகிருஸ்ணா, சிறீநாராயணி, அபிமன்யூ ஏன மூன்று வாரிசுகளின் தாயானார்.

தான் பெற்ற கல்வியைத் தன்னுடன் நின்றுவிடாது மற்றவர்களுக்கும் பயனளிக்கும் வகை யில் தமிழ் இனத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பல நூல்களின் ஆசிரியரானார்.

முதன்நூலாக பரத இசை மரபு (1994) என்று தொடங்கி Music in the dance of ancient Tamils, Musical traditions of Bhara thanatyam, பரத நாட்டியத்தின் தமிழசைப் பாடல்கள் Karaikkal Am maiyar – Mother of South Indian Music, காரைக்காலம்மையார் தென்னிந் திய இசையில் தாய் (1996) தெய்வத் தமிழிசை (2008) Music and Dance in the Thanjavur Big Temple (2004), இவ்வாறு பல நூல்களை சமூகத்துக்கு வழங்கினார்.

நூல்கள் உருவாக்கத்துடன் மட்டும் நின்றுவிடாது பல விருதுகளையும் தனதாக்கிக் கொண்ட பெருமைக்குரியவர். அந்த வகையில் சுவாமி விபுலானந்தர் விருது (கரந்தை தமிழ்ச் சங்கம்) 1994ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூலுக் கான தமிழக அரசு விருது இவரது பரத இசை மரபு நூலுக்கு வழங்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு சான்றோருக்கான விருது இலங்கை கம்பன் கழகத்தால் வழங்கப்பட்டது. ஆஸ்திரேலிய மண்ணிலும் இவர் விருது பெறத்த வறவில்லை. அந்த வகையில் 2016ஆம் ஆண்டு தமிழ் மொழி இலக்கியத் தொண்டுக்கான விருது தமிழர் நலன் காப் புக்கழகத்தால் (கிறான்வில்) - வழங்கி கௌரவிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு தெய்வத்திருமங்கை என்ற அழகான காவிய விருது ஆஸ்திரேலியா கம்பன் கழகத்தினரால் வழங்கி இன்னும் பெருமைக் குரியவரானார். இவ்வாறு தமிழுக்குப் பெருமை சேர்த்த சீமாட்டியை கௌரவிக்கும் வகையில் அவரது அகவை எண்பதில் அவரது மாணவி களால் முத்து விழாவை எடுத்ததையிட்டு பெரு உவகையடைகிறோம்.

இவ்விழாவானது வென்வெத்விலில் அமைந்துள்ள றெஜ்பேன் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது விழாவுக்கு வருகைதந்தோரால் அரங்கு நிறைந்து விழா முடிவுறும் வரை பலர் நின்றபடியே பங்கேற்று மகிழ்ந்தனர். இவ் விழாவை மங்கல வாழ்த்துப்பாடி திருமதி சுகந்தி நிமலன், திருமதி ஞான அசோகன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தார்கள். தொடர்ந்து தேசிய கீதத்தை யஜ்னேஸ் மற்றும் தருனேஸ் ஸ்ரீ கிருஸ்ணா ஆகியோர் தங்களின் தேன் மதுரக்குரல்களால் வழங்கினார்கள். வந்தோரை வரவேற்கும் முகமாக வரவேற்புரையை பழைய மாணவ சங்க உப தலைவி திருமதி சாந்தா திருவருட்செல்வன் நிகழ்த்தினார்.

தொடாந்து தலைமையுரையை சங்கத் தலைவி டாக்டர் பூமகள் குமார் அழகுற நிகழ்த்தி சபையை மேலும் மெருகேற்றினார்.

அதனைத் தொடர்ந்து நூல் அறிமுகத்தை நூலாசிரியரும் திருமதி ஞானாம்பிகை குலேந் திரனின் தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவியுமான டாக்டர் என்.ஜெவித்தியா தன் குருவின் சிஷ்யை என் பதை ஆணித்தரமாக தனது பேச்சாற்றலால் நிரூபணம் செய்து நூலை அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து அறிமுக உரையை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவியான டாக்டர் சாந்தா ஜெயராஜ் நிகழ்த்தினார்.

மேலும் விழாவின் சீமாட் டியை சீரும் சிறப்புமாக வாழ்க என வாழ்த்துரைகளை முறையே ஸ்ரீ நிர்மலேஸ்வரக் குருக்கள், டாக்டர் வி. மனோமோகன். அனகன் பாபு தேவராஜன் மற்றும் மாத்தளை சோமு போன்ற பெரியார்கள் வழங்கி வாழ்த்தினார்கள்.

விழாவின் கௌரவத்தையும் வாழ்த்துக்களையும் ஏற்புரையையும் விழாவின் நாயகியான பேராசிரியர் திருமதி ஞானாம்பிகை குலேந்திரன் சபையின் முன் ஏற்றுக்கொண்டு தனது ஏற்புரையை மிகவும் அவையடக்கத்துடனும் தமிழுக்கே உரித்தான பண்புடனும் நிகழ்த்தி சபையினரை மெய்சிலிர்க்க வைத்தார்.

விழாவை மேலும்மெருகூட்ட வீணை இசையை செல்வி சிவந்தி பகீரதன் வழங்கினார். அணிசெய் கலைஞராக சேயோன் ராகவனும் சேர்ந்து சபையினரை மெய்மறக்க செய்து இசை சமர்பணம் செய்தார்கள்

தொடர்ந்து நன்றியுரையை பழைய மாணவிகள் சங்கச் செயலாளர் திருமதி மாலினி பிரபாகரன் வழங்கி விழாவை நிறைவு செய்தார்கள். இனிமையான சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன.

# மூத்த ஊடகவியலாளர் கோபுவின் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்ளக்கிடம் அவனது உதவியாளன் வந்து நாட்டில் லஞ்சம் ஊழல் அதிகரித்து விட்டதென முறையிடுகிறான். உடனே துக்ளக் இலஞ்சத்தைச் சட்டபூர்வமாக்கி விடும்படியும் என்னென்ன வேலைக்கு எவ்வளவு எவ்வளவு லஞ்சம் வாங்க வேண்டும் என்று அறிவிக்கும்படியும் கூறுகிறான். அப்படம் தடைசெய்யப்பட்டுவிட்டது.

அதாவது இந்தியாவில் லஞ்சம், ஊழல் என்பது அமைச்சர்கள் முதல் காரியாலய உதவியாளர் வரை சர்வவியாபகமான ஒரு தொற்று நோய்.

இந்த லஞ்சம் கோட்டையில் அமைக்கப்பட்டிருந்த இந்தியச் சிறையையும் விட்டு வைக்கவில்லை.

ஒரு நகைக் கடைக்காரர் புலிகளுக்கு இரண்டு கப்பல்கள் வாங்கிக் கொடுத்தார் என்ற பேரில் கைது செய்யப்பட்டார். ஒரு நகைக்கடை உரிமையாளரால் கப்பல் வாங்க முடியுமா என்பது வேறு விடயம். அவர் ஒவ்வொருநாளும் சிறைக்கு வெளியே சில மணிநேரம் திறந்துவிடப்பட்டு உலாவ அனுமதிக்கப்படும். இரண்டு மூன்று நாள்களுக்கு ஒருமுறை [illegible]டில் போய[illegible]க்குச் சாப்பிட்டு வரவும் அனுமதிக்கப்படுவார். மற்றக் கைதிகள் இப்படியான சலுகைகளை நினைத்தும் பார்க்க முடியாது. லஞ்ச மகத்துவம் அது. அலுமினியத் தடியடியிலிருந்து அவருக்கு விலக்குண்டு. கைதிகளை கோட்டையிலிருந்து பலாலிக்குக் கொண்டுபோக கண்களையும் கைகளையும் கட்டிவிட்டு, ஒருவரின் விரலில் மற்றவர் பிடித்து நடக்க வைப்பார்கள். விழுந்தெழும்பி வாகனத்துக்கு அருகில் சென்றபின் அப்படியே ஒவ்வொருவராகத் தூக்கி வாகனத்துக்குள் எறிவார்கள். கைகள் கட்டப்பட்ட நிலையில் முகம் நிலத்தில் அடிபடாமல் விழுவது அவரவர் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

பலாலியில் இறங்கி விசாரணைகள் பதிவுகள் முடிந்த பின் காங்கேசன்துறை சிமெந்து ஆலையிலுள்ள ஒருபழைய கட்டடத்துக்குள் கொண்டு செல்கிறார்கள்.

அங்கும் கோட்டையில் நடந்த அதே மிருகத்தனமான விருந்துபசாரங்கள் எல்லாமே நடக்கின்றன. மாலையில் பூட்டினால் காலையில்தான் திறப்பார்கள். சிறுநீர் கழிப்பதனாலும் காலை வரை அடக்கத்தான் வைத்திருக்கவேண்டும். அதற்குள் உண்ணாவிரதப் போன்ற போராட்டங்களும் நடக்கின்றன. கோபுவுடன் அடைக்கப்பட்டிருந்த ஏனைய ஈழமுரசுப் பணியாளர்களில் சிலர் அந்தத் துன்ப நிலையிலும் படுகாயமடைந்த நிலையில் கொண்டு வரப்பட்ட இரு கைதிகளுக்கு குருதித் தானம் செய்கின்றனர்.

இந்த நூலில் உள்ள விடயங்களை விவரமாக எழுதுவதானால் பல வாரங்கள் தேவைப்படும். அதனால் பல விடயங்களை இதில் தர முடியவில்லை. இதில் ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட்டு இப்பத்தியை நிறைவு செய்வது பொருத்தமானது என நினைக்கின்றேன்.

ஈழமுரசுப் பத்திரிகைக் காரியாலயம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டு சிலர் கைது செய்யப்பட்ட நிலையில், கோபு தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது. தலைமறைவாய் இருந்து கொண்டே துணிச்சலுடன் தொடர்ந்து பத்திரிகையை இவர் நடத்தியதன் மூலம் தனது தனித்துவத்தை நிலைநாட்டினார். அடிப்படையில் இந்தியா என்ற நாடு இங்கு ஆக்கிரமிப்பு நோக்கத்துடனேயே இராணுவத்தை அனுப்பியது என்பதையும், தமிழ் மக்களின் விடுதலைக்கு எப்போதுமே விரோதமாகவே செயற்படும் என்பதையும், இந்த நூல் தெளிவாகவே ஆதாரபூர்வமாகவே முன்வந்துள்ளமையே இதன் சிறப்பம்சம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.சிவசாந்தன்

# உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு அறிஞர்கள் யாழ். மண்ணில் இலக்கியவாதிகளுடன் ஏற்படுத்திய

# உறவுப் பாலம்

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வுப் பொன் விழா மாநாடு 2016 (1966-2016) கடந்த 11ஆம் 12ஆம் 13 ஆம் திகதிகளில் கொழும்பு சுகங்கிா சதுக்கத்தில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. 1966இல் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் முதன்முதலாக இடம்பெற்றதன் பின்னர் தற்போதுதான் இம்மாநாடு மீண்டும் இடம்பெற்றுள்ளது. இலங்கையைச் சேர்ந்த 250பேரும், இந்தியா, மலேசியா, டுபாய், சிங்கப்பூர் முதலிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 50 பேரும் இம்மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் பேராளர்கள் என முப்பத்தொன்பது பேர் கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் சி.பாஸ்கராவின் வழிகாட்டலில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பயணம் செய்தனர். அவர்களை வவுனியாவில் தமிழ்மணி அகளங்கன் தலைமையிலான குழுவினரும், கிளிநொச்சியில் கவிஞர் ச.கருணாகரன் தலைமையிலான குழுவினரும், யாழ்ப்பாணத்தில் யாழ். இலக்கியவாதிகளும் வரவேற்றனர். கிழக்கில் கல்முனையிலும் இவர்களுக்கான வரவேற்பு இடம்பெற்றிருந்தது.

தமிழ் – இஸ்லாமிய உறவு என்பது காலதிகாலமாக நிலைத்திருந்த ஓர் உறவாகும். இடையில் ஏற்பட்ட தவிர்க்கமுடியாத அசௌகரியங்களாலும் புரிதற் குறைபாடுகளாலும் அவ்வுறவில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. மீண்டும் ஏற்படும் புத்துயிர்ப்பாக யாழ். மண்ணின் மூத்த இலக்கியவாதிகளும் மற்றும் ஆர்வலர்களும் சேர்ந்து மாநாட்டுக் குழுவினரை வரவேற்று மதிப்பளித்தனர்.







### இலக்கியவாதிகள் வருகை

பத்திரிகைகள் மற்றும் முகநூல்கள் வாயிலாகக் குறுகிய காலத்தில் விடப்பட்ட அழைப்பை ஏற்று யாழ். மண்ணைச் சார்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கியவாதிகள் வரவேற்பில் பங்கேற்றிருந்தனர். யாழ். நகரில் மீளக்குடியமர்ந்த இஸ்லாமிய இலக்கியவாதிகள் மற்றும் ஆர்வலர்களும் இதில் அடங்குவர்.

யாழ். நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள கம்பன் கோட்ட மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை (15.12.2016) இடம்பெற்ற இச்சந்திப்பில் வட மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன், வடமாகாணசபை உறுப்பினர் அ.அஸ்மின், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், மூத்த கவிஞர் சோ.பத்மநாதன், கவிஞர் த.ஜெயசீலன், கவிஞர் கு.றஜீபன், கவிஞர் வேலணையூர் சுரேஷ், எழுத்தாளர் வரணியூர் வே.சிவராஜா, இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ கு.வை.கா. வைத்தீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ. தியாக. மயூரகிரிக் குருக்கள், உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா, எழுத்தாளர் சீனா உதயகுமார், கவிஞர் வேல். நந்தகுமார், கலாபூஷணம் எம்.எல். லாபிர், கவிஞர் ஏ.எஸ். நஸ்பியா, எழுத்தாளர் ஏ.சி.ஜன்சி உள்ளிட்டோர் அடங்குவர். யாழ். மண்ணில் நிகழ்ந்த சந்திப்புக்கான இணைப்பை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கச் செயலாளர் ச.லலீசன் மேற்கொண்டிருந்தார். தமிழக இலக்கியக் குழுவுக்கு கவிமாமணி ஜலாலுதீன் தலைமை தாங்கினார். இவரே மாநாட்டுக்கான தமிழ்நாடு இணைப்பாளராகச் செயற்பட்டதாகவும் குறிப்பிட்டனர். பொதிகைத் தொலைக்காட்சியின் அறிவிப்பாளர், கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள், குறும்பட இயக்குநர்கள், நாவலாசிரியர்கள், திரைப்படப் பாடலாசிரியர், கவிதையாளர்கள் எனப் பலர் இக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். அவர்களுள் ஒருவர் இந்திய றிசர்வ் வங்கியின் மண்டல மேலாளர் என்பதுவும், ஒருவர் இந்திய அமைதிப்படையில் அதிகாரியாக யாழ். மண்ணில் கடைமையாற்றியவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கன.

### தொடக்க நிகழ்வு

சந்திப்பின் தொடக்க நிகழ்வாக ர.ஸகிஷ்னா நீராரும் கடலுடுத்த.. எனத் தொடங்கும் தமிழ்த் தெய்வ வணக்கப் பாடலைப் பாடினார். தொடர்ந்து அண்மையில் மறைந்த கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி, சாகித்யரத்னா முல்லைமணி மற்றும் கலாநிதி ஆறு. திருமுருகனின் தாயார் சரஸ்வதி ஆறுமுகம் ஆசிரியர் ஆகியோரது ஆன்ம சாந்தி வேண்டி மௌனப் பிரார்த்தனை இடம்பெற்றது. நிகழ்வில் பங்கேற்றவர்கள் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

இனத்தால், மதத்தால், தேசத்தால் நாம் வேறுபட்டிருப்பினும் தமிழால் இணைந்திருக்கின்றோம். தமிழின் பெயரால் நாம் ஒற்றுமையாக வாழ்வோம்–என்றார். மேலும், எங்கள் மண்ணின் தாகங்களை ஏக்கங்களைச் சுமந்து செல்லுங்கள். உங்கள் ஊர்களில் எங்கள் கதைகளைச் சொல்லுங்கள். இங்கு தமிழ் வாழ்வு பெற்றால் உலகில் தமிழ் உன்னத நிலையில் வாழும்–என்றார்.

தொடர்ந்து கருத்துரைத்த பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, சீறாப்புராணம் எழுதுவதற்கு எழுத்தாணி வழங்கியது யாழ்ப்பாணமே என்று தெரிவித்ததுடன், கடந்த காலங்களில் நிகழ்ந்த கசப்பான நிகழ்வுகளுக்காகத் தனது வருத்தத்தைத் தெரிவித்தார். பேராசிரியர்களாகிய நீங்களாவது சொல்லியிருக்கலாம் என்று சிலர் என்னிடம் கூறுகின்றனர். ஆனால் சொல்லி இருக்கலாம் என நான் சொல்லமாட்டேன் என இரட்டை அர்த்தத்தில் குறிப்பிட்டார்.

மூத்த கவிஞர் சோ.ப. இலங்கையில் உள்ள கவிதைகள் பற்றியும் கவிஞர்கள் பற்றியும் கருத்துரைத்தார். இலங்கைக் கவிதைகள் பெருமை மிக்கவை–என்றார். அவற்றுள் கிழக்கிலங்கை இஸ்லாமியக் கவிஞர்களின் கவிதைகள் முக்கியமானவை எனவும் குறிப்பிட்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் போக்கைத் தீர்மானித்தது யாழ்ப்பாண மண்தான் என யாழ்ப்பாணத்தின் பெருமைகளைக் கூறினார். இதற் கிடையில் நிகழ்வில் கருத்துரைத்த தமிழக அறிஞர் ஒருவர் உலக நிலையில் புகழ்பெற்றுள்ள ஈழத்தமிழர்கள் எதற்காக தமிழகத்தின் பேராசிரியர் மனோன் மணீயம் சுந்தரனாரின் தமிழ்த் தெய்வ வணக்கப்பாடலை இசைக்க வேண்டும்? ஈழத் தமிழர் தமக்கெனத் தனித்துவமான ஒரு தமிழ் வாழ்த்தை இயற்ற முடியாதா? எனக் கேட்டார்.

### தமிழில் தேசியகீதம்

இதற்குப் பலரும் பதிலிறுத்தனர். கவிஞர் வேல். நந்தகுமார், தமிழில் தேசிய கீதம் படிக்கலாமா? கூடாதா என்ற சர்ச்சையே இந்த நாட்டில் தணியவில்லை. இந்நிலை யில் தமிழ் வாழ்த்தை அரசு ஏற்கும் என எதிர் பார்க்க முடியுமோ தெரியாது–என்றார். கவிஞர் சோ.ப. தன்னுரையில்தான் எழுதிய பிரதேச கீதம் ஒன்றில் வாழ்த்து எழுதியதாக்வும் இலங்கையில் பல கவிஞர்கள் தமிழ் வாழ்த்துப் பாடல்களை எழுதியுள்ளதாகவும் தெரிவித்தார். மாகாணத்துக்கு எனத் தற்போது கீதம் எழவுள்ளது என்றும் கூறினார். ஓய்வறியா மக்கள் கூட்டம் வாழுகின்ற மண் உலகளக்கும் தமிழர்களின் வேர்பிடிக்கும் மண் தாயகமாம் எங்களுக்கென்று ஊதடா சங்கம்

நாம் சரித்திரத்தில் நிற்பவரென்று ஊதடா சங்கம்

என்பது பாடலின் சரணப் பகுதி எனப் பாடிக் காட்டினார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், உலகளாவிய நிலையில் தமிழை உயர்த்த வேண்டும் என்றும் உலக நிலையில் தமிழ் மொழி வாழ்த்து ஆக்கப்படவேண்டும் என்றும்–குறிப்பிட்டார்.

வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம், இஸ்லாமியர்களின் மீள்குடியமர்வு முக்கியமானது எனவும், இதற்குத் தன்னாலான பங்களிப்பு என்றும் உண்டு எனவும் குறிப்பிட்டார். வடக்கு மாகாணத்துக்காக கீதம் இயற்ற வேண்டும் எனத் தான் விடுத்த வேண்டுகோளைச் சிங்கள ஊடகங்கள் திரித்துக் கூறி அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார். இலங்கையில் யாழ்ப்பாண மண்ணுக்கு எனத் தனித்துவமான அடையாளம் உள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்களில் யாழ்ப்பாணத்தின் பங்களிப்பு முக்கியமானது. இஸ்லாமிய மக்களும் தமிழ் மக்களும் இந்த மண்ணில் ஒற்றுமையாக வாழ வேண்டும். அந்த ஒற்றுமைக்காகத் தான் இடையறாது பங்காற்றுவதாகவும் குறிப்பிட்டார். வடமாகாண உறுப்பினர் அஸ்மின், இஸ்லாமிய எழுத்தாளர்களது வருகைக்கும் அவர்களுடனான சந்திப்புக்கும் அதிக எண்ணிக்கையில் யாழ். இலக்கியகாரர்கள் வந் திருப்பது மகிழ்வைத் தருவதாகக் கூறினார். யாழ். இஸ்லாமிய இலக்கிய ஆர்வலர்கள் சார்பில் தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழகத்தில் தமிழ் ஊடகங்கள் கட்சி சார்ந்து இயங்குகின்றன. அத்துடன் அவற்றின் மொழிப்பிரயோகம் தமிழைத் தரம் தாழ்த்துவதாக அமைகின்றது. இந்த ஊடகங்கள் எம்மவர்களிடையேயும் செல்வாக்குச் செலுத்துகின்றது இவற்றுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்–என்றார்.

யாழ். மண்ணில் கால் மிதிப்பது தமது நீண்டநாள் கனவுகளுள் ஒன்று எனக் குறிப்பிட்ட வருகையாளர்கள் இங்கு பேசப்படும் தமிழைக் கேட்பதற்கு ஆனந்தமாக இருப்பதாகத் தெரிவித்தனர். அத்துடன் இந்த மண்ணின் உணர்வுகள் குறித்துத் தாம் புரிந்துள்ளதாகவும் அதுபற்றித் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் தெரிவிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டனர். இந்த மண்ணில் நிகழ்ந்த அவலங்கள் முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற தமது வேண்டு கோளையும் வெளியிட்டனர்.

தமிழக எழுத்தாளர்கள் தமது வெளியீடுகள் சிலவற்றைத் துறைசார்ந்தவர்களுடன் பகிர்ந்து கொண்டமையையும் காணமுடிந்தது. இத்தகைய நிகழ்வுகள் இனிவரும் காலங்களிலும் ஆரோக்கியமாக இடம்பெறுவது தமிழ் இஸ்லாமிய உறவின் புரிதல்கள் வளம்பெற வழி சமைக்கும் என எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT









# கலாசார விழா 2016






வவுனியா பிரதேச செயலகத்தின் கலாசாரவிழா கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் வவுனியாவின் பிரதேச பண்பாட்டை வெளிப்படுத்தத்தக்க வகையில் இடம்பெற்றது.

முதல்நாள் நிகழ்வு தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியாமாவட்டமேலதிக செயலாளர் தி.திரேஸ்குமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் கே.இராஜலிங்கம் கலந்து கொண்டார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் வரிசையில் முதலில் வவுனியா பிரதேசத்தின் தொல்லியல்வரலாறு என்ற தலைப்பில் வரலாற்று ஆய்வாளர் அருணா செல்லத்துரை உரையாற்றினார். அவரது உரையில் வவுனியா பிரதேசத்தில் தொல்லியல் வரலாற்றில் சிவலிங்கத்தின் வழிப்பாட்டைப் பல ஆலயங்களில் காணக்கூடியதாக உள்ளதாகவும் இந்தநாட்டை ஆண்ட மன்னன் இராவணன் தமிழர்களின் மன்னன் எனவும் வன்னியில் பண்டாரவன்னியனின் ஆட்சி எமது தமிழ் பாரம்பரியத்தின் ஆட்சிமுறை யில் வீரத் தைப் புலப்படுத்துகிறது என்பதையும் சிங்களவர்கள் தமிழர் வழிபடும் கடவுளையே ஆரம்பத்தில் வழிபட்டனர் எனவும் வவுனியாவில் காணப்படும் பலகட்டடங்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் பல ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை எனவும் கூறி தமிழர் வாழ்ந்தமையயை தெட்டத் தெளிவாக உறுதிப்படுத்தினார்.

'வவுனியாப் பிரதேசத்தின் இடப்பெயர்வு' என்ற தலைப்பில் உரையாற்றிய ஓய்வுநிலை கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஞா.ஜெயநாதன் இன்று வவுனியாவில் பல்வேறு தமிழர் வாழ்ந்த கிராமங்கள் தமிழ்ப் பெயர்கள் மாற்றப்பட்டு சிங்களப்பெயர்களில் காட்சியளிப்பது வேதனைக்குரியது என்றார். "வவுனியா பிரதேசத்தின் பண்பாட்டு வழக்காறு" என்ற தலைப்பில் உரையாற்றிய ஆசிரியர் நிலைய முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் போரினால் யாழ்ப்பாணம், வன்னி இடப்பெயர்வுகளின் பின்பு எமது பிரதேசத்தில் அந்த மக்களின் வருகை பண்பாட்டில் தாக்கம் செலுத்தி யுள்ளது மட்டுமல்லாது வவுனியாவின் சனத்தொகை அதிகரிப்புக்கும் வழிகாட்டியுள்ளது என்றார்.

"வவுனியாவின் நாட்டுக்கூத்தும் நாட்டார் இசையும்" என்ற தலைப்பில் கலாபூசணம் தமயந்தி உரையாற்றுகையில் வவுனியாவுக்கென தனித்துவமான நாட்டுக்கூத்து இதுவரை இல்லை ஏனைய மாவட்டங்களிலிருந்து இங்கு வந்தவை தான். இன்று பல்வேறு நாட்டார் இசை மருவி தென்னிந்திய சினிமாவின் குத்துப்பாட்டு கலாசாரம் நிகழ்வுகளில் வவுனியாவில் தலைதூக்கியுள்ளமை கவலைக்குரிய விடயமே என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்

அடுத்து வவுனியா தமிழ் மாமன்றம் வழங்கிய எதிர்கால வாழ்விற்காக தமிழர்கள் மீட்டெடுக்க வேண்டியவை என்ற தலைப்பில் சுழலும் சொற்போர் இடம்பெற்றது. இவர்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என ஆசைப்படுகிறோம் என்ற தலைப்பில்கலைத்தொடர்பு மையம் வழங்கிய கவியரங்கம் பல்வேறு ஆசைகளைத் தொட்டுச் சென்றது மனிதன் வேற்றுக்கிரகத்திற்கும் போக ஆசைப்படுகிறான் அங்கும் பல்வேறு ஆசைகளைக் கேட்பான் அங்கும் தமிழர்கள் செல்வார்கள் என ஆரோக்கியமான கவிவரிகள் மூலம் சுட்டிகாட்டினர்

அடுத்து வவுனியா தமிழ்ச்சங்கம் வழங்கிய இலங்கை வேந்தனின் புகழ் கூறி நிற்பதில் விஞ்சி நிற்பது இராமாயணமே என்ற தலைப்பிலும் பட்டிமன்றம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் இராமாயணம் பற்றி சிறப்பாக எடுத்தியம்பப்பட்டது திருமுறைகள் மற்றும் இராமாயணம் என்பவற்றில் உள்ள பண்புகளை நாம் கற்றுக்கொள்ளத்தோன்ற வித்திட்டது அந்த பட்டிமன்றம்.

இரண்டாம் நாள் நிகழ்வு வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா தலைமையில் இடம்பெற்றது

இந்த நிகழ்வுக்கு வணிக மற்றும் கைத்தொழில் துறை அமைச்சர் ரிசாத் பதியூதீன் கலந்து கொண்டு சிறப்பித்தார் கண்ணன் கரா குழுவனர் வழங்கிய மங்கல வாத்தியங்களின் இசை கணீர் என முழங்கின சிறந்த இசை மண்டபத்தை இனிமையாக்கியது.

நிருத்திய ஸ்ருதி நடன குழுவினர் வழங்கி வரவேற்பு நடனம் சிறந்த ஆடல் அங்க அசைவை வெளிப்படுத்தியது. சிதம்பரஸ்வரம் நடனஆலய குழுவினர் வழங்கிய கிராமிய நடனத்தில் கிராமிய கலையின் வெளிப்பாடு சிறந்த முறையில் எடுத்துக்காட்டப்பட்டதுடன் தீ ஒளி பரம்ப மேடையில் ஆடலை மேற்கொண்ட இக் குழுவினர் நிதானத்துடன் நடனத்தை ஆடியமை சிறப்பான வெளிப்பாடாகும்.

இஸ்லாமிய கலாசாரத்தை வெளிப்படுத்திய முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்களின் நடனம் ஆடைஅலங்காரங்கள் கண்ணுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தியது

தொடர்ந்து இடம்பெற்ற மிருதங்க வயலின் இசைகள் கும்மிநடனம், கீர்த்தனநடனம், வீணை இசை நாட்டுக்கூத்தின் கலைவெளிப்பாடுகளை வெளிப்படுத்தி நின்றன.

சிறந்த கலைஞர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். வரவேற்கத்தக்க விடயமாகும். இதுபோன்ற நிகழ்வுகள் வவுனியாவில் தொடர்ந்து நடைபெற வேண்டும். இதன் மூலம் எமது பண்பாடுகள் வளர்க்கப்படும், கலை வளர்க்கப்படும், நல்ல சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

மறைந்த நடிகர் குடும்பத்தையே
தத்து எடுத்துக் கொண்டு உதவிகள் பல புரிந்த



# வள்ளல் பெருமான் எம்.ஜி.ஆர்.

வ.இ.செல்வக்குமார்

நெஞ்சில் ஈரம் காய்ந்து போய் அல்லது அற்றுப் போய் வருகிறது. இன்றைய மனித உலகில் இதற்கெல்லாம் ஆறுதலாக மக்களை அன்போடும் இன்முகத்தோடும் அரவணைத்துச் சென்று வாழ்ந்து மறைந்த பேருள்ளம் கொண்ட பெரிய மனிதர் களை நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டியது தான். அப்படி வாழ்ந்து அமரரா னவர்களில் ஒருவர் தான் எம்.ஜி.ஆர். மனித நேயத்தில் எத்தனை கோணங்கள் உள்ளதோ அத்தனையையும் பிரதிபலித்துக் காட்டியவர்.

எம்.ஜி.ஆர். படங்களைப் பார்த்தவர்களுக்கு குண்டு கருப்பையா என்ற நடிகரை எளிதில் மறந்து விட முடியாது. பெரும்பாலும் நகைச் சுவைக் காட்சிகளில் ஆயிரத்தில் ஒருவன், நம் நாடு, அடிமைப் பெண், ரிக்சாக்காரன், குடியிருந்த கோயில், ஒளி விளக்கு, ராமன் தேடிய சீதை, மாட்டுக் கார வேலன் ஆகிய படங்களில் நடித்த இவரது கடைசிப் படம் நினைத்ததை முடிப்பவன்.

மானா மதுரையைச் சேர்ந்த குண்டு கருப்பையா 8 வயதிலேயே பெருமளவு நாடகங்களில் நடித்திருக்கிறார். நாடக மன்றத்தை தொடங்கி நடத்தியதால் அவர் பெரிதும் நஷ்டப்பட்டுப் போனார். அதை அறிந்த எம்.ஜி.ஆர். கருப்பையாவுக்குத் தனது படங்களில் தொடர்ந்து வாய்ப்பளித்தார். கருப்பையா சிவாஜியின் படங்களில் நடித்ததோடு சிவாஜி நாடக மன்றத்தின் வேங்கையின் மைந்தன், வியட்நாம் வீடு, தங்கப்பதக்கம் ஆகிய நாட கங்களிலும் நடித்தார். அதை எம்.ஜி.ஆர் வித்தியாசமாக எடுத்துக் கொள்ளாமல் எப்போதும் போல் நட்புக் கொண்டிருந்தார்.

ஜூலை 72 இல் கருப்பையா சுகவீனமுற்று சில தினங்களிலேயே இறந்து போகிறார். தகவலறிந்த எம்.ஜி.ஆர் கருப்பையாவின் இறுதி சடங்குகளுக்கு உதவும் வகையில் உடனே பணம் கொடுத்து அனுப்பினார். 1977 இல் எம்.ஜி.ஆர். தமிழக முதல்வரான போது கருப்பையாவின் இரண்டு ம கள்களுக்கு வேலை கொடுத்ததோடு எம்.ஜி.ஆர் நின்று விடவில்லை. கருப்பை யாவின் 6 வாரிசுகளுக்கும் தன் சொந்த செலவில் திருமணங்களை நடத்தி வைத்தார். கருப்பையாவின் மகள் அமுதாவின் திருமணம் நடந்தபோது எம்.ஜி.ஆர் பல்லாண்டு வாழ்க படப்பிடிப்புக்காக வெளியூர் சென்றிருந்தார். அமுதாவின் திருமணத்தை எம்.ஜி.ஆரின் அண்ணா சக்கரபாணி தலைமையில் ஜானகி அம்மையார் தாலி எடுத்துக் கொடுத்து நடத்தி வைத்தார்.



## கவிதை நூல் வெளியீடு

கிளிநொச்சியில் டன்சிகா கருணாகரனின் 'விதியே விளையாடாதே' கவிதை நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் கம்சன் கணேசனும் அதிபர் பங்கையச் செல்வனும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். நூலாராய்வுரையை தமிழாசிரியர் முல்லைத்தீபன் நிகழ்த்தினார். [illegible] ஜேந்திரகுமார் தலைமை தாங்கியிருந்தார். மேற்படி நிகழ்வு கரைச்சி பிரதேச சபை மண் டபத்தில் இடம்பெற்றது.

# மன்னாரில் சிறுகதை நூல் வெளியீடு











மன்னாரின் இளம் கவிஞரும்,ஊடகவியலாளருமான வை.கஜேந்திரன் எழுதிய "மறுபிறப்பு" சிறுகதை நூல் வெளியீட்டு விழா கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மன் னார் நகர சபை மண்டபத்தில் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

மன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த சிறுகதை நூல் வெளியீட்டு விழா வவுனியா தமிழ்ச்சங்கத்தின் அமைப்பாளர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன்,மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி. அஏஸ்ரான்லி டிமெல் ஆகியோர் கலந்து கொண்டனர். முதற் பிரதியை துரையம்மா அன்பகத் தலைவர் வே.மனுவேல்பிள்ளை பெற்றுக் கொண்டார்.சிறப்புப் பிரதிகள் வழங்கலையடுத்து நூல் ஆய்வுரையினை தேசியக் கலைஞர் எஸ்.ஏ.உத யனும், கருத்துரையினை ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி.சாந்தி வாமதேவாவும் வழங்கினார். விருந்தினர்கள் உரைகளைத்தொடர்ந்து ஏற்புரையினை நூலாசிரியர் வை.கஜேந்திரனும் நன்றியுரையினை பி.அருள்ராஜும் நிகழ்த்த மன்னார் புனித சவேரியர் பெண்கள் கல்லூரி மாணவி செல்வி.ம.ஜான்சியின் நடனத்துடன் வெளியீட்டு விழா இனிதே நிறைவுற்றது. (க-56)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2017 – 2020

சுப ஸ்ரீ துன்முகி வரும் தை மாதம் (26.01.2017) 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7:29 மணியளவில் சனிபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசுராசிக்குள் பிரவேசிக்கிறார். இங்கு அவர் 24.01.2020 வரை 3 ஆண்டுகள் சஞ்சாரம் செய்கிறார்.




(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம் (மா பி மு மே மோ மௌ ட டி டே) போன்ற எழுத்துகளில் பெயரை முதல் எழுத்தாக கொண்டவர்கள் ஆவணி மாதத்தில் பிறந்தவர்களுக்கு இந்தப் பலன்கள் பொருந்தி வரும்)

வான மண்டலத்தில் 5ஆவது ராசியாக வலம் வரும் உங்கள் ராசி நாதன் ஆகிய சூரியபகவான் நவக்கிரகங்களில் முதலாவது கிரகமாகும். உலக உற்பத்திக்கும், உயிர்கள் வாழ்வதற்கும் சீராக தன்னுடைய கதிர்களை வாரி வழங்கும் வல்லமை பெற்ற சூரியன் கிரகங்களில் நம்முடைய கண்களுக்கு தெரியும் முதல் கிரகமும் ஆகும். நவக்கிரகங்களில் முதன்மையானது சூரியன் ஆகும். அதுபோல் அரசாளும் யோகமும், எதிலும் முதன்மையாகவும் விளங்க விருப்பமுடையவர்கள். நீங்கள் பொன்னையும் பொருளையும் பெரிதாக மதிக்கும் இவ்வுலகில் புகழுக்காக இவ்வுலகில் எதையும் துணிந்து செயல்படுவீர்கள். நிர்வாகத் திறமை, ஆட்சி அதிகாரம் மற்றும் பேச்சாற்றலுக்கு உரியவரான நீங்கள் எதையும் விட்டுக் கொடுக்காத தன்மையும் உண்மைக்கும், நேர்மைக்கும் போராடி வெற்றி பெறுவீர்கள் இக்குணநலன்கள் உடைய உங்களுக்கு சனிபகவான் தனுசு ராசியிலிருந்து சஞ்சாரம் செய்து அளிக்க கூடிய பலன்களை பார்க்க இருக்கிறோம்.

உங்களது ராசிக்கு 5ஆம் வீட்டில் சனி சஞ்சாரம் செய்வது இதுவரை தள்ளிப்போன சுபகாரியங்கள் இனிதே நடைபெறக் கூடிய வாய்ப்பாகும். அடிக்கடி சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்பாகும். சனிபகவான் பாபக்கிரகம் என்பதால் உங்களது ராசியின் 5 ஆம் இடமான புத்தி ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வது புத்தியின் தன்மைகேற்ப செயல்படுவீர்கள். சிலசமயம் நல்ல அறிவும் ஆற்றலுடன் சிந்திக்கும் குணமுடைய நீங்கள் சில சமயங்களில் மறதியும், கவனச் சிதறலும் உடையவராக இருப்பீர்கள்.

உடல் ஆரோக்கியம் சீராகி மகிழ்ச்சியாக இருக்கும் காலம். தீர்க்க முடியாத பிணி மற்றும் உடல் சோர்வு நீங்கி புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். பணப் புழக்கம் தாராளமாக இருந்து வரும். பேச்சில் சாமர்த்தியம் நன்மை உண்டாக்கும். குடும்பத்தில் புது வரவுகள் வந்து சேரும். புதிய விடயங்களை ஆர்வமுடன் கற்பீர்கள். நம்பிக்கையுடன் முயற்சிக்க எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். எதையும் தீர ஆராய்ந்து முழு மூச்சுடன் செயற்பட வெற்றி கிட்டும். தாயாரின் உடல் நிலையில் ஆரோக்கியம் காணப்படும்.

வண்டி வாகனங்கள், வீடு, நிலம், வாங்க வாய்ப்புகள் அமையும். தந்தை மற்றும் தாய் வழி சொத்துக்கள் எதிர்பாராமல் வர வாய்ப்புள்ளது. அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை மட்டும் தாரக மந்திரமாக எண்ணி செயல்களில் வெற்றி பெற முடியும். பெரிய மனிதர்கள் சகவாசம். குழந்தைகளால் பிரச்சினை ஏற்பட்டு நிம்மதியற்ற சூழல் ஏற்படும். அதே சமயம் நன்மையும் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்களது உழைப்பு மற்றவர்களுக்கு லாபகரமாக அமையும். உங்கள் பணம், பொருள் கண் முன்னே களவு போனது போல் காணாமல் போகும் அல்லது பறிபோகவோ திருட்டுப் போகவோ வாய்ப்பிருக்கிறது. விருந்து கேளிக்கைகளில் நாட்டம் குறையும்.

காதல் விடயங்கள் உற்சாகமாக இருந்து வரும். காதல் கை கூடி திருமணத்தில் ஒரு சிலருக்கு முடியும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைப்பது சற்று காலதாமதமாகும். விரும்பிய வேலை கிடைப்பதில் நிறையத் தடைகள் ஏற்படும். வழக்குகள் ஜெயிப்பது போல் தோன்றினாலும் எதிரி வலுவாக இருக்க வாய்ப்புண்டு. போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற கடுமையாகப் போராட வேண்டி இருக்கும். உயரதிகாரிகள் விடயத்தில் அதிக எச்சரிக்கை தேவை. வேலையாள்களால் தேவையற்ற பிரச்சினைகளும் மன வருத்தங்களும் ஏற்படும். விரதம் போன்ற விடயங்களைக் கைவிட்டு உணவு விடயத்தில் அதிக கவனம் தேவை. சக ஊழியர்களின் எதிர்பாராத உதவியும் அவர்களின் ஒத்துழைப்பும் நமக்கு சாதகமாக இருந்து வரும். நண்பர்களால் தேவையற்ற வருத்தங்கள் ஏற்படும். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வலுவான போராட்டத்துக்கு பிறகே குழந்தைப் பாக்கியம் அமையும். எந்த ஒரு விடயத்தையும் தள்ளிபோடவோ ஒத்திப் போடவோ கூடாது. காரியத்திலே கண்ணாய் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் போட்டியான உலகத்தில் ஜெயிக்க முடியும்.

**பெண்களுக்கு**

காதல் விடயங்கள் மகிழ்ச்சியாகவும், சாதகமாகவும் அமையும். இதுவரை நடைபெறாமல் தள்ளிப் போன திருமணம், குழந்தைப் பேறு போன்ற சுபகாரியங்கள் இனிதே நடந்தேறும். அடிக்கடி சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு அமையும். புதிய ஆடை, ஆபரணச் சேர்க்கை அதுவாக வந்து சேரும். கணவன் மனைவி உறவு சற்று மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருந்து வரும். பொருளாதாரம் ஏற்றமுடன் இருந்து வரும். குடும்பத்தில் புதிய உறுப்பினர் வருகையால் மகிழ்ச்சி அமையும். பார்க்கும் வேலையில் அதிக கவனம் தேவை. அவசரப்பட்டு வேலையை விட்டு விடுதல் கூடாது. புதிய வேலை கிடைக்க தாமதமாகும். எப்பொழுதும் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். குழந்தைகளால் உற்சாகமும் நன்மையும் அதிகரிக்கும். நண்பர்களால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். இடம், மனை, வண்டி வாகனங்கள் வாங்க வாய்ப்பு ஏற்படும். பகுதி நேரமாக உயர் கல்வி பயிலவோ அல்லது வேலை பார்க்கவோ வாய்ப்புகள் அமையும்.

சுய தொழில்களில் முதலீடு செய்வதில் அதிகக் கவனம் தேவை. கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடுகள் தோன்றும். கூட்டாளிகளே லாபம் அடைவார். எனவே முதலீட்டில் அதிகக் கவனம் தேவை. பணம் பொருள் மாட்டிக் கொள்ளும். எனவே கவனம் தேவை. மறைமுகமான எதிர்ப்பு, போட்டி பொறாமைகளையும் சந்திக்க வேண்டி இருக்கும். திறமையாளர்கள் மேலே வரவேண்டிய தருணம். உங்கள் திறமைகளை அதிகரித்து கொள்ளுங்கள். உடல் ஆரோக்கியத்தில் அதிகக் கவனம் தேவை. உடம்பில் ஏற்பட்ட நோயின் தன்மை குறைவது போல் தோன்றினாலும் நோயின் தன்மை அதிகரித்துக் கொண்டே இருக்கும். உடம்பில் சளித் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்வது நலம். அடிக்கடி உடல் அசதி, சோர்வு, அலைச்சல்களால் கால்வலி, அடிவயிற்று பிரச்சினைகளை சமாளித்து கொள்ள வேண்டி வரும். நண்பர்களால் எதிர்பாராத பணவரவும் பொருள்வரவும் ஏற்படும். உயரதிகாரிகள் விடயத்தில் அதிக எச்சரிக்கை தேவை. கணவன் மனைவி உறவு சற்று சுமாராக இருந்து வரும். கடன் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படும். கொடுத்த பணம் பொருள் வருவதில் தடை ஏற்படும்.

**நாளை**
**மார்கழி-07**
வியாழக்கிழமை -22.12.2016
திதி: நவமி பி.இ.01.43
நட்சத்திரம்: அத்தம் மு.இ.10.13
ராகு[illegible]
சுபநேரம்:07.55-09.25 வரை





## கலைஞர் கௌரவிப்பு



பாஷையூர் பதுவையர் கலாமன்றத்தால் தூய மிக்கேல் திருநாளையொட்டி அண்மையில் நடத்தப்பட்ட கலைவிழா மற்றும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு என்பன பங்குத்தந்தை அருட்திருலியோ ஆம்ஸ்ரோங் அடிகள் தலைமையில் நடைபெற்றன. அண்ணாவியார் மு. அருட்பிரகாசத்தின் எழுத்துருவாக்கம் மற்றும் நெறியாள்கையில் உருவான "தியாக ராகங்கள்" நாட்டுக்கூத்தும் இடம் பெற்றது.

முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆனல்ட், சிறப்பு விருந்தினர்களான கிராம அலுவலர்கள் செல்வி ஜெயதா, குருதர்சன் ஆகியோர் கலைஞர்களைக் கௌரவித்தனர். அண்ணாவியார் அருட்பிரகாசம் மற்றும் இளம் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். இளம் கலைஞர்களுக்கு இளங்கலைக்கதிர் விருதுகள் வழங்கப்பட்டன. (க-135)





## பௌர்ணமி நாள் நூல் வெளியீடு

மட்டக்களப்பு மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி நாள் நூல் வெளியீடாக மட்டக்களப்பின் ஒரு சமூகப் போராளியின் "நாங்கள் விட்டில்கள் அல்ல" கவிதை நூல் அறிமுக விழா கடந்த 13 ஆம் திகதி மட்டக்களப்பு மாநகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் கலாசாரப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், காந்தி சேவா சங்கத் தலைவர் ஏ.செல்வேந்திரன், பேராசிரியர் மௌனகுரு ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நூலின் முதற்பிரதியை மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் வெளியிட மட்டக்களப்பு தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் எஸ்.வி.சுபேந்திரன் பெற்றுக் கொண்டார்.


வரவேற்புரையினை மகுடம் கலை இலக்கிய வட்டத் தலைவர் மைக்கல் கொலினும் வெளியீட்டுரையை மூத்த ஊடகவியலாளர் திருமலை நவமும் நயப்புரையை மருதமுனை ஜப்பாரும் நிகழ்த்தினர். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

# செல்லையா சடாட்சரம்

**(ஓய்வு நிலை நீதி மன்ற முதலியார்)**



அல்லாரை வடக்கை பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி கொடிகாமத்தை வதிவிட மாகவும் கொண்ட செல்லையா சடாட்சரம் 20.12.2016 வெவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ர புதல்வனும் காலஞ்சென்ற பாலசிங்கம் - இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கண வரும் காலஞ்சென்ற பாறுபதிப்பிள்ளை, பாலசிங்கம், சிவப்பிரகாசம் (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் குகனேசன் (ஜேர்மனி), குகதாசன், காலஞ்சென்ற புவிராசசிங்கம் (பிரான்ஸ்), குகேந்திரன் (லண்டன்) வாசுகிதேவி, இன்பலதா (பிரான்ஸ்) இன்பராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தந்தையும். ஜெயந்தினி (ஜேர்மனி), சுமதி (பல்வைத்தியர்-ஆதார வைத்தியசாலை-சாவகச்சேரி), யோகசகிர்தமலர் (பிரான்ஸ்), சர்மிலா(லண்டன்) பாலச்சந்திரன் (ஓய்வுநிலை முகாமையாளர்-மக்கள்வங்கி) தெய்வேந்திரன் (பிரான்ஸ்), ஶ்ரீகஜேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசிகா, மயூரதன் (ஜேர்மனி),அர்ச்சனா(இலங்கை தொழில்நுட்ப நிறுவனம்-கொழும்பு) அனந்தி (உயிரியல் மருத்துவக் கல்லூரி-வெள்ளவத்தை) மர்திகா, கெவின்,காலஞ்சென்ற ஸ்ரீபன்,ஜெனிக் தர்மிகா (பிரான்ஸ்) பிருந்தாபன், நவீகா (லண்டன்) நிரூபராஸ்( நீரியல் அபிவிருத்தி அதிகாரசபை-வவுனியா)பால இளந்திரையன். இளங்கோவன் (லண்டன்) ஆர்த்திகா(விரிவுரையாளர்-கொழும்பு பல்கலைகழகம்) ஶ்ரீபவன் (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்) மதுஷன், வனஜன், மதுஜிகா (பிரான்ஸ்) பத்மஜன், கயாணன், திவானி (பிரான்ஸ்)ஆகியோரின் அன்புப் பேரனும், அநேத்திராவின் பூட்னுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016)புதன்கிழமை பி.ப 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலாவித்தாழ்வு இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**0774438663 021-2050395**

## மரண அறிவித்தல்

# திருமதி மகேஸ்வரி அரியநாயகம்



| இறப்பு | பிறப்பு |
|---|---|
| 19.12.2016 | 08.08.1926 |

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மறவன்புலோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அரிய நாயகம் (19.12.2016) திங்கட்கிழமை கர்த்தருள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி-இராசம்மா தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ் சென்றவர் களான கந்தையா அமுதம் தம்பதிகளின் மரு மகளும் ,காலஞ்சென்ற அரியநாய கத்தின் அன்பு மனைவியும் ,காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் மகேசலிங்கம் , ஜீவமலர், நிர்மலா (நியூசிலாந்து) ஆகியோரின் தாயாரும் தியாகேஸ்வரி , ஓசலா, குமரச்செழியன் (நியூசிலாந்து) ஆகியோரின் மாமியும் மனோச், டினுபசங்கர்,அர்ஜீன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் லூசியா, கீர்த்திகா,சஞ்சுதன்,ஆகியோரின் அப்பம்மாவும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற சர்வேஸ்வரி,காலஞ்சென்ற சரவணபவன், ஆகியோரின் சகோதரியும் ஜான்சிராணி, அகிம்சைராணா, ரமணபாரதி, காலஞ்சென்ற திலகவதி மற்றும் கலாவதி, ஆரா அமுதன்,ஆனந்தி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், வினோதினி, சாந்தினி, குமுதினி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை நாளை (22.12.2016) வியாழக்கிழமை பி.ப 02.00 மணியளவில் இலங்கை பெந்தக் கொஸ்த சபை ,கிஸ்மன் லேன்,கென்ஷன் லேன் சாவகச்சேரியில் நடைபெற்று சாவகச்சேரி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**24,வீடமைப்புத்திட்டம்**
**மறவன்புலோ மேற்கு ,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**பிள்ளைகள்.**
**ஜீவமலர்(0776090958)**

## மரண அறிவித்தல்

# கந்தையா பாலசிங்கம்

**( பிரபல வர்த்தகர் மயிலூரன் திருமண மண்டப உரிமையாளர், நல்லூர் மணியம் திருமண சேவை)**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29.08.1938 | 20.12.2016 |

யாழ்.காரைநகர் விளானைப் பிறப்பிடமாகவும், யாழ். வீரமாகாளி அம்மன் வீதி, கொழும்பு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் (20.12.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் ஆனந்தலட்சுமி (ஆனந்தி) இன் கணவரும் மஞ்சுளா (அமெரிக்கா), மயிலூரன் (கனடா), சதிசா (லண்டன்), கலாஜினி (அமெரிக்கா), காலஞ்சென்ற கயேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராசா, கிருஷ்ணன் காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் தில்லையம் பலம், பூமணி, நாகேஸ்வரி, அற்புதம், யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, இராசையா மற்றும் சத்தியலட்சுமி, சிவபாக்கியலட்சமி, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகலனும் காலஞ்சென்ற ராஜாசெல்வன் மற்றும் அருந்தவராணி, சிறீஸ் கந்தராஜா, விஜயராஜா ஆகியோரின் மாமனாரும் மீனு, விஷ்னு, லட்சுமி, சிவதர்சன், சதீசன், சிந்து, சுகன்யா, இந்துயன், சகாரிக்கா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**ஆனந்தலட்சுமி - 0094 777 840 769, 0094 212 219 732,**
**மயிலூரன் - 0014 167251491,**
**சதீசா - 0208 782 1486, 075 4422 1[illegible], 077 [illegible],**
**கலாஜினி - 0019 172242349**

(ஜ/7040)(7.19.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சச்சிதானந்தர் சிவானந்தன்



யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தர் சிவானந்தன் (17.12.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் தவராணி யின் அன்புக்கணவரும் கலாமதி, ரவிசங்கர், ரவிமோகன், சுரேஷ், நிவேதினி, வத்சலா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவநிதி செல்வநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் சிவபாலசூரியர், சோபிதா, சித்திரா, ஷீலா, குகராஜன், ரட்ண குமார் ஆகியோரின் அன்பு மாமனும் பிருந்தா, சுஜீவன், கௌத்தம், நிர்மலா, நிக்சிதா, ராகுல், ராகவி, அஜய், ஷமித்திரா, சகானா, அடானா ஆகியோரின் அன்புப்பேரனும் கஷோன் றேகன் ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நோர்வேயில் OSLO வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(ஜே/7037)(17.19.20)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா தெட்சணாமூர்த்தி

ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெடுஞ்சாலைகள் திணைக்களம்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தெட்சணா மூர்த்தி நேற்று (20.12.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவுந்தரம் - செல்லையா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தளையசிங்கம் லீலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற றணீத்தாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசின்னம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் உடன் பிறவா சகோதரி நீலாம்பிகை, ஹரிராஜ், கீர்த்திக்கா, மயூரி(Confifi hotel suppliers. Ltd, Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேணு கோபனின் (கணினி போதனாசிரியர், யாழ். பல்கலைக் கழகம்) அன்பு மாமனாரும் திவ்யா(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), யதுவிகா(திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்) ஆகியோரின் பேரனும் இரவீந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற ரஞ்சன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.12.2016) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 50/2, சொர்ணகிரி,**
**கே. கே. எஸ் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**யாழ்ப்பாணம். 021 222 0974**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கட்டட ஒப்பந்தம்



நாங்கள் யாழ்ப்பாணத்தில் எல்லா வகையான கட்டுமானத்தையும் மேற்கொண்டு வருகின்றோம். தற்போது இருபாலையில் 100 வருடங்கள் பழைமையான வீடு ஒன்றினை மறுசீரமைப்பு செய்து கொண்டிருக்கின்றோம்.

தளஆய்விலிருந்து கட்டட வரைபடம் தயாரித்தல், B.O தயாரித்தல் வரைக்கும் ஒரு சதுர அடிக்கு 5000/= பெயரளவுப் பெறுமதிக்கு வழங்குகின்றோம்.

கட்டுமானத்திட்டங்கள் ஐந்து மாதத்துக்குள் பூர்த்தியாக்கி தரப்படும்.

மேலதிக தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

**Sign-o-Lite Engineering.**
**077 769 6312, 077 784 7550**

## மரண அறிவித்தல்கள்

### அந்திரேசு பத்திநாதர்



கல்வியங்காடு நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட 'கப்பல்மாமா' என அன்பாக அழைக்கப்படும் அந்திரேசு பத்திநாதர் நேற்றைய தினம் (20.12.2016) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்திரேசு மற்றும் தெய்வானை அருளம்மா தம்பதிகளின் ஒரே புதல்வனும் பிரான்சிஸ்கா ரோகினியின் பாசமிகு கணவரும் யூடித் றோயின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பாக்கியம், நேசம்மா, ஜெயசீலி, மணி, பிரான்சிஸ்கம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் மதிரெத்தினம் மற்றும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை(22.12.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதித் திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா (குருநகர்) சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முதலாவது தனியார் ஒழுங்கை,**
**புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**



தோற்றம் 02.12.1939 மறைவு 19.12.2016

### திருமதி விசாலாட்சிஅம்மா சிவசுப்பிரமணியஐயர்

கொழும்பை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மற்றும் கொழும்பு 13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சிஅம்மா சிவசுப்பிரமணியஐயர் (19.12.2016) தென்னாடுடையான் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமிஐயர் - லக்ஷ்மிஅம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சதாசிவக்குருக்கள் - இரத்தினம்மாள் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியஐயரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான லலிதாம்பிகை, சகுந்தலாதேவி மற்றும் சுசீலாதேவி ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீஸ்கந்தராஜா குருக்கள் (கோண்டாவில்) இன் அண்ணி யாரும் நிரஞ்சனா, ரவீந்திரக்குருக்கள் (இந்தியா), பிரிய தர்ஷினி (நல்லாயன் அ.த.ம.வி ஆசிரியர்), நளாயினி (Bahavan Travels) ஆகியோரின் அருமைத்தாயும் கிரீதர் (Magnum Invesment Limited), சித்கலாமாலினி, வெங்கட்ரமணி (Pyramid Air Service), சோமசுந்தரக்குருக்கள் (சம்மாங்கோடு பாபுசாமி) ஆகியோரின் அன்புமாமியும் சத்தியசூரி, வித்தியா சாகரன், நித்தியரூபன், விருஷாந்தன், லயவர்ஜிதா, கமலேஷ்வரக்குருக்கள் (வவுனியா), ஹம்ஸத்வனி, பிரஷாந்த சர்மா (Ramanathan Academy Of Fine Arts - Lecturer), அர்ப்பணா, வைத்திஸ்வரசர்மா (கனடா), சௌந்தர்யா ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 89, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13 இல் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 21.12.2016 புதன்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் மாதம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்**
**காளிகோயிலடி கோண்டாவில் மேற்கு,**
**யாழ்ப்பா[illegible]ம். 021 222 5647**

(ஜே/7034)(17.19.20)



### கணபதிப்பிள்ளை சிறீஸ்கந்தராஜா (சிறி)

**( உரிமையாளர் - குமரன் ஸ்ரோர்ஸ், காலி)**

புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், தக்கியா வீதி, காலியை வசிப்பிடம்காவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா (19.12.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - திலகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் தவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் பிரபாவின் பாசமிகுகணவரும் மிதுர்சிகன், மிதுர்சிகா ஆகியோரின் பாசமிகுதந்தையும் தயாபரன், அற்புதராஜா, பவானி, லலிதா, தேவநேசன், சிவநேசன், தயாழினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பலதா, சரஸ்வதி, யோகராஜா காலஞ்சென்ற சம்புலிங்கம் மற்றும் கௌரீஸ்வரி, பிரிய தர்சினி, பரணிதரன், பாமதி, காண்டீபன், ஜெகன் மோகன், ராகினி, வேற்செல்வன், கலையரசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் 118/6, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**118/6, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(ஜே/7032)(17.19.20)

### இளையதம்பி கதிர்காமத்தம்பி



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கெருடாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கதிர்காமத்தம்பி (19.12.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர் களான பொன்னுத் துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவஞ்ஞானத்தின் அன்புக்கணவரும் கதிர்காமதர்சன் (மோ), கதிர்காமசுதர்சன் (வினோ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள், மீரா ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுஷனா, விசாகினி, திருக்குமரன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கெருடாவில் தெற்கு,**
**தொண்டமனாறு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 2055 720**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேடம்:** பேச்சில் நிதானம் தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**இடபம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு முழுமையாகும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். சுப விடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** எதிர்பார்த்த சுப செய்தி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் பெற நேரிடலாம்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். பெண்கள் கணவரின் அன்பை பெறுவர். மாணவர்கள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.



**கன்னி:** குடும்ப விடயத்தை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர பொருள் வாங்குவர்.

**துலாம்:** குடும்பத்தினரின் அன்பைக் கண்டு நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** நல்லவர்களின் நட்பை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி சிறப்பாக நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** பொறுமையால் நன்மை அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர். அரசியல்வாதிகளுக்கு பதவி கிடைக்கும்.

**மகரம்:** எவருக்கும் தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடங்கல் குறுக்கிட வாய்ப்புண்டு. லாபம் சுமாராக இருக்கும். மனைவியின் செயற்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**மீனம்:** எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். குடும்பத்தினரின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

# பாடகரான அரவிந்தசாமி



ரோஜா புகழ் அரவிந்தசாமி இதுவரை, எந்தப் படத்திலும், பின்னணி பாடியதில்லை. ஆனால், சமீபகாலமாக நான் கடவுள் பட ராஜேந்திரன் போன்ற நடிகர்களே பாடி வருவதால், போகன் படத்தில் அரவிந்த சாமியையும் ஒரு பாடலை பாட வைத்துள்ளனர். இந்தப் பாடல் வெற்றியானால் விஜய், சிம்பு மற்றும் தனுஷ் பாணியில் அரவிந்தசாமியும் தொடர்ந்து தான் நடிக்கும் படங்களில் பின்னணிப் பாடகராக உள்ளார் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதுக்கு ரயில்வே ஸ்டேஷன்ல கையில காலி கிளாஸ் வச்சுக்கிட்டு நிக்கறீங்க



இப்போ மைக்ல சொன்னாங்களே... இன்னும் கொஞ்ச நேரத்துல "சரக்கு" ரயில் வரும் என்று

பஸ்ல ஏறி இருந்ததும் பாட்டு கேக்கலாம் என்று ஹெட்போனை எடுத்தா



அதிலை இருக்கிற சிக்கலை எடுத்து முடிக்கிறதுக்குள்ள இறங்கிட இடம் வந்துடுது

**கடவுள்:** பக்தா என்ன வரம் வேண்டும் கேள்?
**பக்தர்:** கடவுளே நான் சாப்பிடும் போதெல்லாம் கரண்டு போயிடனும்...
**கடவுள்:** ஏன் கரண்டு போகணும்
**பக்தர்:** என் பொண்டாட்டி கிட்ட சாப்பாடு கேட்டால் ... சீரியல் முடியட்டும் என்கிறாள்.

நாயைப் பற்றி நீ எழுதினது அப்படியே சதீஷைப் பாத்து காப்பி அடிச்சதுதானே? அப்படியே அவன் எழுதினா மாதிரியே இருக்கே!



இல்லை ரீச்சர்! அவன் எழுதின அதே நாயைப் பற்றித்தான் நானும் எழுதினேன்

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 4 | | 5 | 7 | | | |
| | | | 8 | | | | 4 | |
| | | | 1 | | 4 | | 7 | 8 |
| 9 | | | 6 | | | | 5 | |
| 4 | | 5 | | | | 6 | | 3 |
| | 8 | | | | 5 | | | 9 |
| 5 | 2 | | 4 | | 1 | | | |
| | 4 | | 5 | | 8 | | | |
| | | | 3 | 9 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 1 | 7 | 3 | 2 | 9 | 8 |
| 8 | 1 | 2 | 5 | 6 | 9 | 7 | 3 | 4 |
| 3 | 9 | 7 | 4 | 2 | 8 | 5 | 6 | 1 |
| 1 | 6 | 5 | 8 | 4 | 2 | 3 | 7 | 9 |
| 7 | 3 | 8 | 9 | 5 | 1 | 4 | 2 | 6 |
| 2 | 4 | 9 | 6 | 3 | 7 | 8 | 1 | 5 |
| 9 | 2 | 1 | 3 | 8 | 4 | 6 | 5 | 7 |
| 6 | 7 | 4 | 2 | 9 | 5 | 1 | 8 | 3 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 6 | 9 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதி கள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந் ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச்சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரக் கத்தரியும் அறிவியல் அநீதியும்!

'வரகரசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்' என்று ஔவைப் பிராட்டியார் குறிப்பிடுகின்ற வழுதுணங்காய் என்பது நாம் அன்றாடம் பயன்படுத்தும் கத்தரிக்காயே. இது பல்லாயிரம் ஆண்டுகளாக எமது மண்ணில் சுவைக்கப்படுகின்ற உணவுப் பொருள்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்த பாரம்பரியம் மிக்க கத்தரிக்காய்க்கு இப்போது ஆபத்து ஏற்பட்டுள்ளது. அதாவது மரபணு மாற்றம் என்ற பெயரில் கத்தரிக்காயின் மரபியல் கூறுகளில் மாற்றம் செய்து, அதை வணிகச்சிறையில் பூட்ட பன்னாட்டு வணிக நிறுவனங்கள் முனைந்துள்ளதாக ஆய்வுகள் தகவ லுரைத்துள்ளன.

கடந்து சென்ற நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த உயிரி யல் கோட்பாட்டை வழங்கிய வர்கள் டார்வினும் கிரிகர் மெண்டலும். அதேபோல இந்த நூற்றாண்டை ஆட்சி செய்யும் உயிரியல் கோட்பாட்டை வழங்கியவர்கள் கிரிக், வாட் சன் ஆகிய இருவராவர். இவர் கள் கண்டறிந்த மரபணு வினுடைய வடிவமான திருகுச் சுருள் வடிவம் மிகப் புகழ் பெற்றது. இதற்காக இவர்களுக்கு நோபல் பரிசும் கிடைத்தது. இவர்களது முதன்மையான மற்றொரு தேற்றம் உயிரின் மறைவிடம் டி.என்.ஏக்கள் என்பதும் அவற்றைக் கட்டமைப்பதன் மூலம் உயிரினங்களைத் தோற்றுவிக்க முடியும் என்பதுமாகும். இதன் அடிப்படையில் இன்று பல பில்லியன் டொலர்கள் புரளும் துறையாக உயிரிநுட்பவியல் துறை வளர்ந்துள்ளது. மாந்த இனத்தின் மரபீனிகளைத் தொகுக்கின்ற ஆய்வுத்துறையான மாந்தர் ஈனிமேனித் திட்டத்திற்கு 1980 ஆம் ஆண்டுகளிலேயே 3000 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

அந்த வகையிலே இன்று கணினித் துறையைவிட எதிர்காலம் மிகுந்த துறையாக மேற்படி உயிரிநுட்பவியல் துறை மாறி வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.



இதில் பன்னாட்டுக் கம்பனிகள் பல கோடி டொலர்களை தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றன. குறிப்பாக விவசாயத்துறையிலும், மருத்துவத் துறையிலும் இவர்களது ஆதிக்கம் பெருகி வருவதாகச் சொல்லப்படுகிறது. மீண்டும் முளைக்க இயலாத முடிவிப்புவிதைகளையும், விதைத்த விதை நன்கு வளர குறிப்பிட்ட வளர்ச்சி ஊக்கியை தெளித்தால்தான் வளர முடியும் என்ற அளவில் உள்ளுக்குள் குறிப்பிட்ட நஞ்சைப் பொதிந்து வைக்கும் மடிவிப்பு விதைகளையும் இன்று சந்தையில் புழக்கத்திற்கு விடுவதில் அவர்கள் மும்முரமாக உள்ளதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் வந்த மான் சாண்டோவின் பாசில்லஸ் துரிஞ்சியன்சஸ் பருத்தி விதைகளும், சின் ஜெண்டாவின் பொன்னரிசி விதைகளும் உலக அளவில் கடும் எதிர்ப்பைச் சந்தித்திருந்தன. பல்வேறு நாடுகளில் இப்படிப்பட்ட மரபீனி மாற்ற உணவுப் பொருள்களுக்கு தடை உள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடை விதிப்பதில் முனைப்பாக உள்ளன. ஆனால் அமெரிக்கா மரபீனி மாற்றப் பயிர்களை அதிகம் விளைவித்து வருகிறது. அங்குள்ள மக்களுக்கு அடையாளம் தெரிவதற்காக மரபீனி மாற்ற உணவு என்ற முத்திரை பதித்து விற்பனை செய்கிறது. ஆனாலும் அங்கு பல்வேறு அமைப்பினரும் இதை எதிர்த்துக் போராடி வருகின்றனர்.

ஆனால் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வில் எந்தக் கட்டுப்பாடுகளும் இன்றி மரபீனி மாற்ற மலட்டு விதைகளை விற்க வழிவகை செய்யப்பட்டுவருகிறது.

அந்தவகையிலே ஆசிய நாடுகளில் உயிரியல்பன்மயம் மிக்கவேளாண்மை மட்டுமல்லாது உணவுப் பழக்கங் களும் பன்மயம் மிக்கவை.

(27 ஆம் பக்கம் பார்க்க)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரக் கத்தரியும் அறிவியல் அந்தியும்!

(26 பக்கத் தொடர்ச்சி)

**உயிரிநுட்பவியல்**

உயிரியல் தொழில்நுட்பம் அல்லது உயிரி நுட்பவியல் என்ற அறிவியல்துறை இன்று மிகப் பெரிதாக வளர்ந்துள்ளது. பாலைத் தயிராக புளிக்க வைக்கும் எளிய நுட்பம் இதன் தொடக்க நிலையாகும். பாலை தயிராக மாற்றுபவை நொதிமம் எனப்படும் நுண்ணுயிர்கள். இவ்வாறு நுண்ணு யிரிகளைக் கொண்டு நடத்துவிக் கப்படும் தொழில்நுட் பத்திற்கு உயிரி நுட்பவியல் என்று பெயர். இதன் ஒரு பிரிவாக உருவானதே மரபீனிப் பொறியியல் எனப்படுகிறது. அதாவது உயிரிகளின் அடிப்படை மரபுக் கூறுகளான மரபீனிகளை மாற்றியமைத்து செயற்படுத்தும் தொழில்நுட்பம் என்பதே இதன்பொருள். இதன் மூலம் புதிய உயிரி னங்களை உருவாக்கிவிட்டதாக அறிவி யல்வாணர்கள் கூறுகின்றனர். ஒவ்வொரு உயிரினத்தின் அடிப்படை அலகாக செல் அமைந்துள்ளது. இந்த செல்களின் உள்ளேஉட்கருஎன்ற அமைப்பு உள்ளது.

இந்த உட்கருவில் குருமேனிகள் விரல் போன்ற பகுதிகள் காணப்படுகின்றன. இவைதாம் ஓர் உயிரினத்தின் உறுப்புக் கூறு அமைப்புகளை ஈன்று புறந்தருபவை. எடுத்துக்காட்டாக, ஆலமரத்தின் விதையில் இருந்து ஆலமரமே வரும். வேப்பமரம் வளராது. இதற்குக் காரணம் அவற்றில் அமைந்துள்ள மரபீனிகளின் ஒன்றுபட்ட அடுக்கு அமைப் பாகும். இந்த மரபீனிகள் மரபுக் கூறுகளை தொடர்ந்து தலைமுறை தலைமுறையாகக் கொண்டு செல்கின்றன. ஒருவரின் மூக்கு நீளமாக இருப்பதற்கு ஒரு மரபீனித் தொகுப்பு காரணமாக இருக்கும். ஒருவரின் தோல் கருப்பாக இருப்பதற்கு மற்றொரு மரபீனித் தொகுப்பு காரணமான இருக்கும். இப்படியாக பற்பல மரபீனித் தொகுப்புகள் இணைந்து ஓர் உயிரினத்தை உருவாக்குகின்றன. இயற்கையின் இந்த அடிப்படையான சூத்திரத்தை இன்றைய அறிவியல் உலகம் பிரித்தறியத் தொடங்கி விட்டது. அத்துடன் இந்தக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் திறனையும் பெற்றுவிட்டது..!


## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 . 06 . 1935

உதிர்வு 21 . 12 . 2001

**அமரர் மரியாம்பிள்ளை வைற்றஸ்**

(ஓய்வுபெற்ற உபதபால் அதிபர் – தாளையடி)

உம் நினைவில் நாம் என்றும்
எம் நினைவினிலே என்றும் நீங்கள்
உம் உடனே உறவுடன் நாங்கள்
தென்புடனே எம் வாழ்வுதனை – பண்புடனே
பாரினிலே சிறப்புத் தந்தீர்

எப்படியோ நீர் இன்னும்
எம்மோடு வாழ்கின்றீர்
இப்படியே உம் நினைவால்
எம் இதயம் தேய்கிறதே
அப்படியே என்றாலும்
ஆற்றுவதற்கு யார் வருவார்
பதினைந்து வருடங்கள்
பதை பதைத்து நிற்கின்றோம்
– உம் நினைவில்

உம் சேவை ஊக்கு
உதாரணம் ஒன்றே ஒன்று
உம் பெயர் சொல்ல
உறுதியுடன் நிமிர்ந்து நிற்கும்
தயாற்கந்தோர் தாளையடியில்

உம் உருவம் அன்பு அமைதி
எம் வழியும் அதுவேதான்
உமதான்மா இளைப்பாற
நாம் என்றும் இறைவனுடன்....

போயிட்டி, இளவாலை.

உயிரோடு மனையாள்,
உறவோடு – ஜெபா – (மகள்– சுவிஸ்),
மருமகள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



**சிவாஜி விந்துஜா**



பிறப்பு
11.02.2001

இறப்பு
02.12.2015

ஆண்டு ஒன்று ஆயினும் அன்பு முகம்
– மறக்கவில்லை
இன்றும் உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
நூண்டாமணி விளக்காய் ஒளி வீசி பிரகாசித்த நீ – இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் முதலாம் ஆண்டு திவசக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை இடைக்குறிச்சி மேற்கு வறணியில் உள்ள அன்னாரின் வீட்டில் நிகழவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: துரை குடும்பம்
(அம்மப்பா)
இடைக்குறிச்சி வறணி மேற்கு.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 29 . 09 . 1937

மறைவு 21 . 11 . 2016

கடந்த 21.11.2016 சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவி

திருமதி **தனலக்ஷ்மி(சறோஜினி ரீச்சர்)**
**நடராஜா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (21.12.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அந்நிகழ்விலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் குடும்பத்தலைவியின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்த மருத்துவர்கள், தாதிமார் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்
சு. மகேந்திரன் - சகோதரன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 . 03 . 1941

உதிர்வு 02 . 01 . 2016

**திருமதி மாணிக்கம் சின்னத்தம்பி**
*திதி. அட்டமி*

மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள் அவைவரும் போற்ற
வாழ்ந்து காட்டிய அன்னையே ! – நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ – ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில் சுடர்விடுக்
கொண்டிருக்கும் குலவிளக்கே! – அம்மா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் பிரியாது.

மாவடி வீதி,
அச்சுவேலி தெற்கு.

(ஜே. 6928) (13.18)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாஹறா மருத்துவ நிலையம்**

- எலும்பு மூட்டுக்களில் அதிக வேதனை யான வாதம், ஆஸ்மா, தீராத புண்கள், கைவிடப்பட்ட நோய், கெற்பநோய்.
- குழந்தை இன்மைக்கான - சிறப்பு சிகிச்சை

வங்கி முன்லேன், சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (செகபதி வீடு), மானிப்பாய்.
077 321 2740

**விற்பனைக்கு**

யாழ் பஸ்நிலையத்திற்கு முன்பாக இலங்கை வங்கிக்கும் HNB வங்கிக்கும் இடையில் வைத்தியசாலை வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும், யாழ் பஸ்நிலையத்திற்கு பின்புறம் மின்சார நிலைய வீதியில் சகல வசதிகளுடன் கூடிய 2 மாடிக் கடையும் உடன் விற்பனைக்குண்டு.


கனகசபை தர்மகுலசிங்கம்
NO- 189,191,193 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்

077 723 2535

# உலகில் உள்ள 18 ஆயிரம் பறவை இனங்கள்

உலகில் ஏறத்தாழ 18 ஆயிரம் பறவை இனங்கள் இருப்பதான தகவல் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதுவரை காலமும் ஒரே இனத் தைச் சேர்ந்தவை என்று கரு தப்பட்டு வந்த பல பறவைகள் தனி இனங் களைச் சார்ந்தவை என்பது மேற்படி ஆய்வுச் செயற்பாடு கள் மூலம் கண்டறியப்பட் டுள்ளது.



குறிப்பாக ஒரே தோற்ற முடைய பல பறவைகள் குறித்த இனத்தின் உட்பிரிவைச் சேர்ந்தவை என்று கருதப்பட் டுவந்த நிலையிலே தற்போது அவை தனி இனங்களைச் சேர்ந்தவை என அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இதன்படி உலகில் சுமார் 18,000 பறவை இனங் கள் இருப்பதாகக் கணக் கிடப்பட்டுள்ளது.

மேலும், தனி இனங் களையும் ஓர் இனத் தின் உட்பிரிவுகளையும் எவ்வாறு தரம் பிரித்து அறிய வேண்டும், அந் தந்த இனங்களைப் பாதுகாக்க என்ன நட வடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும் என் பது தொடர்பில் புதிய ஆய்வு முறைகளைப் பயன்படுத்தவேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பறவைகளின் உருவம், சிறகு களின் நிறம் ஆகியவற்றைப் பகுப்பாய்ந்து கொள்வதில் மாற்று வழிமுறைகளைப் பயன்படுத்த வேண் டும் என புதிய ஆய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவை தவிர அனைத்து பறவை இனங்களையும் பெருக்கம டையச் செய்யும் வகையில் இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடுகள் தொடர்பிலும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் நத்தார் மற்றும் புதுவருட தின வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**விற்பனைக்கு**

SAHANS FARM +

- 2Kg இற்கு மேற்பட்ட நிறையுள்ள ஊர்ச்சேவல்களை உடன் பெற்றுக் கொள்ளலாம்.
- BAIRAHA இறைச்சிக் கோழிக்குஞ்சு, ஊர்கோழிக்குஞ்சு மற்றும் வான் கோழிக்குஞ்சு என்பன விற்பனைக்குண்டு. தை மாதத்திலிருந்து ஓடருக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

Point Pedro Road, Nelliady Town. Nelliady
077 995 7700, 077 526 8702

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் இளைப்பாறிய உப அதிபரும், துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் திரு. ஆறுதிருமுருகன் அவர்களின் அன்புத் தாயாருமான

**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலைச் சமூகம்**

(C 27698) (22.1.8)

## யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து) ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் -2017

**காலம்: 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை**
**இடம்: கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்**
**தலைமை: திரு. செ. ஜெயக்குமார் அவர்கள் (சங்கத் தலைவர்)**

மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 05.02.2017 அன்று நடத்த தீர்மானித்திருப்பதனால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 05.01.2017 வியாழக்கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாக சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என அனுப்பி வைக்கவும் அத்துடன் அங்கத்தவர்கள் பிள்ளைகள் 2016 ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சை, பல்கலைக்கழக அனுமதி பெற்றிருப்பின் அவற்றின் விவரங்களினையும் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

செயலாளர்
க. செல்வச்சந்திரன்

## 29 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சீ.செல்லத்துரை**
(யாழ். போதனாவைத்தியசாலை மேற்பார்வையாளர்)



தாயக மண்ணில்
09.02.1937
அழிப்பு
21.12.1987

நிஜமாக நீங்கள் மறைந்து
இருபத்து ஒன்பது ஆண்டுகள் ஆனதோ
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து - தினம்தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்.
காலங்கள் ஓடிக் கடந்தாலும்
உங்களை எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூஜிப்போம்

"ஈஸ்வரி வாசம்"
[illegible]ம்பிராய் [illegible]

என்றும் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வராணி பாலசிங்கம்



தோற்றம் 22.11.1949 மறைவு 19.12.2016

ஏழாலை தெற்கு, மயிலங்காடு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி பாலசிங்கம் 19.12.2016 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதன் (கட்டட ஒப்பந்தக்காரர் J.P)- கனகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - ஐயம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாக்குட்டி பாலசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெகசுதன் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தெல்லிப்பழை), ஜெகதீபன் (பொறியியலாளர் UK) ஆகியோரின் பாசமிகு தாயும், சுகிந்தா (ஆசிரியை - யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமியும், பிரமிஜனின் பாசமிகு பேர்த்தியும், தெய்வேந்திரன் (இலங்கை - சிமெந்துக் கூட்டுத் தாபனம்), லோகேந்திரன் (பிரான்ஸ்), லோகராணி (பிரான்ஸ்), குணேந்திரன் (பிரான்ஸ்), ஜெயராணி (கனடா), ஜெயெந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பூரணம், மகேஸ்வரி, செல்லத்துரை மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சண்முகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு,
சுன்னாகம்.

தகவல்:
பா.ஜெகசுதன்
பா.ஜெகதீபன் (மக்கள்)

**021 205 9458/ 077 615 7166**

### கனகரத்தினம் விஜயகுமார்



பூநகரியைப் பிறப்பிடமாகவும், இல.24, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப் பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் விஜயகுமார் 19.12.2016 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் யோகம்மா தம்பதிகளின் புதல்வனும் நிசாந்தினியின் பாசமிகு கணவரும் நிருஜன் (யாழ். இந்துக்கல்லூரி), நிதர்ஷா (யாழ். இந்து மகளிர்கல்லூரி) வர்ஷா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மலிங்கம்- பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகனும் இரத்தினகுமார், புஸ்பலீலா, காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மினி (சுவிஸ்), மகாலஷ்மி (நோர்வே), மணிவண்ணன், விஜிந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல24, மணிக்கூட்டுஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவேந்தல்

மலர்வு 23 . 02 . 1951



உதிர்வு 07 . 11 . 2016

கடந்த 07.11.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
**வேலுப்பிள்ளை தெய்வவேற்பரமநாதன் (V.T)**
(ஓய்வு பெற்ற கிராமசேவையாளர் தலைமைப்பீட நிர்வாக உத்தியோகத்தர்.)

அவர்களின் 45 ஆம் நாள் நினைவேந்தலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (21.12.2016) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 709, சிவிக்சென்ரர்,
வட்டக்கச்சி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



திருமதி **விசாலாட்ச்சி சிவசுப்பிரமணியசர்மா**

தாவடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு, கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்ச்சி சிவசுப்பிரமணியசர்மா 19.12.2016 திங்கட்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணிய சர்மாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி ஐயர் - லக்ஷ்மி அம்மாள் தம்பதியரின் 2 ஆவது புத்திரியும், காலஞ்சென்றவர்களான பேராசிரியர் சதாசிவக் குருக்கள் - இரத்தினாம்பிகை தம்பதியரின் மருமகளும், நிரஞ்சனா, ரவீந்திரக்குருக்கள், பிரியதர்ஷினி, நளாயினி ஆகியோரின் அன்புத் தாயும், கிரிதரன், மாலினி, வெங்கட்ரமணனி, சோமசுந்தரக் குருக்கள் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (இல.89, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13) அவரது இல்லத்தில் இன்று (21.12.2016) புதன்கிழமை காலை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத வீதி,
கோண்டாவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ச.ஸ்ரீஸ்கந்தராஜ குருக்கள்
மைத்துனர்.
கோண்டாவில்.

(ஜே. 7012) (13.18.17)
**021 222 5647**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்...

"தோல்வியடைந்தாலும் பரவாயில்லை மீண்டும் ஆயுதம் ஏந்தினால் என்ன' என்று தமிழர்கள் இன்று சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்".

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் எதிர்நோக் கும் பிரச்சினைகள் அதிகம் உள்ளன. மொழி, கலாசாரம் என அவர்களுடன் தொடர்புபட்ட நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

அதுபோல், நாட்டு மக்கள் அனைவரும் பொதுவாக எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்நோக்குகின்றனர். இந்த இரண்டு வகையான பிரச்சினைகளுக்கும் நாம் உடனடியாகத் தீர்வை முன்வைக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கு அரசமைப்பு ரீதியாக மாத்திரம்தான் தீர்வை முன்வைக்கை முடியும் என்று கூறப்படுவதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அதையும் தாண்டி நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக, அனல் மின் நிலையம் அமைப்பதற்காகச் சம்பூரில் ஆரம்பத்தில் நிலம் ஒதுக்கப்பட்டது. பின்னர், இந்த அரசு ஆட் சிக்கு வந்ததும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால், அந்த நிலம் அப்படியே இருக்கின்றது. மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அங்கு சென்று தமிழ் இளைஞர்கள் சிலரைச் சந்தித்து உரையாடினேன். போர் முடிந்து தமிழர்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமை குறித்து அவர்கள் கடும் மனவேதனையில் உள்ளனர். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மீண்டும் ஆயுதம் ஏந்துவோமா என்ற மனநிலையில் அவர்கள் இருப்பதை அறிந்தேன். ஆயுதம் ஏந்தித் தோல்வியடைந்தாலும் பரவாயில்லை என்று அவர்கள் நினைக்கின்றனர்.

ஓர் இளைஞனுடன் பேசும்போது அவர் இவ்வாறு சொன்னார். ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கான வாய்ப்பு இனி இல்லை என்றபோதிலும் தமிழ் இளைஞர்களுள் அதிகமானவர்கள் இவ்வாறுதான் நினைக்கின்றனர். ஆனால், மீண்டும் அவ்வாறானதொரு நிலமை ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பம்.

தங்களில் வாழ்விடம் சம்பந்தமாக, தொழில் சம்பந்தமாக இவர்கள் கடும் பாதிப்பை எதிர்நோக்கினர். பாதிக்கப்பட்ட மக்களின் வேதனை இவ்வாறுதான் இப்போது வெளிவருகின்றது. தோற்றாலும் பரவாயில்லை ஆயுதம் ஏந்துவோம் என்று அவர்கள் சிந்திக்கின்றார்கள் என்றால் நாங்கள் அவர்களின் பிரச்சினையின் ஆழத்தை அறியவேண்டும். உடனடியாகத் தீர்வை முன்வைக்கவேண்டும்.

ஆயுதப் போராட்டம் தொடர்பில் நாம் ஆழமான அனுபவத்தைப் பெற்றிருக்கின்றோம். அதன் பாதிப்பு எங்களுக்குத் தெரியும். நாம் இதை உணர்ந்து செயற்படவேண்டும் - என்றார். (த-4)

## சிறப்பு...

நிலையையும் எமது கட்சி கடுமையாக எதிர்க்கின்றது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளின் ஒப்புதலுடன் அபிவிருத்தி சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு எதிர்பார்த்துள்ள நிலையில் உத்தேச திட்டத்துக்கு மாகாண் முதலமைச்சர்களும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் - அதில் கைபோட வழிவகுக்கும் எந்தவொரு சட்டவரைவையும் மாகாண சபைகள் ஆதரிக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே முதலமைச்சர்கள் இருந்து வருகின்றனர்.

மேற்படி சட்டவரைவு குறித்து அவர்களுக்கு விளக்கமளித்து ஆதரவைப் பெறும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. இதன்படி மாகாண முதல்வர்களுடன் பிரதமர் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு முன்னர் மாகாண முதல்வர்கள் ஒன்றுகூடி மேற்படி சட்டவரைவு சம்பந்தமாக ஆராயவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

வலய அடிப்படையில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்குத் தேசிய மட்டத்தில் தனியான சபையொன்றையும், அதன்கீழ் வருகின்ற விடயதானங்களைக் கையாள்வதற்குச் சிறப்பு அமைச்சர் ஒருவரையும் உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாக இருக்கின்றது.

தெற்கு, வடமேல், மத்திய, கிழக்கு, வடக்கு ஆகிய அபிவிருத்திச் சபைகள் உருவாக்கப்படும். இதன்படி, தெற்கு அபிவிருத்திச் சபையில் காலி, மாத்தறை அம்பாந்தோட்டை, மொனராகலை, இரத்தினபுரி ஆகிய நிர்வாக மாவட்டங்கள் உள்ளடங்கும். புத்தளம், குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்கள் வடமேல் மாகாண அபிவிருத்திச் சபைக்கு உரித்தாக்குவதுடன், மாத்தளை, நுவரெலியா , பதுளை ஆகிய மாவட்டங்கள் மத்திய அபிவிருத்தி சபைக்கு உள்வாங்கப்படுகின்றன.

அநுராதபுரம், பொலனறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு , அம்பாறை ஆகிய மாவட்டங்கள் கிழக்கு அபிவிருத்திச் சபைக்குள் வரும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் வடக்கு அபிவிருத்திச் சபையில் அடங்குகின்றன.

இந்த நிலையில், சிறப்பு அமைச்சருக்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் தொடர்பிலேயே கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

ஜனாதிபதியையும் சட்டரீதியாகச் சவாலுக்குட்படுத்தும் வகையில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த நிலையில், அதிகாரங்கள் குவியும் சிறப்பு அமைச்சு எதற்கு? என்று அரசியல் நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சிறப்பு அமைச்சு உருவாக்கப்பட்டால் ஏனைய அமைச்சுகளின் அதிகாரங்கள் சிதறடிக்கப்படலாம். குறித்த அமைச்சால் நியமிக்கப்படும் 6 பேரடங்கிய சபையின் கீழ் நிதி, பொருளாதார அதிகாரங்கள் வந்து குவியலாம்.

வருடத்துக்கு ஒரு தடவையே அதிகாரிகளை ஜனாதிபதி சந்திக்க முடியும். அதிகார சபைகளுக்கு வழக்குத் தாக்கல் செய்ய முடியாததும் பாதகமான நிலை. இதன் ஊடாக நிதி அமைச்சரும் கைப்பாவையாகலாம் என்றார் ஜனாதிபதி சட்டத்தரணி கோமின் தயாசிறி.

இந்த நிலையில், மேற்படி சட்டவரைவானது மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற கருத்தும் நிலவுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில் முதலமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மாகாண விடயதானங்களிலும் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய தொடர்புடைய சட்டவரைவை கொழும்பு அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதானால் அதற்கு மாகாண சபைகளின் ஒப்புதல் அவசியமாகும். இதற்கு உதாரணமாக திவிநெகும (வாழ்வின் எழுச்சி ) சட்டவரைவைக் குறிப்பிடலாம்.

ஜே.வி.பி., மகிந்த அணி ஆகியனவும் குறித்த சட்டவரைவை எதிர்த்துள்ளன. அரச பங்காளிக் கட்சியாகவுள்ள சு.க. எதிர்த்துள்ளதால் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதில் அரசுக்குச் சிக்கல் நிலை உருவாகும். எதிர்ப்புகள் வலுப்பதால் திருத்தங்களை மேற்கொள்வதா அல்லது மீளப்பெறுவதா என்ற விடயத்தில் ஐ.தே.க. மதில் மேல் பூனையாக இருந்து வருகின்றது. (த-4)

## சோதிடரின்...

ஆவணங்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்ததன் மூலம் இது உண்மைக்குப் புறம்பானது என்று கண்ட றியப்பட்டுள்ளது.

சமூக இணையத்தளத்தின் மூலம் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுவரும் இந்தக் காணொலி தொடர்பாக ஆழமாக ஆராய்ந்தால் இதன் உள்நோக்கத்தை நாம் கண்டறியமுடியும். 2016 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிருடன் இருக்கமாட்டார் என்று சோதிடர் ரோஹண விஜேமுனி அனுமானம் வெளியிட்டிருந்தார். இந்தச் சோதிடர் முன்னர் கடற்படைச் சிப்பாயாக இருந்தவர் என்பதுடன் 1987 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மீது தாக்குதல் நடத்தியவர்-என்றார். (த-4)

## வெடிபொருள்...

தெரிவித் தனர். வவுனியாவில் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினமிரவு அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் சிறப்புச் சோதனை நடவடிக்கை யில் ஈடுபட்டிருக்கும்போது குறித்த வெடி பொருள்கள் மீட்கப்பட்டன. பொலிசாரால் ஜெக் னேற்றர் - 199, ஜெக் னேற்றர் தொப்பி - 200, 10 மீற்றர் நீளமான வயர் றோல் - 5 மற்றும் பயணப்பை - 2 என் பன மீட்கப்பட்டதுடன் முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## எவ்.சி.ஐ.டி....

அதன் ஆயுள்காலம் சம்பந்தமாக நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை யில் நேற்று அமைச்சரவை கூடியது. இதன்போது சமகால அரசியல் நிலவரங்கள் பற்றியும், அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

அதன் பின்னர், பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரிப்பதற்குத் தனியானதொரு நீதிமன்றப் பொறிமுறையொன்று அவசியமென வலியுறுத்திக் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது 15 அமைச்சர்களின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை குறித்தும் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

ஆனால், அது பற்றி இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், அடுத்த அமைச் சரவைக் கூட்டத்திலேயே அது பற்றி ஆராயப்படலாம் என்றும் அறியமுடிகிறது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் 2015 பெப்ரவரி 26 ஆம் திகதி பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு அமைக்கப்பட்டது.

நிதி மோசடிகள் சம்பந்தமாக இந்தக் குழுவுக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்தன. இதன் பிரகாரம் விசாரணைகளை நடத்திய நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் முக்கிய அரசியல்வாதிகள் சிலரைக் கைதுசெய்தும் உள்ளனர்.

பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவின் இந்தச் செயற்பாட்டுக்கு மகிந்த அணியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அது கலைக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினர். அதேபோல் மைத்திரி அணியிலுள்ள சிலரும் அந்தப் பிரிவின் மீது விமர்சனங்களை முன்வைத்தனர்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அதன் நிகழ்ச்சி நிரல் குறித்துச் சந்தேகம் வெளியிட்டார். இது இலங்கை அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவின் பதவிக் காலம் கடந்த ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தாலும் பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் டிசெம்பர் வரை அதற்குக் காலநீடிப்பு வழங்கப்பட்டது. அதன் ஆயுள்காலம் குறித்து தற்போது ஆராயப்படுகின்றது. (த-4)

## சம்பந்தனின்...

உறுப்பினரான பிமல் ரத்னாயக்க தெரிவித்தார். புதிய அரசமைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சில கருத்து முரண் பாடுகள் காணப்படுவதாகவும் அவர் கூறினார். பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி. பி. தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு தொடர்பில் கூட்டமைப்பு பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகின்றது. ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. எனினும் இவை அரசியல் மேடைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்களே. இவை குறித்து அரசமைப்புப் பேரவையிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு கருத்தையும் கூறவில்லை.

அத்தோடு மறுபுறத்தில் வடக்கு முதல்வரான சி.வி. விக்னேஸ்வரன் சமஷ்டி தான் வேண்டும் என்று கூறிவருகிறார். ஆனால் சமஷ்டி வேண்டும் என்று சம்பந்தனோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ எந்தவொரு கருத்தையும் கூறவில்லை. அதிகாரப் பகிர்வு என்பது அரசமைப்பின் ஊடாகப் பகிரப்படுமே ஒழிய வெறும் பேச்சுக்களால் அதனைப் பெற்றுவிட முடியாது.

எவ்வாறாயினும் புதிய அரசமைப்பானது பொது வாக்கெடுப்பின் ஊடாகவே நிறைவேற்றப்படும் என்று சம்பந்தன் கூறியுள்ள விடயத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதுவே சிறந்த ஜனநாயகம் - என்றார். (த-4)

## ஊழல்...

இவ்வாறு அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. இதில் தலைமைச் செயலர் அலுவலகத்தின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நடைபெற்றது.

'வடக்கு மாகாண நெல்சிப் திட்டத்தில் நடைபெற்ற ஊழல் தொடர்பில் தலைமைச் செயலரினால் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. அந்த அறிக்கை எமக்குத் தரப்படவில்லை. மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் நாங்கள். ஆனால் எங்களுக்கு அந்த அறிக்கை தரப்படவில்லை. நெல்சிப் ஊழலில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நீண்ட தாமதமாகின்றது. குற்றச்சாட்டுக்குள்ளாகிய ஒருவர் வெளிநாட்டுக்குத் தப்பியோடியுள்ளார்' என்று வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், நெல்சிப் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஒருவர் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்குத் தலைமைச் செயலர் எவ்வாறு அனுமதி வழங்கியுள்ளார்? ஏனையோருக்குத் தண்டனை வழங்கப்படவில்லை. அவர்கள் பதவிகளில் தொடர்கின்றனர் - என்றார்.

இந்த விடயத்தில் விசாரணை முற்றுப் பெறவில்லை. ஏற்கனவே விசாரணை அறிக்கை பெரிய நிதி மோசடி விசாரணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விவகாரத்தை இங்கு இப்போது பேசுவது முறையல்ல என்று ஆளும் கட்சி உறுப்பினர் இ. ஆனோல்ட் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் குறிப்பிடுகையில், நெல்சிப் ஊழல் குற்றச்சாட்டுக்குரிய நபர் வெளிநாட்டுக்கு, தலைமைச் செயலரின் அனுமதியைப் பெற்றுச் செல்லவில்லை. அவர் இணையத் தளத்தின் ஊடாகப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பித்துச் சென்றுள்ளார். இதனால் அவருக்கு எதிராக, அவர் சென்றுள்ள நாட்டுத் தூதரகத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவர் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவர் என்பதால், பொது நிர்வாகத் திணைக்களத்தின் ஊடாகவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வேலையிலிருந்து இடைநிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (த-5)

## முற்றுப்பெறாத...

வடக்கு மாகாண சபையின் அடுத்த நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதம் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமானது. உறுப்பினர்களின் புறக்கணிப்பு, ஒதுக்கீடு அதிகரிப்பு கோரிக்கையைத் தொடர்ந்து நேற்றுவரை சபை ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்றைய தினம், வடக்கு மாகாண தலைமைச் செயலர் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் விவசாய அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, தலைமைச் செயலர் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் முதலமைச்சர் அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. முதலமைச்சர் அமைச்சு மீதான விவாதம் நேற்றைய தினம் சபை ஒத்திவைக்கப்படும் வரையில் நிறைவு பெறவில்லை. பெரும்பாலான உறுப்பினர்கள் முதலமைச்சரின் அமைச்சின் பேசுவதற்குக் கோரியதன் காரணமாக இன்று வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இதேவேளை, முதலமைச்சர் கொழும்புக்குச் சென்றமையினால் நேற்று உரிய நேரத்துக்கு அவர் சமுகமளிக்க முடியாமல் போகலாம் எனக் கருதியே, விவசாய அமைச்சு மீதான விவாதத்தை முதலில் எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டதாக அவைத் தலைவர் குறிப்பிட்டார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றது ஐக்கியம்

கரணவாய், டிசெ. 21

குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்னார் ஜோசவாஸ் நகர் ஐக்கிய அணி வெற்றிபெற்றது.

குறிஞ்சிக் குமரனின் மைதானத்தில் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மன்னார் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதின. 6:0 என்ற கோல் கணக்கில் ஐக்கியம் வெற்றிபெற்றது. ஜோன்சன், டிசில் இருவரும் தலா மூன்று கோல்களைப் பதிவுசெய்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் சென். மேரிஸ் சார்பில் ஜக்சனும் யங்ஹென்றிஸின் சார்பில் பயஸும் தலா ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலை கண்டது. (ம-108)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், டிசெ. 21

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

## ஞானமுருகன் வி.கழக காலிறுதிகள் ஆரம்பம்

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை முதல் நடைபெறவுள்ளன.

காலை 8 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதி ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகமும் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. தொடர்ந்து 9 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகமும் நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23)



அனித்தாவின் சாதனைப் பாய்ச்சல்

# வடக்கின் நட்சத்திரமாகத் தெரிவானார் அனித்தா

### வர்ண இரவில் இன்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 21

வடக்கின் நட்சத்திரமாக அனித்தா தெரிவாகியுள்ள நிலையில் அவர் இன்று நடைபெறும் வர்ண இரவு நிகழ்வில் வைத்து குறித்த விருதைப் பெறுகிறார்.

சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபத்தில் இன்று மாலை 3 மணியளவில் வடமாகாணத்தின் நடப்பு வருடத்துக்கான வர்ண இரவு நிகழ்வு நடைபெறவுள்ளது. வடமாகாண விளையாட்டுத்துறை மற்றும் கல்வித் திணைக்களம் ஆகியவை இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

வடக்கின் நட்சத்திரமானார் அனித்தா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி ஜெ.அனித்தா, அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கோலூன்றிப் பாய்தலில் 3.41 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தேசியச் சாதனையாளராக வலம்வருகிறார். இதைவிட 100 மீற்றர் தடைதாண்டல், கோலூன்றிப் பாய்தல் ஆகியவற்றிலும் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தினார். இதனால் நடப்பு வருடத்தின் வடக்கின் நட்சத்திரம் என்ற அந்தஸ்தை அவர் தட்டிச் செல்கிறார்.

அனித்தாவை விட, வவுனியா மாவட்டத்தின் நுவான் குமார, சி.என்.புத்திக்க இந்திரபால, கே.நவநீதன், ஜெ.டபிள்யூ.குமார ஆகியோரும், யாழ். மாவட்டத்தின் வி.அகிசா, கே.சரிசனுஜா, பி.கிருத்திகா, ஆர்.பிரவிந்த், எஸ்.ஞானறுபன், கே.நெப்தலி ஜொய்சன் ஆகியோரும் மன்னார் மாவட்டத்தின் எஸ்.கொர்வின், வி.ஆர்.ஜெ.எடிசன் ஆகியோரும் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்களை விட மாகாணமட்டப் போட்டிகளில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய வீராங்கனைகளுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன. (ம-23)

## மேசைப்பந்தாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், டிசெ. 21

இலங்கை அரச சேவைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான மேசைப்பந்தாட்ட முடிவுகள்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நேற்றுமுன்தினம் போட்டிகள் நடைபெற்றன. ஆண்களுக்கான ஏ பிரிவு ஆட்டத்தில் கண்டி மாநகர சபை சம்பியன் கிண்ணத்தையும் சுங்க திணைக்களம் வெள்ளி பதக்கத்தையும் கைப்பற்றின.

பி பிரிவினருக்கான ஆட்டத்தில் இலங்கை பொலிஸ் திணைக்களம் சம்பியன் கிண்ணத்தையும் யாழ். கல்வித் திணைக்களம் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றின.

சி பிரிவினருக்கான ஆட்டத்தில் இலங்கை சுங்கத் திணைக்களம் சம்பியன் கிண்ணத்தையும் கண்டி மா நகர சபை வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றின.

டி பிரிவினருக்கான ஆட்டத்தில் தபால் திணைக்களம் சம்பியன் கிண்ணத்தையும் இலங்கை கல்வி திணைக்களம் வெள்ளி பதக்கத்தையும் கைப்பற்றின.

பெண்கள் பிரிவில் ஏ பிரிவினருக்கான ஆட்டத்தில் இலங்கை சுங்கத்திணைக்களம் சம்பியன் கிண்ணத்தையும் கொழும்பு மாநகர சபை வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றின. பி பிரிவினருக்கான ஆட்டத்தில் இலங்கை புகையிரத திணைக்களம் சம்பியன் கிண்ணத்தையும் இலங்கை சுங்கத் திணைக்களம் வெள்ளி பதக்கத்தையும் கைப்பற்றின. (ம-422)

## மலிங்கவுக்கு 7.5 கோடி



மும்பை இந்தியன்ஸ் அணி அடுத்த ஐ.பி.எல். தொடருக்கான அணியில் மலிங்கவை தக்கவைத்துள்ள நிலையில் அவருக்கு கொடுக்கப்படவுள்ள ஊதியம் தொடர்பான விவரத்தை வெளியிட்டுள்ளது.

அணியின் முக்கிய வீரர்களில் ஒருவராகத் தெரிவிக்கப்பட்டு மலிங்க தக்கவைக்கப்பட்டுள்ளார். அவருக்கு இந்திய மதிப்பில் 7.5 கோடிகள் வழங்கப்படவுள்ளன. காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த ஐ.பி.எல். தொடரில் மலிங்க விளையாடவில்லை. இதனால் அவரை அந்த அணி விடுவிக்கும் என்ற கருத்துக்களும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பரபரப்பாக வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆதிசக்தி, சென். நீக்கிலஸ் அணிகள் மனோகராவின் தொடரில் வென்றன

கரணவாய், டிசெ. 21

மனோகராவின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆதிசக்தி, சென். நீக்கிலஸ் அணிகள் வெற்றிபெற்றன.

குறித்த கழகத்தின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் ஆதிசக்தியின் முதல் கோலைப் பதிவுசெய்தார் நாகேந்திரம். வேறெந்த மாற்றங்களும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் மாற்றங்கள் ஏற்படாத நிலையில் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி அணி வெற்றிபெற்றது.



தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாவது பாதியின் 48 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ உதவியுடன் கோலொன்றைப் பதிவுசெய்து வெற்றிபெற்றது சென். நீக்கிலஸ். (ம-108)

## யாழ். மாவட்ட கரப்பந்தாட்டத்தில் இறுதிக்குத் தகுதிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம் டிசெ21

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச்சங்கம் நடத்தும் தொடர்களின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

அரியாலை சரஸ்வதி சனமூக நிலைய மைதானத்திலேயே இறுதியாட்டங்கள் நடைபெறவுள்ளன. மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோப்பாய் ஹரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான பி பிரிவு இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஏ பிரிவு இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## கருண் நாயருக்கு மோடி வாழ்த்து

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்ட் ஆட்டத்தில் முச்சதம் விளாசிய கருண் நாயருக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்தைத் தெரிவித்தார். இங்கிலாந்துக்குக்கு எதிரான தொடரிலேயே கருண் அறிமுகமானார். தனது முதல் சதத்தை அவர் முச்சதமாக மாற்றினார். இதனையடுத்தே மோடியின் வாழ்த்து அவருக்குக் கிடைத்துள்ளது.

வரலாற்று முச்சதம் அடித்த உங்களுக்கு வாழ்த்துக்கள். உங்களது சாதனையால் நாங்கள் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறோம் என மோடி தனது வாழ்த்துக் குறிப்பில் கூறியிருந்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபிக்கின் சதத்தால் தோற்றாலும் திருப்தி

## மிக்கி ஆர்தர் தெரிவித்தார்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்த போதிலும் சபிக்கின் இன்னிங்ஸும், பாகிஸ்தானின் போராட்டமும் திருப்தி தருகிறது என்று அந்த அணியின் பயிற்சியாளரான மிக்கி ஆர்தர் தெரிவித்தார்.
ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடி சகல இலக்குகளையும் இழந்து 429 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் 142 ஓட்டங்களையே பெற்றது. ஆஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸிற்காக 5 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஆஸ்திரேலியாவுக்கு இலக்காக 490 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. பாகிஸ்தான் சரணடையும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அந்த அணி 450 ஓட்டங்களைக் குவித்துப் போராடியது. சபிக் சதம் கடந்தார். இதையடுத்தே மிக்கி ஆர்தர் இவ்வாறு தெரிவித்தார்.
பாகிஸ்தானின் முதல் இன்னிங்ஸ் மோசமாக அமைந்தது. முதல் இன்னிங்ஸில் பின்னடைவு ஏற்பட்டது. இந்த பின்னடைவிலிருந்து மீண்டு, மீண்டும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தியமை பாராட்டத் தக்கது. குறிப்பாக சபிக்கின் சதம் அபாரமாக அமைந்தது என ஆர்தர் மேலும் தெரிவித்தார். (ம)



# ஜடேயா இலக்குகளை அள்ள சுருட்டித் தள்ளப்பட்டது இங்கி.

## இறுதி நாளில் முடிந்த கதை

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 4:0 என்று கைப்பற்றியது இந்திய அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 477 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக மொயின் அலி 146 ஓட்டங்களையும், ரூட் 88 ஓட்டங்களையும், டவ்சன் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ஜடேயா 3 இலக்குகளையும், யாதவ், இசாந் சர்மா இருவரும் தலா இரு இலக்குகளையும், அஸ்வின், மிஸ்ரா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு கருண் நாயரின் முச்சதம் வலுச்சேர்க்க 759-7 என்ற நிலையில் இருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தப்பட்டது. அதிகபட்சமாக கருண் நாயர் ஆட்டமிழக்காமல் 303 ஓட்டங்களையும், லோகேஸ் ராகுல் 199 ஓட்டங்களையும். அஸ்வின் 67 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் புரோட், டவ்சன் இருவரும் தலா 2 இலக்குகளையும், மொயின் அலி, ஸ்ரோக்ஸ், ரசிட் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 282 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து நான்காம் நாளின் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 12 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான குக், ஜென்னிங்ஸ் இருவரும் நேற்றும் சிறந்த ஆட்டத்தை வழங்கினர். இணைப்பாட்டம் மிகவும் வலுவாக அமைந்தது. உணவு இடைவேளை வரை இலக்குகள் சரிக்கப்படவில்லை. அணி 103 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது குக்கை வீழ்த்தினார் ஜடேயா. இந்தத் தொடரில் ஜடேயாவிடம் குக் சிக்குவது இது 6ஆவது தடவை. ஜடேயாவின் சுழல் நன்கு எடுபட்டது. ஜென்னிங்ஸ், ரூட், மொயின் அலி போன்ற முன்வரிசை வீரர்கள் அவரால் ஆட்டமிழந்தனர். படிப்படியாக பதற்றத்தை உணர்ந்தது இங்கிலாந்து. மத்திய வரிசையையும் நிலைகுலையச் செய்து 7 இலக்குகளைச் சாய்த்தார் ஜடேயா. நாள் முடிய 9 பந்துப் பரிமாற்றங்கள் மீதமிருந்த நிலையில் 207 ஓட்டங்களுடன் இங்கிலாந்துக்கு முடிவு கட்டப்பட்டது. இன்னிங்ஸாலும் 75 ஓட்டங்களாலும் வென்றது இந்தியா. (ம)

# கொடுமையான தெரிவால் இரட்டைச்சதம் தவறியது

## ராகுல் புலம்பல்

தனது இரட்டைச்சதம் தவறியமைக்கு தான் எடுத்த மோசமான தெரிவே காரணம் என்று இந்திய அணியின் இளம் வீரர் லோகேஸ் ராகுல் தெரிவித்தார்.
இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது டெஸ்ட் சென்னையில் நேற்று முடிவுக்கு வந்தது. இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸிற்காக 477 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து 372 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் லோகேஸ் ராகுல் 199 ஓட்டங்களுடன் ரசிட்டின் சுழல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். குறித்த இன்னிங்ஸ் தொடர்பாக நேற்றுமுன்தினம் கருத்துத்தெரிவிக்கையிலேயே ராகுல் இவ்வாறு தெரிவித்தார்.
199 ஓட்டங்களில் நான் அதிக பதற்றத்தை உணர்ந்தேன். ரசிட் உட்திரும்பல் தன்மையுள்ள பந்தை வீசுவார் என்று எதிர்பார்திருந்தேன். ஆனால் அவர் மாறுதலாகச் சிந்தித்தார். எனக்கு வீசிய பந்து மிக இலகுவானது. இலகுவாகக் கணிக்கக்கூடியது. ஆனால் அந்த நேரப் பதற்றம் காரணமான தேவையற்ற விதத்தில் பந்தை துடுப்புக்கு எடுத்து ஆட்டமிழந்தேன் என ராகுல் மேலும் தெரிவித்தார். (ம)





# அதிகளவான வீரர்களை வெளியேற்றியது புனே

அடுத்த வருட ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஒவ்வொரு அணிகளும் தாம் விடுவித்த வீரர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டுள்ளன. புனே அணி அதிகளவான வீரர்களை வெளியேற்றியது. ஒவ்வொரு அணிகளும்வெளியேற்றிய வீரர்கள் விவரம்.
*றைசிங் பூனே சுப்பர் ஜெயின்ட்ஸ்:* கெவின் பீற்றர்சன், இசாந்த் சர்மா, இர்பான் பதான், திசர பெரேரா, ஆர்.பி.சிங், ஸ்கொட் போலன்ட், முருகன் அஸ்வின், பீற்றர் ஹான்ட்ஸ்கொம், சௌரவ் திவாரி, அல்பி மோர்க்கல், ஜோர்ஜ் பெய்லி.
*குஜராத் லயன்ஸ்:* டேல் ஸ்ரெய்ன், பராஸ் டோக்ரா, எக்லவ்வியா திவிவேடி, சரப்ஜிட் லட்டா, பிரவீன் தம்பே, உமங்க் சர்மா, அமித் மிஸ்ரா, அக்சதீப் நத்.
*கிங்ஸ் லெவின் பஞ்சாப்:* மிச்செல் ஜோன்சன், றிசி தவான், கைல் அபொட், பர்ஹான் பெஹர்டியன்.
*கொல்கத்தா நைட் றைடர்ஸ்:* மோர்னி மோர்க்கல், பிரட் ஹொக், ஜேஸன் கோல்டர், கொலின் முன்ரோ, ஜோன் ஹஸ்டிங்ஸ், ஜெய்தேவ் உனத்கட், ஆர்.சதீஸ், மனன் சர்மா, சோன் றைட்.
*மும்பை இந்தியன்ஸ்:* கொரே அண்டர்சன், மேர்ச்சன்ட் டீ லாங்க, உன்முக்ட் சந்த், அக்சய் வகாரே, நது சிங், கிசோர் கமத், குப்தில், ரெய்லர்.
*டெல்லி:* நாதன் கட்டர் நைல், இம்ரான் தாகிர், ஜோயல் பரிஸ், பவான் நெகி, பவான் சுயல், அகில் ஹேர்வத்கர், மஹிபால் லொம்ரோர்.
*றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்:* வருண் ஆரோன், அபு நெச்சிம், டேவிட் வியஸ், கேன் றிச்சட்சன், விக்ரம்ஜீட் மலிக், பிரவீன் டுபே, அக்சய் கார்னேவர், விகாஸ் டோகாஸ், பர்வேஸ் றசூல், கிறிஸ் ஜோர்தான்.
*சண் றைசர்ஸ் ஹைதராபாத்:* கரண் சர்மா, ஆசிஸ் ரெட்டி, மோர்கன், போல்ட், டி.சுமன், ஆதித்திய தாரே. (ம)

# அஸ்பன்யோலை வென்றது பார்சிலோனா



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்றுவரும் பழமை மிகுந்த லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா வெற்றிபெற்றது. பார்சிலோனாவை எதிர்த்து அஸ்பன்யோல் மோதியது. ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் சுவாரஸ் பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 42 ஆவது நிமிடத்தில் சுவாரஸ் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய 2:0 என்று பார்சிலோனாவின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. ஆட்டத்தின் [illegible] ஆவது நிமிடத்தில் [illegible] ஜோலின் கோல் பதிவானது. 68 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸியிடமிருந்து பந்தைப் பெற்ற அல்பா பார்சிலோனாவின் கோல் கணக்கை மூன்றாக உயர்த்தினார். ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் மெஸ்ஸி பிறிதொரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றி பெற்றது.
இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் லா லிகா புள்ளிகள் தரவரிசையில் 34 புள்ளிகளைப் பெற்றுள்ள பார்சிலோனா, முதலிடத்தில்லுள்ள ரியல் மட்ரிட்டை விட மூன்று புள்ளிகள் குறைவாகவுள்ளது. றியல் மட்ரிட், பார்சிலோனாவை விட ஒரு ஆட்டம் குறைவாக விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST.ANTONY'S

18ஆவது வருட அகவையை முன்னிட்டு
வரும் நத்தார் புதுவருட
விசேட விலைக்கழிவில்

## மாபெரும் கணினி விற்பனை

**HP BRANDED PC 6th Gen**
400 GB i3
500 GB HDD
4 GB RAM
DVD Super Multi
19" LED HP Monitor
HP Key Board
HP Mouse
PRICE ~~72990/=~~ 69990/=

**HP LAPTOP 6th Gen**
HP i3 6 100 u
1000 GB HDD
4 GB RAM
DVD Super Multi
156" LED Display
WEB CAMARA
Wifi Etc.,
PRICE ~~65990/=~~ 59990/=

**ASUS PC ASSEMBLE 6th Gen**
AS i3
500 GB
4 GB RAM
DVD Wr AS
19" Mon LED AS
Keyboard
Mouse
PRICE ~~63990/=~~ 59990/=

Free H.Phone, 4GB PEN, BAG.

Three Years Comprehensive Warranty 3 வருட உத்தரவாதம்

hp Canon acer ASUS SAMSUNG EPSON dcp Etc.,
Dealers in Northern Province
No.187, K.K.S. Road, Jaffna.
T.P:- 021 222 4865 / 075 069 8608 Fax :- 021 221 6892

# SCIENCE CORNER A/L 2019

## கணித, விஞ்ஞான பிரிவுகள்

ஆரம்பம் - 23.12.2016 வெள்ளி - காலை 9.00 மணி

| | | |
|---|---|---|
| Chemistry | - | திரு. க. சுபீசன்<br>திரு. த. லக்ஷன் |
| Biology | - | திரு. S.நித்தியானந்தன்<br>திரு. D.A ஜக்ஷன் |
| Physics | - | திரு. ம.ஸ்பெல்மன்<br>திரு. கருணாநிதி<br>திரு. A.கபில்தாஸ் |
| Com.Maths | - | திரு.பா.மயூரன் |

நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 611 6724

*A/L - 2017 - Day Class நடைபெறுகின்றன
*A/L - 2017, 2018 வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(அ/70285) (7.19.20)

### வீடு வாடகைக்கு

நான்கு அறைகளும் தனித்தனியான குளியல் அறையுடன் கூடிய புதிய அழகான வீடு பொற்பதி வீதி. கொக்குவில் கிழக்கில் வாடகைக்கு உண்டு. மாதாந்த வாடகை ரூ 22 000/= எதிர்பார்க்கப்படுகிறது.
071 040 8301

### வேலை வாய்ப்பு

கணினி விற்பனை நிறுவனத்திற்கு (Software/ Hardware) வேலை தெரிந்த ஆட்கள் தேவை.
Apple Computer Networks,
Navalar Road. T.P : 077 248 7234

# FRENCH LANGUAGE CENTRE

FOR THE BEST FRENCH FOREVER

## பிரெஞ்சு மொழி வகுப்பு

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர்க்கான...
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007.
DELF A1, A2,B1 இல் 100 % சித்தி. இதுவரை 1173 மாணவர்கள்
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 09.01.17 திங்கள் 3.30pm.
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

## காணவில்லை

நல்லூர்,பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தை சேர்ந்த இ.ஜெயசுந்தரசேகர் (பஞ்சலிங்கம் ) என்பவரது கோயில் மாடு காணவில்லை .18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல். அடையாளம் சிகப்பு பெரிய பசு பட்டி பார்த்த கொம்பு ,மடியில் சிறிய வெள்ளை ,பெரிய மடி இனம் ,ஜெசி சைவால் 4 மாத கண்டுத்தாச்சி,சிறிய கன்று உள்ளது. பால் மாடு. கழுத்தில் பட்டு சங்கு உள்ளது. தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு.0775302627
கோயில் நிர்வாகம். 0770055397

## PHYSICS


PERSONAL CLASS
A/L - 2019
ஆரம்பம் - 23.12.2016
வெள்ளி மாலை 5 மணி
ஆசிரியர் - திரு.ம.ஸ்பெல்மன்
இடம் - 10/10 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில் அருகில் நியூடெக் முன்பாக)

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்
வரதர் வெளியீடு நிறுவன சாதனையாளர்
"சாகித்ய இரத்தினம்"

## தி.ச.வரதராசன் (வரதர்) அவர்களின்

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 07 . 1924



உதிர்வு 21 . 12 . 2006

பத்து வருடங்களாயிற்று பாசத்தைப் பதுக்கி வைத்து
நித்தம் வரும் நினைவுகள் நீறாகிப் பூத்திருக்க உந்தன்
புத்தகங்களைப் பார்த்தாலோ, நெஞ்சு பூகம்பமாய்
பொங்கிவிடும்
சத்தமில்லா அழுகையில்தான் சாதனை நாம் செய்திட்டோம்

யாழ்ப்பாணம். பிள்ளைகள்

# NEW SCIENCE WORLD

## CHEMISTRY-2019(A/L) New syllabus

த. சிவகுமார் B.Sc, PGDE

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 23.12.2016 (வெள்ளி 9.00 AM)
மாதாந்த தொடர் போட்டிப்பரீட்சை, கடந்த கால வினா-விடை வகுப்புக்கள் Theory உடன் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 11 . 1997



மறைவு 19 . 12 . 2016

### செல்வன் சிவகுமார் சுவர்ணன்

(ஹாட்லி உ.த மாணவன் கணிதப்பிரிவு)

தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவகுமார் சுவர்ணன் (19.12.2016) திங்கட்கிழமை அகாலமரணம் அடைந்து விட்டார்.

அன்னார் சிவகுமார் -சந்திரவதனா(ஆசிரியைJ/புலோலிG.T.M) ஆகியோரின் அன்பு புதல்வனும் கோபிநாத் , கௌசிகன், சிறிதுவாரகா, கீர்த்திகா(J/மெதடிஸ்த பெண்கள் உ/த பாடசாலை)ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரதிவதனா, சுபவதனா ஆகியோரின் பெறாமகனும் காலஞ் சென்ற கருணமூர்த்தியின் மாமனும் காலஞ்சென்ற வரதராஜன் மற்றும் தவராசா ஆகியோரின் சிறிய தந்தையும் கணபதிப்பிள்ளை , சந்திரமணிஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) புதன்கிழமை பி.ப 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல் தகனக்கிரியைக்காக கோரையடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை மேற்கு.
தகவல்
குடும்பத்தினர். 0776628637

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.